


# சில்லையூர் செல்வராசன் கவிதைகள்

தொகுதி - 1

# சில்லையூர்
# செல்வராசன் கவிதைகள்



தான்தோன்றிக் கவிராயர்
என்ற தம் புனை பெயருக்குக்
கவிஞர் பயன்படுத்திய
கூடார்த்தச் சித்திரம்

சில்லையூர் செல்வராசன் கவிதைகள்

★ பதிப்புரிமை : கமலினி செல்வராசன்
9, இறக்சுவி லேன்
கொழும்பு – 4
இலங்கை

முதலாம் பதிப்பு – 1997

அச்சுப் பதிப்பு : யுனி ஆர்ட்ஸ்

விலை : 200 ரூபா.

பதிப்பகம் : அதிசயன் பதிப்பகம்

தொகுப்பு : கமலினி செல்வராசன்

**SILLAIYOOR SELVARAJAN KAVITHAIKAL**
*(An Anthology of Selected Poems)*

★ **Kamalini Selvarajan**
9, Ransivi Lane
Colombo - 4
Sri Lanka

First Edition : 1997

Printed by : Unit Arts (Pvt) Ltd.

Publishers : Athisayan Pathippakam

Price : 200/-

Complied by : Kamalini Selvarajan

# உள்ளுறை

தொகுப்பாளர் உரை

| | பக்கம் |
|---|---|
| தமிழுக்கு வாழ்த்து | 01 |
| தற்பாயிரம் | 02 |
| கடவுள் ஆகவேண்டும் | 03 |
| **பாவாரம்** | |
| கலைமகள் பாவாரம் | 06 |
| விபுலானந்தர் பாவாரம் | 09 |
| நாவலர் பாவாரம் | 15 |
| **கவியரங்கப்பாடல்** | |
| யாழ்ப்பாணச் சாமி | 20 |
| **தேசபக்திப் பாடல்கள்** | |
| பண்டைய கீர்த்தி மண்டிய நாடு | 24 |
| சரித்திரம் எனும் வீணையின் தந்தியை மீட்டுவோம் | 25 |
| குடியரசானது ஈழம் | 25 |
| தாய் நாடு போற்றுவோம் | 26 |
| அன்னை இலங்கை | 27 |
| சட்ட விரோதம் | 28 |
| பொருள்வளம் பெருக்கிடுவோம் | 28 |
| நானோர் இலங்கையன் | 30 |
| மீனவ சங்கற்பம் | 31 |
| சமாதானத் தூதுவன் | 32 |
| இலங்கை பற்றி ஓர் அங்கதக் கவிதை | 33 |
| **புலவன் மனங்கவர்ந்த பொன்னாடுகள்** | |
| புலவன் மனங்கவர்ந்த பொன்னாடு | 36 |
| மாட்சி பெற்றிலங்கும் கியூபா | 40 |
| கார் நிறத்துப் பூ பொலிந்து காங்கோ இனித்தழைக்கும் | 43 |
| **அகம் - புறம்** | |
| அசைவிலார் | 47 |
| விருந்தோம்பல் | 47 |
| வார்த்தை பத்தில் வாழ்க்கைத் தத்துவம் | 47 |
| மகளும் மகனும் | 48 |
| புரட்சி - காதல் ! | 49 |

உயிர் மூச்சு 49
மயக்கம் 49
அன்புத்தளை 50
தெய்வசித்தம் 50
ரயில் விடு தூது 50
வாணி தா மூன்று வரம் ! 52
சங்கெடுத்து ஊது தமிழ்ச்சாதி பெருஞ்சாதி ! 56
இன்றுலக நனவெல்லாம் சென்றவரின் கனவன்றே ! 58
'அசுணப்பறவை' அல்லது 'நான்' 58
மனிதனுக்கு..... 59
முதலுதவி 59
தடுமாற்றம் 59
எதிர்பாராதவை 59
மேல் அவனே ! 60
மீட்சி விண்ணப்பம் 60
சிவ தாண்டவம் 60
மானப் பொற்கலைஞனாய் எனை ஏன் படைத்தனை ? 61
தெரியாதவன் 61
வெளியேறு 61
முகில் விடுதூது 63
ஒரு முதல் இரவு 64
புதிர் 65
வித்துவம் 65
புதிய பிள்ளைப் பாட்டு 66
எயிட்ஸ் தோம் தரிகிட 67
பயணத்தை நிறுத்தமாட்டோம் ! 68
ஒரு வியட்னாம் தியாகிக்கு வீரவணக்கம் 69
நாளைய தமிழருக்கு 73

அங்கதம்
கொம்பிளிமென்ற் ஒண்டு குடு ! 82
ஐம்பெருங்கண்டங்கள் 85
புது வருஷ சங்கற்பம் 86
பரிசு கேட்டம்மானை ! 89
வழக்காறொழிந்த வார்த்தை வராதெனக்கு ! 92

கவிஞனின் தத்துவம்
உண்மை 96
மார்க்கசீலன் 97
ஒருநாட்டுப் புறத்தானின் வெற்றிலைத் தத்துவம் 98
வரப்புயர்ந்த பின்னாலே 98
இருசம கோடுகள் இணையும் 101

**பெண்மை**

ஐயா, மஹாகவி ! 104
அணுவின் இரகசியம் 105
அகலிகை சாபம் 107
சிதை ஏறிய சீதையே பேசு 114
கற்பு 116

**இசைப்பாடல்கள்**

வாழ்க ! வாழ்க தொழிலாளி ! 120
நான் எதிர்பார்க்கின்ற நற்குணநாயகி 121
போர்த்தேங்காய்ப்பாட்டு 122
ஆசை என்னும் ஆமை 123
மனப்பொருத்தம் 123
ஒரு வழிப்பாதை 124
வானத்து அமரன் வந்தான் காண் 125
நடன சிவ நவரச ஸ்லோகம் 127
சாந்த சொரூபன் 129
தாலாட்டு 130

**பரிவும் பிரிவும்**

கந்தனுடன் உள்ளம் கலந்த சுவைக் கணங்கள் 132
மணியத்துக்கு எந்தன் மாக்சீய வந்தனங்கள் 137
பிரிவு 140
ஆய்வறிவின் தலைமகனுக்கு அஞ்சலி 145

**பண்இடையிட்ட பாநடைச்சித்திரம்**

காசப்பர் கதை 150

**உருவகக் கவிதை**

பஸ்மாஸ்திரம் 160

**நெடும் பா**

சிலுவையில் அறையுண்ட முழுநிலா 164

**மொழி பெயர்ப்புப் பாடல்கள்**

பண்டமாற்று 176
சாதனையில் தோய்கின்ற தைரியத்தைக் கற்போமே 177
உதரப் பொந்தில் உயிர்க்கும் மகவுக்கு 178
வந்திக்கத் தக்க ஒரு மானிடன் 186

**படவிளக்கங்கள்**

# தொகுப்பாளர் உரை

நேற்றுத்தான் போல் என் நினைவில் தெரிகிறது....! சில்லையூரார் கவிபாடக் கேட்டதும்; என் இளமனதில் அவர் உருவம் எழிலாய் வந்தமர்ந்ததுவும்; தமிழ் வித்துவப் பரம்பரையில் நான் பிறந்து வந்த காரணத்தால் தழிழார்வம் கனன்ற என் நெஞ்சிலே, என் தந்தை 'சில்லையூரார்' பற்றியும் அவர் பல் துறைத்திறமைகள் பற்றியும் புகழ்ந்துரைக்கும் வார்த்தைகள் கல்லின்மேல் எழுத்தாய்ப் படிந்ததுவும்; அவர் பால் என் மனம் கொண்ட பெருமதிப்பு படிப்படியாய்ப் பாசமாய், நேசமாய்க் காதலாய் மலர்ந்ததுவும்; அதன் காரணமாய் இரத்த உறவுகளை உலகத்தைத் தாமெதிர்த்து அவரோடு நான் கலந்த கணமெல்லாம் நேற்றுத்தான் போலிருக்கிறது.

தன் தந்தை சில்லையூராரின் மறைவுக்காக வந்திருந்த மூத்தமகன் திலீபன் 'ஐயாவுக்கு கல்லறை ஒன்று கட்ட முடிந்தால்....' என்று என்னிடம் அங்கலாய்த்துச் சொன்னான். சில்லையூராரின் இழப்பின் பேரிடிக்குள் இருந்த என் மனதில் அந்த வார்த்தைகள் பதிந்தாலும் அந்தக் கணத்தில் அது என் கருத்தில் பதியவில்லை. எல்லோரும் தம் வழியே போக, நான் மட்டும் என் நினைவுகளோடு விடப்பட்ட ஒருநாள் சில்லையூராரின் 'ஊரடங்கப் பாடல்கள்' கவிதைத் தொகுப்பைப் புரட்டினேன். 'என் கல்லறை வாசகம்' என்ற கவிதை என் கண்ணில் பட்டது.

"வேட்டைக்கு வந்தான் ஓர்வில்வீரன்; மாந்தர்மன
வேட்டைக்கு வந்தான்; தன்வில் எடுத்துச் சொல்தொடுத்துப்
பாட்டை விடுத்திந்தப் பாரோர் மனங்கவர்ந்து
காட்டை அடைந்தான்; தன் கடமை முடித் தோய்கின்றான் !"

'கல்லறை' என்பது சிறு கனற்பொறியாய் என்னுள் விழுந்தது. அதேநாள், கவிஞர் கங்கை வேணியன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, 'அம்மா கனத்தையில் சிங்களக் கலைஞர்களுக்கு ஞாபகச் சின்னம் அமைப்பது போல சில்லையூராருக்கும் அமைக்க வேண்டும். நான் மாநகர முதல்வர் கே. கணேசலிங்கம் அவர்களோடு கதைத்து விட்டேன். நீங்கள் தொடர்பு கொண்டு அதற்கான நிலத்தை விலைக்கு வாங்கி விடுங்கள்" என்றார். இது தற்செயல் நிகழ்ச்சியா அல்லது இரு மனப்பதிவா? திகைத்தேன் ! முன்னாள் மாநகர முதல்வர் கே. கணேசலிங்கம் சில்லையூராரின் ரசிகர் என்பதையும், சில்லையூராரிடம் தனியான மதிப்பு வைத்திருந்தார் என்பதையும் அதன் பின்னரே அறிந்தேன். ஒரு மாதத்துக்குள் அதாவது 1995 நவம்பர் மாதத்துக்குள்ளேயே மாநகரசபையினர் அனுமதியுடன் மயானத்தில் நிலம்

வாங்கி விட்டேன். கல்லறை ஒன்றையமைத்துச் சில்லையூராரின் கல்லறை வாசகத்தை மூன்று மொழிகளிலும் பொறிக்க வேண்டுமென்பதுவே என் அவா. கவிஞர் கங்கை வேணியனோ கண்ணதாசன் மன்றத்தால் சிலை வைக்க வேண்டும் என்றார். பின்போ, இரண்டும் கலந்த கல்லறைச் சிற்பமாக 'மூலமாதிரி' ஒன்றைப் பலரிடமும் 'மாதிரி'கள் பெற்று ஒன்றிணைத்து ஒரு 'மாதிரிக் கல்லறை'யைத் தாளில் அமைத்துக் கொண்டேன். கங்கைவேணியன் ஐயாவுக்கும் அது சம்மதம். புல்லுமலை நல்லைரத்தினம் அவர்கள் சிற்பச் சிலையை உருவாக்கினார். சில்லையூராரின் முதலாண்டு மறைவுநாளில் (14.10.1996) பெருஞ்செலவில் அமைந்த அந்தக் கல்லறைச் சிற்பம் மாநகர முதல்வர் கே. கணேசலிங்கம் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. பாரிய செலவின் பளு என்மேல் முற்றிலும் விழுந்து விடாமல், தானே முன்னின்று தனி ஒருவனாய்த் தன் உடல் நலம் குன்றியபோதும், தளராது தொடர்ந்து, சொன்னபடி சில்லையூராரின் முதலாண்டு மறைவு தினத்தில் சிற்பத்தை நிறுவிய கவிஞர் கங்கை வேணியன் ஐயாவையும், அவர், கவிஞர் சில்லையூர் செல்வராசனிடம் கொண்டிருக்கும் மாபெரும் பக்தியையும் எண்ணும் போது என் நெஞ்சம் கனிகிறது.

முன்பு நடந்தவை எல்லாம் நேற்றுத்தான் போல என் நினைவில் தெரிகிறது.

சில்லையூராரின் கவிதைக்கு இப்படித் தொகுப்புரை எழுத நேருமென்று எப்போதும் நான் நினைத்ததில்லை. அவருடைய படைப்புகளை நூல்வடிவில் காணவும், அவர் பெயர் இவ்வுலகில் நின்று நிலைக்க வேண்டும் என்றும் நான்தான் ஏங்குவேன். அவரோ வித்தியாசமானவர். இருக்கும்போதே தன்னைப் புகழ்பாட வேண்டுமென்றோ அல்லது இறந்த பின்னரும் தன் பெயர் வாழவேண்டுமென்றோ எண்ணி, அவர் எதையுமே செய்ததில்லை. அதனால், அவர் புத்தகம் போடுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. 'வல்லது வாழும்' என்பார்.

"இறந்ததன் பின்னால் என்னை
எண்ணி ஓர் நிமிடம் தன்னை
மறந்திரு துளிநீர் கண்ணில்
மல்கி "ஆம், மனிதச் சாதி
சிறந்திடக் கிரியை, வாக்கு
சிந்தையால் உழைப்பதற்கு
மறந்திலன் என்றும்" என்றோர்
மானிடன் நினைத்தாற் போதும்!

....... என்ற தன் கவிதையைச் சொல்வார். இந்தக் கவிதை அவர் இறந்து, இறுதிக்கிரியைகள் நடைபெறும்வரை என் நினைவில் சுழன்று சுழன்று வந்தது. நாட்டுத் தலைவர்கள் முதல், சகல துறைகளிலும் சம்பந்தப்பட்ட பலரும், வேற்று மொழியினரும் தெருச் சுத்தம் செய்யும் மாநகர சபைத் தொழிலாளரும் வந்து அவருக்கு அஞ்சலி செய்தார்கள். 1995 ஒக்டோபர் மாதம் 15, 16, 17, 18 ம் நாள்கள் நான்கிலும், அஞ்சலி செய்ய வந்தோருக்கு நான் கைகூப்பி வணக்கம் தெரிவித்தே களைத்துப் போய்விட்டேன். சில்லையூரார் கவிதை வாழும்!

சில்லையூரார் இருக்கும்போதே, அவர் கவிதைகளை நூல்வடிவவில் காண ஆசை கொண்டு, சில்லையூராரைக் காண வருவோருடன் நான் ஆதங்கப்படுவதுண்டு. முதலில், காவலூர் எஸ். குகநாதன் (பரீஸ் 'ஈழநாடு' ஆசிரியர்) கவிதை நூலொன்றைத் தாமே தம் செலவில் வெளியிட முன் வந்தார். சில்லையூராரோ கவிதைகளைத் தொகுத்துத் தருவதாயில்லை. கட்டுக் கோப்பாகக் கனகண்ணா (ஆர். கனகரட்ணம்) கட்டித் தந்திருந்த கைஏட்டிலே எழுதியிருந்த 'ஊரடங்கப் பாடல்கள்' என் பிடிவாதத்தால் எஸ். குகநாதன் மூலம் அச்சாகியது. என் உடன்பிறவாச் சகோதரன் போன்ற குகனுக்கு நன்றியை நான் எப்படிச் சொல்வேன்! கட்டுக் கட்டாகக் கவிதைப் பொதிகளையும், மற்றும் ஆக்கங்களையும் கண்டு, இவை எப்போது அச்சாகும் என்று நான்தான் புலம்புவதுண்டு. நாள்தோறும் சில்லையூராரைக் காணப் பலர் வருவார்கள். கவிஞர் டொக்டர் ஜின்னா ஷெரிபுத்தீன் தன் அச்சகத்தில் ஒரு நூலை அச்சேற்றித் தர முன்வந்தார். சில்லையூராரோ வாய் திறக்க மாட்டார். நூலாகும் செலவை யாரிடமும் பொறிக்க விரும்பவில்லை அவர். நான் அப்போதும், 'சேக்ஸ்பியர் ஒரு ஜீவ நதி' என்ற கட்டுரையையும் ரோமியோ ஜுலியற் என்ற கவிதை நாடகத்தையும் சேர்த்து நூலாக்க வற்புறுத்தினேன். நூல் அச்சாகிய செலவுகளை, ஆண்டு ஒன்றுக்குள்ளே, கவிஞர் ஜின்னா ஷெரிபுத்தீன் அவர்களுக்குக் கொடுத்து முடித்த பின்னர்தான் சில்லையூரார் முகத்தில் தெளிவைக் கண்டேன். அது வரை அவர் மனம்பட்ட பாட்டை நான் அறிவேன். நிம்மதியாய் மலர்ந்த அவர் முகம் நேற்றுத்தான் போல் என் நினைவில் தெரிகிறது. 'சில்லையூர் நினைவுக் கட்டுரை'யில் முதுபெரும் எழுத்தாளர் வரதர் அவர்கள் குறிப்பிட்டது போல அது கவிஞனின் முகம்; கருணைமுகமாய், தீமைகள் புன்மைகள் கண்டால் தீயாய்ச் சுட்டெரிக்கும் கோபச் சுடர் முகமாய், 'இவர் என்ன செய்தார்' என்று எவர் சொலினும் முகம் கறுக்காத சாந்த முகமாய்.., கண்ணெதிரே தன் படைப்பையே வேறொருவர் சொந்தம் கொண்டாடும் போது, கொடுப்புக்குள் சிரிக்கும் கோல முகமாய், 'அன்பு' என்று போலியாகக் கூட யார் சொன்னாலும், சொன்னவருக்காக அப்படி நடிப்பவருக்காகக் கூட அடிமையாகி அவருக்காக எதையும் செய்யும் குழந்தை முகமாய் அதே நேரம் தீர்க்க தரிசனமாக ஒவ்வொன்றையும் தீரமாய் ஆய்ந்து சொல்லும்போது

அறிவுச் சுடர் முகமாய் நான் ரசித்த முகம் இன்று கானலாய்த் தெரிகிறது. நடந்தெல்லாமே நேற்றுத் தான் போல் என் நினைவில் தெரிகிறது.

நான் சின்னவளாய் இருக்கையிலே கேட்ட மேடைகளிலே ஒலித்துக் காற்றையும் வசங்கொண்ட அவர் கவிக்குரலையும் என்றென்றும் என்னோடு வைத்திருக்க ஏங்கி, என் நினைப்பை, எங்கள் வீடு வந்த கே. எஸ். பாலச்சந்திரன் அண்ணாவுக்குச் சொன்னேன். அவரும், பரா அண்ணாவும் (எஸ். கே. பரராஜசிங்கம்) காவலூர் அண்ணாவும் (காவலூர் ராசதுரை) ஹமீட் அண்ணாவும் (பி. எச். அப்துல் ஹமீட்) செயற்படுத்தி, சில்லையூராரை வலிந்திழுத்துக் 'கவிதைச் சிமிழ்' ஒலிநாடாவை உருவாக்கினர்.

இப்போது, சில்லையூராரின் படைப்புகளை வெளிக் கொண்டு வருவதெல்லாம் என் பொறுப்பே என்றாகியும் விட்டது. சில்லையூராரின் நெறிப்படுத்தல் இருந்தால் கனகச்சிதமாக நூல் உருவாகும். அவருக்கு மயிரிழை அளவிலும் பிழை-பிசகு வருவது பிடிக்காது. அப்படியான நேர்த்தியையே எதிலும் எதிர்ப்பார்ப்பார். 'ஊரடங்கப் பாடல்கள்' நூலில் பல அச்சுப்பிழைகள் வந்தது அவரை மிகவும் வாட்டியது. குறையெதையும் எங்கே கண்டாலும் அதைச் 'சமாளித்து'ப் போவது என்பது அவருக்கு இயலாது.

நான் வேண்டுவதெல்லாம் அவர் படைப்புகள் எழுத்து, சொல், பொருள் பிறழாமல் வெளியாக வேண்டுமென்பதே. என் சிற்றறிவுக்கேற்பத் தொகுப்பது இந்நூல். அச்சுப்பிழை பார்க்கும்போது, எனக்கு 'அந்தக் கவிதையையும் அல்லது இந்தக் கவிதையையும் சேர்த்திருக்கலாமோ என்று அங்கலாய்ப்பும் ஏற்பட்டது'. சில்லையூரார் எழுதிய சிறுவர் பாடல்கள் இதில் சேர்க்கப்படவில்லை. ஒலிநாடா கவிதைச் சிமிழில் வந்த சில முக்கிய கவிதைகளை நான் இதிலே சேர்க்க விரும்பியபோது அவற்றை விடுத்து, அதில் இடம்பெறாத கவிதைகளையே சேர்க்கும்படி சில்லையூராரின் நண்பர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். எனினும், அதிலும் ஓரிரண்டு கவிதைகள் தேவை எனப்படவே மீண்டும் இணைத்தேன். 'அகலிகை சாபம்' பெண்ணின் மனப்பிரச்சினை, மனச்சிதைவு என்பவற்றைக் காட்டுவதோடு, தன்னை வன்முறைப்படுத்தியோரை அகலிகை சபிப்பதாக அமைவதால் அதனைப் 'பெண்மை' என்ற பிரிவிலே சேர்த்தேன்.

இவை தவிர, இன்னும் அச்சில் வெளிவராத பல தனிக்கவிதைகள், வில்லுப்பாட்டுகள், கவியரங்கக் கவிதைகள், இசைப்பாடல்கள், சிறுவர் பாடல்கள், கதைகள், மொழி பெயர்ப்புக் கதைகள், துப்பறியும் கதைகள், வானொலிச் சித்திரங்கள், நாட்டிய நாடகங்கள் போன்றன உள்ளன.

அடுத்தடுத்த தொகுப்பிலே இணைக்க வேண்டும் என்பது என் பேரவா. எதிர்காலத்தில் இத்தனையையும் என்னால் செய்தல் ஆகுமா?

இந்தத் தொகுப்புக்காக நான் ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோது, சில்லையூராரின் நட்புக்கும் அன்புக்கும் பாத்திரமான பலரை இடையிடையே சந்தித்தேன். ஓர் இலக்கிய கூட்டத்தில் சந்தித்த பொ. ராமநாதன் ஒரு தகவலை ஞாபகப்படுத்தினார். சில்லையூராரோடு எனக்குத் தொடர்பு ஏற்பட முன்னர் நிகழ்ந்தது அது. காலிமுகத் திடலருகே சில்லையூரார் தனியறையில் தனிமையில் இருந்தகாலம். குடும்பம் யாழ்ப்பாணத்தில். யாழ்ப்பாணம் அவர் சென்றிருந்த வேளை கொழும்பில் மழை பெய்து, சில்லையூரார் இருந்த அறையிலும் வெள்ளம் நிறைந்து விட்டது. மூன்று நாள் கழித்து வந்து அறையத் திறந்தால் வெள்ளத்துள் மூழ்கிய பல கையெழுத்துப் பிரதிகள் கையில் எடுக்க முடியாத நிலையில் இருந்ததாம். எனவே, அந்த வெள்ளத்துள் அழிந்த கவிதைப் படைப்புகள் நூல்கள் எவ்வளவு என்பதும் தெரியவில்லை. இவை ராமநாதன் அவர்கள் எனக்குத் தந்த தகவல்கள்.

எழுதவென்று சில்லையூரார் தலைப்பிட்டுக் குறிப்புகள் எழுதிவைத்திருப்பவை பற்பல. எழுதவேண்டுமென்று வாயால் அவ்வப்போது சொன்ன சுவைக்களஞ்சியங்களோ ஏராளம்.

"நெல்லரிசி விட்டு வெறும் நெற்பதரைச் சோறாக்கிக்
கொண்டிருக்கும் எங்கள் குறுமதி சூழ் கூட்டத்தார்க்கு
எண்டிசையும் போற்றவல்ல எண்ணங்கள் ஏற்காதென்று
எண்ணியே யிந்தளவே எடுத்துப் படைத்துத் தன்
எண்ணக் கலத்துள்ளே எத்தனையோ அற்புதங்கள்
கொண்டு சென்றான் சில்லை! அவன் கூடக் கலந்து அறிவு

மண்டும் அரிய மதி விருந்து சாப்பிட்ட
நூற்றுக் கணக்கான நொடிகள் - சுவைக் கணங்கள்
நேற்றுத்தான் போல் என் நினைவில் தெரிகிறது ......!

என்முன்னே விரியும் எதிர்காலமும் தெரிகிறது. என்றாலும் மனம் ஏனோ நேற்றைக்கே போகிறது. நடந்தவைகள் எல்லாமே, நேற்றுத்தான் போல் என் நினைவில் தெரிகிறது.... !

*கமலினி செல்வராசன்*
*9, இறன்சுவி லேன்*
*கொழும்பு - 04*
*தொலைபேசி: 583969*

# நன்றிகள்

சில்லையூராரின் கவிதைத் தொகுப்பு ஒன்றினைத் தொகுக்கும்படி என்னை ஓயாது தூண்டிய சில்லையூராரின் நண்பர்கள் ஆர். கனகரத்தினம், ஜவாத் மரிக்கார், ஏ . இக்பால், எம். எச். எம். ஷம்ஸ் ஆகியோருக்கும், ஆலோசனைகள் சொன்ன காவலூர் ராசதுரை, எஸ். கே. பரராஜசிங்கம் ஆகியோருக்கும் தானே முன்வந்து தொகுப்பின் பாதிக் கவிதைகளை அச்சுப்பிழை பார்த்த ராஜஸ்ரீகாந்தன், காவலூர் ராசதுரை, என் தங்கை திருமதி தமிழின்பம் மாணிக்கராஜாவுக்கும் இந்நூலை அச்சேற்ற, எனக்கு விசேசமான சலுகைகள் தந்துதவி, என்னால் ஏற்பட்ட தாமதத்தையும் பொருட்படுத்தாது சிரித்த முகத்தோடு எப்போதும் உதவும் அச்சகத்தார் யுனி ஆர்ட்ஸ் விமலேந்திரன் அவர்களுக்கும், கணனி எழுத்தமைத்த சகோதரி சுதர்ஷினி இராஜேந்திரன், சகோதரி பவானி ஸ்ரீஸ்கந்தராஜா, சகோதரர் முகுந்தன் மற்றும் யுனி ஆர்ட்ஸ் அச்சகத்தைச் சேர்ந்த அனைவருக்கும்; கனடாவிலிருந்து, இடையிடையே என் மனம் தளராதிருக்கத் தொலைபேசியில் கதைக்கும் நான் பெறாத என் பிள்ளைகள் திலீபன், பாஸ்கரன், முகுந்தன், யாழினிக்கும், பள்ளிப்படிப்பென்றும், பசியென்றும்,நித்திரை படுக்கையென்றும் என்னை நாடிவரும் போதெல்லாம் 'ஐயாவின் கவிதை வேலைகள் இருக்கின்றன' என்று நான் சொன்னால், வாய்மூடித் தன் காரியங்களைத் தானே சமாளிக்கும் என் பிஞ்சுமகன் அதிசயனுக்கும், ஊண் உறக்கம் பாராமல் அன்றாட உழைப்புக்காகவும், சில்லையூராரின் கைஏட்டுப் பிரதிகளோடும், நான் போராடும் போது, என்னைப் பராமரிக்கும் என் 'சேடிப்பெண்' சுதாவுக்கும்; நான் மனம் தளரும்போது என்னைத் தூண்டிவிட்டுத் தூணாக இருக்கும் என் தாய் தனபாக்கியம் கணபதிப்பிள்ளை, தம்பிமார் டொக்டர் திருமாளவன், நம்பியாரூரன் ஆகியோருக்கும் .........

........... இந் நூலை வாங்கிச் சில்லையூராரின் அடுத்த தொகுப்புகளுக்கு வழிவிடும் உங்களுக்கும்

என் நன்றிகள் !

- கமலினி செல்வராசன்

# தமிழுக்கு வாழ்த்து

தேனாகப் பொன்நிலவு திகழ்கின்ற ஓரிரவில்
தெய்வத்துள் தெய்வம், என் தா
யானாள் எம் மனைமுற்ற மணல்திருத்தி அன்பொடு தன்
அருகணைத் தென் விரலைப் பற்றி
'ஆனா' என் றோரெழுத்தை அழித்தழித்தம் மணல் மீது
அன்றெழுதப் பயிற்ற, இன்றோ
பேனாவைப் பிடித்தெழுதும் உரையெழுத்தும் கவியெழுத்தும்
தலையெழுத்தாய்ப் பிழைப்பாய்க் கொண்டேன்
நானான போதும் தம்நாளாந்தச் சோற்றுக்கும் ஆடைக்கும்
நலிவோர்க்காய்ப் பொருதஎன் வா
ளானாளே தமிழ் என்றிங்கன்ப ரெல்லாம் போற்றுகின்ற
ஆச்சி! உனை முதலில் அடிபணிந்தேன் போற்றி!

# தற்பாயிரம்

நல்லார் வதிகின்ற யாழ்ப்பாணக் கோடியிலே
நெல்லாலை சார்ந்து நீர் சூழ்ந் திலங்குவது
எல்லாலை செல்ல இணங்காத சோலைமலி
சில்லாலை என்கின்ற சிற்றூர்; அச்சிற்றூரான்
கல்லான்; நன்னூலொடு தொல்காப்பியமும் யாப்பியலும்
வல்லார் வாய்க்கேட்டறியான்; வாய்க்கால் வயற்களத்தில்
நெல்லடிக்கும் போதினிலே நெஞ்செழுந்த ஆர்வத்தாற்
சொல்லடுக்கும் கிராமியச் சோதாக் கவி அடியேன்

ஏரடிச் சாலில் எழுங்கதிரெடுத்து
போரடித்துலகைப் புரப்பதையன்றி
வேறெடுத்தெதையும் விரித்துரைப்பாவாய்க்
கூறிடத் தெரியாக் குறுஞ் சிற்றூரான்
ஓரடிவழியில் ஒற்றடி வரம்பில்
சீறடி பெயர்த்துச் செல்மடமாதர்
நேரடி தவறா நெறிநடை நேர்த்திச்
சீரிடையுளத்தைச் செலுத்தி இன்புற்றோன்!

எள்ளுப்போலே எனினும் இன்தமிழைக் கற்றறியாச்
சில்லறைகள் கூட்டத்துச் சிறியேன்; செழும்அமுதத்
தெள்ளு தமிழ்ச் சுவையைத் திண்ணைக் குருமரபுப்
பள்ளியிலே கற்றறியாப் பதர் அடியேன்; குன்றம் சார்
பேராதனையிற் பெரும்பெரும் நூற்கட்டுகளை
ஆராதனை பண்ணி ஆகிக் கலாநிதியாய்ப்
பட்டங்கள் கட்டிப் பறக்க விடாப்பாமரன் யான்!
எட்டாக் கவிப்பொருளைக் கொட்டாவி விட்டறியேன்!
மேளத்தில் முத்து விரல்கள் விளையாடித்
தாளலய ஞான தரிசனங்கள் காட்டிய நம்
ஈழத் தவிலரசன் எழிலார் இசைக் கணித
வேழமெனவே திகழ்ந்த வித்தகன் எம் சொத்தான
தட்சிணாமூர்த்தி தவிலிற் பொழிந்த
தாளவரிசை தமிழிற் பொழிவோன் யான்
கொள்ளத் தகுமென்றால் கொள்ளும்; தகாததெனில்
தள்ளும்; எனக்குத் தமிழ் என்ன சீதனமா?

# கடவுள் ஆகவேண்டும்

கடவுளாக வேண்டும் – நானோர்
கடவுளாக வேண்டும் – சொல்லின்
கடவுளாக வேண்டும்!

உலகமெங்குமுள மனிதரெல்லவரும்
ஊழி காலம் எனை உளமிருத்தவே
தலைசிறந்ததாய் நான் இனித்த செந்
தமிழிலே கவிதை தான் படைத்திடும்

கடவுளாக வேண்டும் – படைத்தற்
கடவுளாக வேண்டும்!

நல்லதென்றெனது உள்ளம் உள்ளுகிற
நனி சிறந்த உயர் அறமெலாம் உலகில்
வல்ல ஆயுளொடு வாழுமா றெனது
வாக்கினால் அவைகள் காக்கும் ஆற்றலின்

கடவுளாக வேண்டும் – காத்தற்
கடவுளாக வேண்டும்!

எங்கு நல்லவர்கள் வாழ்விடர்ப் பிடியில்
இட்டெவர் வரினும் எனது தீ உமிழும்
அங்கதக் கவிதைவிழியினால் அவைகள்
அற்று நீறு பட இற்றழித்திடும்

கடவுளாக வேண்டும் – அழித்தற்
கடவுளாக வேண்டும்!

கடவுளாக வேண்டும் – ஆமாம்
கடவுளாக வேண்டும் – சொல்லின்
கடவுளாக வேண்டும்!

# பாவாரம்

## கலைமகள் பாவாரம்

## விபுலானந்தர் பாவாரம்

## நாவலர் பாவாரம்

# கலைமகள் பாவாரம்

ஞானநாயகியே! பூவிலும் எந்தன்
நாவிலும் நெஞ்சிலும் அமர்ந்து
பாநொடிக்குள்ளே நூறிருநூறாய்ப்
பாடிட எனக்கருள் வாணி!
தேனெழுந் தொழுகும் கவிமலர் கொண்டுன்
திருவடி தனை யலங்கரிக்கத்
தானெழுந்துள்ளேன்; தமியனுக் காச்சி,
தாபரம் உன்திருத் தடங்கை!

1. சேரநாட்டிளங்கோ சிலப்பதிகாரம்
செய்யவும், கம்பனின் மகனைச்
சாரவே வந்த சாவினை அகற்றும்
சாதனமாகவும், குறள் நூற்
சாரமீதென்று புலவருக்குணர்த்தும்
சான்றினைக் காட்டவும் முன்வந்
தோரடைக்கலமாய்ப் புலவரைப் புரந்தோய் !
உனதருளெனக்கு வந் துதவாய் !

2. பிரமனின் சிருட்டி வித்தையை முகமாய்,
பேசிடும் நான்கு நன்மறைகள்
கரமென நான்காய், எண் எழுத்திரண்டும்
கண்களாய் இசை இலக்கியமே
இருதனக் கோடாய், வழிவழி மேலோர்
இயம்பிதிகாச புராணம்
திருவடியாய், யாழ் ஓம் எனும் ஒலியாய்த்
திகழுருக் கொளுங்கலைத் தேவீ!

3. உன் திருவடிவம் புதுப் புதிதாக
உணர்கிறேன்; இன்று யான் ஈங்கு
வந்திது கண்டேன்; இருகரம் யாழில்
வைத்து நீ மெய்ம்மறந்துள்ளம்
கொந்துமாறெழுப்பும் புத்தொலி கேட்டேன்;
குவலயம் பழமைகள் உதறி
விந்தை சார் புதுமைச் சிறப்புறுமாறுன்
வீணைசொல்லாணைகள் அறிந்தேன்!

4. கண்ணகி சிலம்பில், அர்ச்சுனன் கரத்துக்
காண்டிபந் தன்னிலே, சாத்தன்
எண்ணிய எண்ணத் திடைப்பிறப்பெடுத்தன்
றிலங்கிய மேகலை மனிதர்க்
குண்ணுதற்குவந்த உண்டியின் கலத்தில்,
ஒதரும் சீதையின் காதைக்
கண்ணெனத் திகழும் இராவண வேந்தன்
கைதவழ் யாழில்முன் உறைந்தாய் !

5. இன்று நீ யுறையும் பதிகளைக் கண்டேன்;
ஏர் பிடித்தூர் வயற்களத்தில்
ஒன்றுவிட்டொரு சால் மறுத்துழும் களைப்பை
ஓட்டுதற்காய் ஒரு பாட்டை
நின்று நின்றிசைத்தே நடக்குமோருழவன்
நிரவலில், சுருதியில், பயனோ
டொன்றிய இசையாம் கலையினில் நீ சென்
றுறைவதை, நிறைவதை உணர்ந்தேன்.

6. இடுப்பினிற் சேலைக் கட்டினை வரித்தே
இளமடவார் சிலர் பெயல்நீர்
மடுத்த சிற்றூரின் வயற் சகதிக்குள்
வரிசையில் நின்றுதங் கையில்
எடுத்த நெற்பயிரின் நாற்றினைநடுதற்
கிடைவளைத் தசைந்து நற்தாளம்
அடுத்ததோர் முறையிலாற்றுமந் நடனத்
தருங்கலைத் தாய் உனைக் கண்டேன்!

7. பசுமையிற் தோய்ந்து, பருத்த நெற்குதலைப்
பாரமும் அழுத்திடப் படுத்து
வசி வளம் காட்டும் வயலிடை வந்தே
வானகப் பறவைகள் நெல்லைப்
புசிப்பதைத் தடுத்தற் குழவனங் கமைத்த
பொம்மையில், வெருளியின் கலையில்,
பொசிப்புறுந் நலஞ் சார் சித்திரத்திடையுன்
புத்துருக் கண்டு யான் வியந்தேன்!

8. ஆதலின் தாயே! கலைகளுக் கரசீ!
அருங்கலைப் படைப்புகளனைத்தும்
பூதல மாந்தர்க் கேதொரு வகையில்
பொருட் படுமாறு, நற் பயன்கள்
போதுறுமாறு புதுப் புதுப் பாக்கள்
புலவர்கள் யாத்திடுமாறாய்
ஈதறியாதோர்க் கெடுத்துணர்த்துகிறாய்,
இன்றுனதெண்ணம் ஈதறிந்தேன்!

9. ஆயநற்கலைகள் அறுபதும் நான்கும்
ஆகுமென்றான்றவர் வகுத்தன்
றேயவுன் கமலத் திருவடி நிழலில்
இட்டனர்; பெற்றவை புரந்து
மாயவொண்ணாமல் காத்திடும் பணியை
மறந்தனை எனினுமுன் துயிலை
நீயகன்றெழுந்தாய் மறுபடி; தமிழின்
நெடும்புகழ்ப் பயன்கலை செழிக்கும்!

★★★

# விபுலானந்தர் பாவாரம்

*19–7–62 அன்று கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய விபுலானந்தர் விழாவில், தான்தோன்றிக்கவிராயர் பாடி அரங்கேற்றியது.*

## காப்பு

ஞான நாயகியே! யாழினை ஏந்தி,
யாங்கணும் அறிவு சால் புனித
கான நாதத்தின் கதிரினைப் பரப்புங்
கலைமகட் சோதியே! உன்றன்
ஞான யாழ் நுண்மை ஞாலமே மறந்த
ஞான்றில், அந் நல்லிசைக் கருவி
பேண யாழ் நூலைப் பெற்றவன் புகழ், யான்
பேசுவன்; பிழையறுத் தருளாய்!

## ஆசி மொழி

ஈழத்து முற்போக் கெழுத்தாளர் சங்கத்தார்,
நாளைத் தமிழின் நலத்தை மனதிருத்தி,
வேளைக்கு வேளை விழாவெடுத்து, இவ்வாறு,
ஈழமணிநாட்டின் இலக்கியத்தை வாழ்வித்த

நல்லை நகர் நாவலனை, நவாலி நகர்ச் சுந்தரனை,
தொல் யாழின் கீர்த்தியினைத் தொகுத்த விபுலானந்த
நல்லறிஞன் தனை, இந்த நாமாவளித் தொடரில்
உள்ளவரை யெல்லாம், நம் உள்ளக் கமல மலர்ப்

பஞ்சணையில் வீற்றிருத்தி, பாரெங்கும் நம்மவரின்
விஞ்சு புகழ் பரப்ப விழைகின்றார்; அன்னவர்க்கு,
செஞ்சொற் தமிழ்ப் பாடற் செண்டு தொடுத் தொப்படைத்'தென்
நெஞ்சிலெழும் ஆசியெலாம் நிகழ்க!' என வாழ்த்துகிறேன்!

## அவையடக்கம்

அவைத் தலைவ! இங்கு விபு லானந்தர் பெற்றியினைச்
சுவைத் தமிழிற் கூற வந்த சோதரரே! சபையோரே!

எமைத் தகைமை யுறுமாறு இங்கழைத்த சங்கத்தீர்!
உமைப் பணிந்து "பாவாரம்" ஓதத் தொடங்குகிறேன்;

தேவாரம் போலெனது "பாவாரம்" வாழுகவே!
தாவாரமில்லான்–என் தமிழ்க் கவியும் வாழுகவே!!

## நூல்

### வரவு

கோல வான் சந்தி! குவிந்த முகின் மேடை மிசை,
காலின் மேற் கால் குலவிக் ககனத்து மாதர் சிலர்

உல்லாச மாயமர்ந்து, உம்ப ருலகத்தின்
நல்லிசையை, மெல்லிசையாய், நாதப் பொலிவுடனே

நாவின் நரம்புகளே நறு யாழின் தந்திகளாய்
மேவும் படிக்கு, மிழற்றிக் குதூகலித்துக்

கொண்டிருந்தார்; அவ்வேளை குளிர் தென்றல் வீச, முகில்
மண்டலமோ, சூல் கொண்டு, மாமழையாய்த் தானுருகிச்

"சோ"வென்றோர் வாவியிலே சொரிந்ததுவால்; வான்மகளிர்
தேவருலகத்துத் தீங்கான சுந்தரிகள் –

மேகத் திருந்துவந்திம் மேதினியிற் சேர்ந் தந்தச்
சாகரத்தில் மூழ்கித் தஞ் சாயலுருச் சால்பிழந்து

உற்றதொரு வாவியிலே உயிர் வாழச் சால்பான
பெற்றியிலே, நீர் மகளிர்ப் பேறடைந்தார்; ஆனாலும்,

தம்மியல்பும், தம்மொழியும், தம்முலகத்தின்னிசையும்
இம்மியுமே மாறாது இசையத் தொடர்ந்திருந்தார் !

வானகத்து மாமகளிர் வரு நீரர மகளி
ரானபிறகுறைந்த அழகாருந் தண்வாவி

மட்டு நகர் வாவி என வழங்கும்; நறுந் தேனாய்ச்
சொட்டு மருந் தேவரிசை சொரிகின்ற அந்நகரின்,

தென்திசையின் கண், காரை தீவினிலே வந்துதித்து
"தென் முனையின் கதிர்" என்று தென்னாட் டறிஞரெலாம்

ஈழத் தமிழறிவின் எழிலைத் துதி செய்யக்,
கீழத் திசையெழுந்த கிளர்ஞாயி றாயொளிர்ந்த

மேலவனே! முத்தமிழின் வித்தகனே! சீருறு யாழ்
நூலவனே! உன்சிறப்பை நுவல எனது கவிச்

சீர் தளைகள் தாங்கிடுமோ? சிப்பியினால், உன்னுடைய
பேரறிவாம் ஆழிப் பெருக்களவை யான் கணித்தல்

சாலுவதோ? ஆயினும், உன் சலுகையினை யானிரந்து,
ஏலுவதைச் சாற்றி யுனை இதயத்தால் அஞ்சலிப்பேன்!

இயல்

இயலும் இசை நாடகமு மியல்கின்ற முத்தமிழோ
டயல் மொழிக ளானவை யாம் ஆங்கிலமும் வடமொழியும்

காலிற் சரண் புகுதக் காலத்தை வென்றுயிர்க்கு
சீலத் திரு நூல்கள் செய்த விபுலானந்தா !

தமிழின் ஒலி இயலைத் தக்கபடி ஆராய்ந்தும்,
அமிழ்தம் போல் அழகிய நல் நாச்சியார் நான்மணியாம்

மாலையையும், நடராஜ வடிவம், தில்லைச்சிவனின்
சீலத் திருநடனம், செப்பரிய ஞானத்தின்

யோகம், கருமத்தின் யோகம், ஆவற்றினொடு
லோக, புராணமெனும் நூல்கள் பலவாகச்

செந்தமிழிற் செய்தியலிற் சிறந்தோய் ! வட திசையின்
சுந்தரியாம் வாணியினைச் சோடித்து, எந்தமிழின்

நாமகளாய் மாற்றக் குருதேவர் பாக்கியத்தைச்
சேமமுற யாத்தவனே ! சேர்ந் தாங்கில வாணி

தன்னை, உருவத்திற் தமிழச்சி யாக்குதற்காய்,
விண்ணையுமே தானழைக்கும் விஞ்ஞான தீபமுடன்,

மேற்றிசையின் செல்வம், விவேகரது ஞானத்தில்
ஊற்றெடுத்த தீபம், உயர் பாவலர் விருந்து.

பூஞ்சோலைக் காவலனாம் புத்தமுதப் புத்தகங்கள்
தீஞ்சுவையாய்த் தாஞ்சுவைக்கத் திரட்டியளித்தவனே !

ஆராய்வறியாத அறிஞர், பெரியாரின்
சீரழிந்த ஆய்வுச் சிதைவுகளை, வாண்மதியால்

வேரறுந்து போமாறு வீழ்ச்சியுறச் செய்தவனே !
பேரணுவின் தன்னியக்கம் பெருமையுறும் இந்துமதக்

கொள்கைக் கரண் செய்யும் கோட்பாட்டுப் பேருரையால்,
உள்ளொளியில் லாதாரின் உரைக்கு விடை சொன்னவனே !

கலைச் சொற் களத்தும், கன்னிமை இன்னுங் கழியா
இயற்றமிழ் மகாநாட் டெழுந்த பெருங் கூட்டத்தும்,

பேருரைகள் தாம் செய்த பெற்றியினால் இயற்றமிழிற்
சீருறு முன் பேரறிவின் செப்பத்தைக் கண்டறிந்தோம் !

## இசை

ஆளுடைப் பிள்ளையாரின் ஆலய முன்றில் தன்னில்,
"வாழுக விபுலன் நாமம் ! வளருக யாழின் கீர்த்தி !
சூழுக தமிழணங்கின் சுடரொளி ஞாலத்" தென்று,
ஏழுலகெங்கும் மோதி எதிரொலி சுழலுமாறு,

பேரொலி கேட்டதாங்கு, பெருமையிற் குழுமி நிற்போர்
யாரெனில், யாழ் நூல் கேட்டு யாக்கையின் பயனறிந்த
பேர்; ஓரா யிரம்நரம்புப் பெரும்புகழ் யாழின் நுட்பச்
சீரெல்லாம் ஆய்ந்து, ஆங்கே செப்பினோன், நமது நாட்டான் !

இசையினால் இறைவன் ஆகம் இனிப்புறச் செய்து, ஞாலத்
திசை தொறும் தனது கீர்த்தி திகழவேமிளிர்ந்தோன்பேரன் !
வசை மொழி பகர்ந்தோர்க்கெல்லாம் வாய்மொழிப் பதில் கூறாது
இசையொடு யாழை மீட்டி எழில் நகர் பெற்றோன் மைந்தன் !

ஏழிரண் டாண்டு ராமன் எழில்மகள் சீதையோடு
பாழுறு கானில் வாசம்; பண்தமிழாய்ந்த நந்தன்
சூழ் பதினான்காண்டாகச் சுந்தர கான வாசம்;
யாழினை மீட்டான் நந்தன் ! யாதுமே ஈட்டான் ராமன் !

இயலினோடமையா தெங்கள் இன்னிசைத் தமிழை ஆய்ந்து,
பெயலென யாழின் நாதம் பெருக்கிய விபுலானந்தன்,
முயல்வது – அயர்வொணாது முயல்வது – பலிக்கும்; என்றும்
செயல் – செயல் வேண்டும் என்னும் சீர்வழி காட்டுகின்றான்!

## நாடகம்

நாடக நூலென்று தமிழ் நாவலர்கள் சொல்கின்ற
தேடரிய செல்வச் சிலம்பின் அரங்கேற்று

காதையினை ஆராய்ந்த காரியத்தால் மட்டுமன்றி,
மேதை மிகும் ஷேக்ஸ்பியரின் மேலைமொழி நாடகங்கள்

கவிதைச் சுவை குன்றாக் கற்கண்டுப் பாடலிலே
புவி மெச்ச யாத்துப் புகன்றும், மற்றோர் மதங்க

சூளாமணியென்னும் சுடர் நாடகந் தனையே
மாளாத் தமிழ்ச் சுவைகள் மல்கப் படைத்தளித்த

பான்மையிலும், முத்தமிழிற் பரவிப் பணி செய்து
மேன்மையுற்றாய், ஆனந்த விபுலா நீ வாழியவே !

வழிச் செலவு

"வெள்ளை நிற மல்லிகையோ ? வேறெந்த மாமலரோ ?
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ ?
வெள்ளை நிறப் பூவுமல்ல; வேறெந்த மலருமல்ல;
உள்ளக் கமலம்" என்ற உத்தமனார் சேவைக்குப்

பாவாரஞ் சூட்டுவதோ? பாராட்டிப் பேசுவதோ ?
பூவார்த்தைப் பூசனையோ புலவரவர் வேண்டுவது
பாவாரமல்ல; புகழ்ப் பாராட்டுமல்ல ; வழிப்
போவார் – இவர் வழியிற் போவாரே – வேண்டுவது !

ஆதலினால் செந்தமிழின் ஆக்கத்தில் ஆர்வமுறும்
மேதகையீர் ! "நாமெல்லாம் வித்தகரின் சேவை நலப்
பாதையிலே போவதற்குப் பற்றுறுவோம்" என்றுரைத்தும்
காதை இனி விடுவித்துக் கரங்கூப்பி விடை பெறுவேன் !

★★★

# நாவலர் பாவாரம்

*கனி தமிழ் ஈழத் தோங்கக்*
*கலங்கரை விளக்கம் ஆனோன் !*

## காப்பு

மூவள வேந்தர் காப்பில் முகிழ்த் தொளிப் பிரபை வீசிப்
பாவளம் மிகுத்துப் பின்னர் பன்னெடும் காலம் தேங்கி,
நாவலன் வரவும் அன்னோன் நாவிலே ஓங்கி, இன்றிப்
பாவலன் நெஞ்சிற் கூத்துப் பயின்றிடும் தமிழே ! செல்வீ !

உன்னை யான் வணங்கிக் கேட்கும் ஒரு வரம்; நல்லூர் தந்த
பொன்னை – எம் மொழியைக் கல்விப் பொருளினைத் தேச மாண்பை,
மின்னையே நிகர்த்த செஞ்சொல் மிளிர்த்தியே வளர்த்துக் காத்தான்
தன்னை – நாவலனைப் போற்றத் தகு மொழி தாராய் அம்மா !

## நூல்

1. நாவலன் பிறந்த காலம் நாடிழிந் திருந்த காலம்
நாவலந் தீவு வெள்ளை நரர்களுக் கடிமைப் பட்டுக்
கேவலம் மிகுந்த காலம்; கிலிசைகெட் டெங்கள் முன்னோர்
ஏவல் செய் தாங்கி லேயர்க் கெடுபிடி ஆன காலம் !

2. கற்றவர் இருந்துமென்ன; கட்சிகள் கட்டித் தம்முட்
குற்றமே போற்றி, வேற்றோர் கும்பிடும் மதங்கள், பண்பு,
மற்றவர் பாஷை, கல்வி, மடமைசார் நாக ரீகம்
முற்றுமே சிறப்பென் றேற்று மூட ராய் வாழ்ந்த காலம் !

3. படிப்பினைத் தருவோம் என்றும் பதவியைத் தருவோம் என்றும்
குடிப்பதற் குண்பதற்காம் குவை நிதி தருவோம் என்றும்
நடிப்புகள் செய்து வெள்ளை நாட்டினர் தங்கள் ஆட்சிக்
கடிப்படை கோல, நம்மோர் அலமலைந் திருந்த காலம் !

4. தமிழ் வலார், தாங்கள் பெற்ற தனையருக் கேனும் கற்ற
அமிழ்தனை கல்வி ஞானம் அளித்திடா தொளித்த காலம் !
சிமிழிலே முத்தை வைத்துச் சேற்றிலே புதைத்த வாறாய்த்
தமிழ் அமிழ்ந் திவர் பாற் சிக்கித் தட்டழிந் திழிந்த காலம் !

5. ஏடுகள் இரவல் வாங்கி எழுதிய பின்னர், மூலம்
பாடுறப் பழுது செய்து பழம் நிதி அழித்தும், மாண்டு
காடுறு முன்னர் தங்கள் கைவசச் சுவடி தீயிற்
போடுதல் செய் தெரித்தும் பொறாமையால் எரிந்தோர் காலம் !

6. கல்வியைத் தமிழை, நாட்டின் கலைகளைப் பண்பை, தங்கள்
பல்வித நாகரீகப் பழக்கமாம் சீல, மார்க்க
நல்வினை அறங்கள் தம்மை, நாலு பேர் அறியக் கூட
நல்குதல் – பொதுமை செய்தல் – நயந்திடார் வாழ்ந்த காலம் !

7. தனத்தினை, நாட்டை வேற்றுத் தறுகணார் கவர்ந்த தன்றி –
சனத்தரை அடிமை செய்த சாதனை மட்டுமன்றி
மனத்திரை, ஈழநாட்டு மக்களின் ஆன்மா தன்னைத்
தினந் தொறும் அடிமை கொள்ளத், தேசமே தேய்ந்த காலம் !

8. தமிழ் மொழி, தமிழர் பண்பு, தமிழரின் சமயம், கல்வி
தமிழரின் செல்வம், நாடும் தமிழினத் தான்மா தானும்
அமிழ்வுறும் இப்பேர் துன்பம் அறுகெனத் தழைக்கும் காலத்
தமிழ்துறு விடத்தை நீக்க அறுமுகன் சிவனாய் வந்தான் !

9. ஆங்கிலம், தமிழ் இரண்டும் அட்சரம் அறவே கற்றோன்!
ஈங்கவன் திறமை பெற்றோர் இருநிதி, பதவி, வாழ்க்கை
ஓங்குதற்கான வாய்ப்பென் றுறு நலம் அனைத்தும் எய்தப்
போங்கதி இருந்தும், எல்லாம் புறத்தெறிந் தெழுந்தான் மன்னன் !

10. வாலிப வயதிற் சின்னான் வந்த வேற்றாரின் மாட்டுக்
கூலியைக் கருதா தன்னோர் கோரிய முறையாற் – கல்வி
பாலியர்க் கூட்டும் ஆசான் பதவியை வகித்தும், பைபிள்
நூலினைத் தமிழில் நன்றாய் நூற்றுமே இருந்தான்; உண்மை !

11. ஆயினும் பின்னர் இங்கே அந்நியர் தங்கள் மார்க்கம்
தீயினும் விரைவு கொள்ளச் செய்வதற் காய்க்கைக் கொள்ளும்
ஆயிரம் வழிகள் கண்டான்; ஆகுலம் கொண்டான்; ஆவி
ஒயினும் ஒயேன் நாட்டுக் குழைப்பதில் என்றான் செம்மல் !

12. வேலையை உதறி வீசி வெளிக்கிளர்ந்தெழுந்தான்; கல்விச்
சாலைகள் அமைத்தான்; சைவ சமய நூல் நூறு செய்தான்;
ஆலயந் தோறும் சென்றே ஆற்றினான் பேச் சிங் காண்ட
மேலையர் மிரண்டார்; ஆன மிடியெலாம் செய்தே பார்த்தார் !

13. நாவலன் கவன்றானில்லை; நனி தமிழ்த் தேன் மொழிக்குக்
காவலன் ஆனான்; கல்விக் காவலன், சைவ மார்க்கக்
காவலன், சமூக சேமக் காவலன், தமிழாசாரக்
காவலன் என்றே மாற்றார் கலங்கு மா றிலங்கினானே !

14. செல்லரித் தழிவுறாது செந்தமிழ்ச் சுவடி யாவும்
ஒல்லு மா றச்சுக் கந்தோர் உண்டுசெய் தச்சிலேற்றி,
நல்லிலக்கண நூல், பண்டை ஞான நூற்குரைகள் செய்தே
தொல் புகழ்த் தமிழ் யாம் இன்று தொடர்வதற் கூற்றே யானான் !

15. கல்வி இங்குளதேல் ஊற்றுக் கண் அதற்கவனே ! கற்றோர்
பல்கி இங்குளரேல் அன்னார் பவிசெலாம் அவனால் ! சைவம்
மல்கி இன்றோங்குமாயின் மற்றவன் பணியால் ! ஈழம்
வல்வினை நீங்கி மீண்டு வாழ்வதும் அவனாற் றானே !

16. இன்று யாம் சுகிக்கும் பாஷை, இரு விழி பெற்றுக் கெம்பி
நின்று யாம் தருக்கச் செய்யும் நேர்படு கல்வி ஞானம்
மன்றிலே பெருமையோ டெம் மண்ணிலே உதித்த சான்றோர்
என்று யாம் நிறுத்தும் மேலோர் – எவையுமே அவனாற்றானே !

17. என்னரும் தாய் நாடான ஈழ நாட்டிடையே தோன்றிப்
பன்னரும் பணிகள் செய்தார் பலர்; இனும் செய்வோர் பல்லோர்;
இன்னவர் சிறியரல்லர்; எனை நிகர் புலவோர் வாயின்
சொன்னயக் கவிகள் நூறாற் சோடனை செய்யத் தக்கார் !

18. தேசியப் பெருமை பேசித் திரு வினையாற்றிச் சென்றே
ஆசிய நாட்டின் மேன்மை அகில நாடனைத்தும் செப்பித்
தேசிகரான எங்கள் தேச மா மணிகட்கெல்லாம்
மாசிலா முதல்வனானான் மாதவன் நல்லூர் மைந்தன் !

19. மேலை நாடேகி ஆண்டோர் மேட்டிமை மன்றத் தேறி
ஈழ நா டடைந்த தொல்லை எடுத்துரைத் தறத்தைக் கோரி
மாளவே யிருந்த நாட்டு மக்களின் உரிமை காத்த
வேழமாம் இராம நாதன் வேறெவர் விளைத்த முத்து ?

20. மாகலா யோகி என்றே மகி தலம் போற்றும் செம்மல்,
சேகரம் செய்தே, ஓங்கும் சிங்களக் கலையின் பெற்றிக்
கேகனாய்ப் பணிகள் செய்த ஏந்தலாம் குமாரசாமிக்
காகவே பாதை வெட்டி அமைத்தவன் வேறாராவான் ?

21. முத்தமிழ் காத்த சீர் தா மோதரன், பின்னர் வந்த
வித்தகர் விபுலானந்தர், வியன்கவி நவாலித் தாத்தா,
வித்துவ மணி கணேசர், விறல் முருகேசனார் என்
றத்தனை பேர்க்கும் ஆசான் அறுமுகனன்றி வேறார் ?

22. இருந் தமிழ் இருந்தோம்பும் பண் டிதமணிச் சான்றோனான
திருவமர் திருநெல்வேலிக் கணபதிப் பிள்ளையோடு,
பெருமை சார் பெரியதம்பிப் பிள்ளை மற்றவர் மாணாக்கர்க்
குரியதாம் புகழுக் கான்ற ஊற்றுவாய் வேறே யாரோ ?

23. எங்களின் தாய் நாடீதென் றிடித்துரைத் தெழுந்தே ஈங்கு
சிங்க கர்ச்சனைகள் செய்தே சிரம் நிமிர்ந்திருந்து வீரம்
பொங்க வாழ் தமிழச் சாதி புத்துணர் வடையு மாறாய்
அங்கு வேர் ஊன்றிச் சென்றோன் அறுமுக ஏந்தலன்றோ ?

24. தாயினம் உரிமை குன்றித் தன் மதிப் பிழக்காதின்று
தாயினும் பரிந்து காக்கத் தனி ஒரு தலைவன் உள்ளான்;
ஆயிரம் பேசான்; செய்கை யாளன் என்பார்கள்; செல்வ
நாயகத் 'தந்தை'க் குற்ற தந்தை நாவலனே அன்றோ ?

25. ஐக்கிய தேச மன்றத் தலையிலே "யாதும் ஊரே !
ஒக்க யாவருமே கேளிர்" என்றொலித் துலகம் மேன்மை
மிக்க செந்தமிழர் சால்பை வியந்திட ஜீ. ஜீ. செய்யத்
தக்கதோர் நிலைமை இன்று தழைத்ததும் அவனால் அன்றோ?

26. இவ்விதம் இலங்கை நாட்டில் இன்றுயர்ந்திருக்கும் மாண்புச்
செவ்வியின் தந்தையாகத் திகழ்ந்த நாவலனைப் போற்றிப்
பவ்வியமாகப் பாடற் பனுவல்கள் தமிழில் யாக்க
எவ்விதம் நான் இங்குற்றேன் ? இதுவும் நாவலனால் அன்றோ?

27. ஆதலின் ஈழத் தெங்கள் அனைவர்க்கும் அனைத்துமான
தாதையை, தமிழைச் சார்ந்த சகலமும் தழைக்க, நம் போல்
மாதரை, மண்ணைப், பொன்னை மதித்திடா தனைத்தும் விட்ட
மேதகை தனைக் – கும்பிட்டேன்; வேறெதைச் செய்ய வல்லேன் ?

28. வேறெதும் செய்ய வல்லார் மிகப் பலர் இருப்பீர் நாட்டில் !
ஏறென நிமிர்ந்த வாழ்வால் எமக் கொளி காட்டியாகி
வீறினை ஊட்டும் நல்லை வித்தகன் புகழை ஓம்பக்
கோரினேன் உம்மைக் கைகள் கூப்பியே ! செய்வீர் ! வாழ்வீர் !

# கவியரங்கப்
# பாடல்

# கவியரங்கப் பாடல்

யாழ்ப்பாணச் சாமி

குறிப்பு:

*எங்கேனும் ஒருவன் வாழ்வு இடர்ப்பிடியில் வீழ்ந்தால் தனது அங்கதக் கவிதைத் தீ விழியினால் அவர்கள் வாழ்வு அற்று நீறுபட இற்றழித்திடும் கடவுளாக வேண்டும் – அழித்தற் கடவுளாக வேண்டும் என்று பாடிய கவிஞரின் எண்ணம் நிதர்சனமாக வெளிப்படும் கவிதை இது. பருத்தித்துறை – வியாபாரி மூலையில் யாழ்ப்பாணத்துச் சுவாமிக்கு விழா எடுத்தபோது அதைப்பற்றி 'வக்கணை' பேசிய சிலரைக் குட்டி அடக்கக் கோபத்தோடு பாடிய கவிதை இது. கவிதை பாடுவார் என அழைப்பிதழில் பெயர் போடாமலே, உளஆற்றாமையால், உடனே கவி எழுதி எழுந்து புலியாய்ச் சீறிப்பாடிய கவிதை இது. கவியரங்குகளில் தனி மரபை உருவாக்கியவர் சில்லையூர். இனிமையான குரலில், ஏற்றத் தாழ்வுத் தொனிகளோடு உணர்ச்சி கொப்புளிக்கக் கவிதை பாடுவார்.*

கவியரங்கப் பாடல்

யாழ்ப்பாணச் சாமி தமைக் காழ்ப்பால் இகழ்ந் தெழுதும்
கூழ்ப் பானைப் பண்டிதரைக் குட்டுதற்கே வந்துள்ளேன்!

பருத்தித் துறையிற் பரந்து வதிந்து தமிழை
விருத்தித் துறையில் விளக்கி வளர்ப்போரே! யான் தலையைச்
சரித்துத், துரை மக்காள்! கும்பிட்டும் தமிழ்க் கவித்தாக விடாய்த்
திருப்திக் குரைப்பன் செந்தீஞ் சொற்கவிதை; செவி மடுப்பீர்!

குறள் வெண் செந்துறை

நோட்டீசிற் பெயரில்லா நொட்டைக் கவி வந்தேன்
பாட்டிசைக்க! தான்தோன்றிப் பாவலன் யான்; ஆதலினால்

இப்பொழுதே, இங்கிருந்தே இயற்றிய தென்பாடல்; அதிற்
தப்பிருக்கும், மன்னித்துத் தாபரித்தல் உங்கள் கடன்!

யாழ்ப்பாணச் சாமி தமைக் காழ்ப்பால் இகழ்ந் தெழுதும்
கூழ்ப்பானைப் பண்டிதரைக் குட்டுதற்கே வந்துள்ளேன்!

பாரதத்தில் உற்பவித்துப் பாப்புனைந்து செந்தமிழைப்
பாரறியச் செய்து மகா பாவலனாய் வாழ்ந்திருந்த

பாரதியை – சுப்ரமண்ய பாரதியை ஆட்கொண்ட
பேரருளின் ஊற்றை, மனப் பீடுயர்த்தும் ஞானத்தின்

காந்தத்தைக், கல்விக்கடலை, மௌன குருச்
சாந்த சொரூபன் மனி தனைச் சீர் யாழ்ப்பாணச்

சாமி மகானை, மா சங்கரனே மானிடனாய்ப்
பூமியிலே வந்துதித்த புறத்தோற்றம் என்று கவி

பாரதி தன் தெய்வமாய்ப் பாவித்த நாயகனைத்
தீரத்தைப் பாரதிக்கே தீற்றிய நற் கோமானை

அருளம் பல ஞான தேசிகனை, ஈழத்தின்
பெருமை துலக்க வந்த பெம்மானை, தமிழம்மா!

சின்னத் தன மாய்ச் சிறுபுத்தி கொண்டொருவன்
என்னென் றுரைப்பன் அம்மா! இழித்தொருசொல் கூறிவிட்டான்!

சொன்ன மொழி மீட்டொருகாற் சொல்லிடவும் மெய் கூசும்;
என்னென்றுரைப்பன் என தினிய தமிழாச்சி, யணை!

கஞ்சாத் துறவியென – காதுகளை மூடாதே!
கஞ்சாத் துறவி; ஆம்! கஞ்சாத் துறவி யென

கிஞ்சிற்றும் கூசாமல் கிலிசை கெட்ட வார்த்தைகளால்
பஞ்சைப் பயல் ஒருவன் பரிகாசம் பண்ணிவிட்டான்!

தாயே! தமிழம்மா! தண்ணென்ற தண்டமிழை
ஊயென்றெழுகின்ற உலைநெருப்புச் செந்தமிழாய்

மாற்றும் வலிபடைத்த மாதாவே! முன்பொருகால்
வீற்றிருக்கை தீயுண்டு வேந்தன் தன் பிடி சாம்பர்

நீறாக, நந்திக் கலம்பகத்தைப் பாடத் தீச்
சாறாக்கிச் செந்தமிழைச் சான்ற தமிழ்க் கவிக்குத்

தீற்றி விட்ட நற்தாயே! தேன்வேண்டாம்! தீ வேண்டும்
கீற்றுக் கிழிப்பது போல் கிழித் தடுப்பில் போட்டெரிக்க,

மின்னலைப் போலொரு பாட்டு – இந்த
வீணரைச் சுட்டு விழுத்திடக் காட்டு
வன்னத் தமிழ் மடவாட்டி – உந்தன்
வார்த்தை கனலிடைத் தோய்த் தெனக்கூட்டு!

அல்வாயூர் ஞானி அருளம் பலத்தானை
தில்லை நடராசன் திருப்பிறப் பென்றின் தமிழின்

வல்லகவி பாரதியால் வாழ்த்தப் படுவானை
நல்ல தமிழ் நூல்களினை நானிலத்துச் செய்தானை

அஞ்சாமையூட்டும் அருமருந்தின் அன்னவனை
நெஞ்சிருத்தி ஈழத்தார் நித்திலமாய்க் கொள்வோனை

கஞ்சாத் துறவியெனக் கை எழுதக் கூசாத
பஞ்சைப் பயல் பாவி பட்டெரிந்து கெட்டழிக!

வேதப் பொருளின் விளக்கமாய் வாழ்ந்தோனை
சீத விழிகளினால் தெய்வ ஒளி பெய்தானை

பேதங்கடந்த பெருநிலையைக் கண்டானை
நாதப் பிரம்மத்தை மௌனத்தாற் கொண்டோனை

விஞ்சு புகழெமது வேழஞ் சூழ் ஈழத்துக்
கெண் திசையும் கூட்டுவித்த இறை ஞானபூபதியைக்

கஞ்சாத் துறவியெனக் கை எழுதக் கூசாத
பஞ்சைப் பயலின் பரம்பரையே பட்டொழிக!

அன்னாய் தமிழே! அடியார் உனக்கே யென்
றென்னாளும் வாயோதி; இருந் தமிழின் பண்பெல்லாம்

உன்னி வளர்ப்பதாய் உரைத்துத்; தமிழ் மக்கள்
சென்னி மிசை கொண்டாடும் சீரார் திருஞானி

தஞ் சிறப்பைத், தூற்றுந் தமிழியக்கம் ஓம்புகிற
புன் செயல்சார் பத்திரிகைப் புலையரொடு மெய்தழுவிக்

கஞ்சாத் துறவியெனக் கை எழுதக் கூசாத
பஞ்சைப் பயலும் அவன் பரம்பரையும் தூ! தூ! தூ!

நீறாகித் தூசாகி நிர்மூலமாகிடுக!
ஆறாத புண்ணை அகத்தேந்தி நீங்குகிறேன்.

# தேசபக்திப் பாடல்கள்

# பண்டைய கீர்த்தி மண்டிய நாடு!

பல்லவி

எடடா எடு யாழை
எங்கள் இலங்கையின் பங்கயத்தாள் தொழ -- எடடா

சரணங்கள்

ஆதியில் ஆதமும் ஏவையும் மேவியே
ஆடி மகிழ்ந் தொன்று கூடிக் குலாவிய
ஏதேன் எனும் மலர்க் காவனம் பூவிலே
இருந்ததிங் கெனும் புகழ் பொருந்திய நாடிதே -- எடடா

ஈசனை வீணையின் இசைநலத்தால்மயக்
கெய்திடச் செய்த நல் ராவண மன்னவன்
தேசம் ஈதென்பது தேர்ந்திடு மாறு யாழ்ச்
சின்னம் திகழும் கொடி மன்னிய மாநிலம் -- எடடா

முந்தைக் குவேனியாம் மொய்குழலாளிடம்
மூது கடல் கடந் தாதியில் வந்திவன்
சிந்தை இழந் துளம் சேர்ந்த மா விசயனும்
சேயிழையாளும் ஒன் றாகிய தாய்நிலம் -- எடடா

பாணனின் நால்வரிப் பண்ணினைக் கேட்டதும்
பரவசத்தால் ஒரு பாடலுக் கீடென
தானமாய் நாட்டிலோர் பங்கினைத் தந்த பேர்ச்
சால்புடை வேந்தர் செங் கோல்புகழ்த் தலமிதே -- எடடா

தன் மகன் கன்றினைத் தேரினாற் கொன்றதன்
தண்ட னையாய் ரதக் காலில் அன்னான் உயிர்
குன்றிடச் செய்த எல் லாளன் எனும் உயர்
கோன் அமர்ந்தாண்ட சீ ரானவர் ஊரிதே -- எடடா

தோற்றனன் போரிலோர் வேற்றவன் ஆயினும்
தோத்திரித்தே அவன் கீர்த்தியைப் போற்றிட
மாற்றவன் பேரிலோர் மண்டபம் நாட்டிய
மாமகன் கைமுனுக் கோமகன் பூமியே -- எடடா

சிங்களர், தமிழர், இஸ் லாமியர், பரங்கியர்,
தேன் பொலி காடுறை வேடுவர் ஆகிய
ஐங்குல மாந்தரும் ஐக்கியமாக எம்
அன்னையின் பொன்னடி பன்னிப் பரவிட -- எடடா

# சரித்திரம் எனும் வீணையின் தந்தியை மீட்டுவோம்!

கண்ணிகள்

சரித்திரம் எனும் வீணையின்
தந்தியை மீட்டுவோம் மீட்டுவோம்
தரித்திரோம் நாம் ஏழ்மையில்
சமத்துவம் நாட்டுவோம் நாட்டுவோம்

விதந்து யாவரும் போற்றவே
விடுதலை ஈட்டுவோம் ஈட்டுவோம்
சுதந்திரம் எனும் ஞாயிறின்
ஜோதியை மூட்டுவோம் மூட்டுவோம்

மிடிமைகள் தீர நாட்டிலே
விதிகளைத் தீட்டுவோம் தீட்டுவோம்
குடிகளின் கையில் ஆட்சியின்
கொடிகளைச் சூட்டுவோம் சூட்டுவோம்

நமக்கு நாம் எனும் இலக்கையே
நடத்தி நாம் காட்டுவோம் காட்டுவோம்
சமத்துவச் சுபீட்ச வேள்வியைத்
தாயகத்தில் மூட்டுவோம் மூட்டுவோம்

★★★

# குடியரசானது ஈழம்

பல்லவி

குடியரசானது ஈழம் –
குதுகல வாழ்வினி நாளும்!

அனுபல்லவி

முடியுடை அரசிறை அடி வரு டாமல்
முழு விடுதலை நிலை தழுவிய தீழம் – குடி

சரணங்கள்

தமதென அயலவர் திருடிய நாடு
தமதென உலவிய எமது நல் வீடு
நமதினி! நமதினி நமதுயர் பூமி!
நமதினி வயல் பயிர் கரை துறை காணி – குடி

பிறர் தர வருவது அடிமையர் வாழ்வு
உரிமைகள் தடை படல் முடிவு பெறாது
அரை குறை விடுதலை விடிவு தராது
சுமைகளை உதறிய தெமதுயர் நாடு – குடி

இன மத மொழி வளர் பகைமை இலாமல்
எளியவன் உடையவன் என முரணாமல்
அனைவரும் ஒரு சமம் என விலகாமல்
அனை இரு பத மலர் தொழுதிட வாரும் – குடி

★★★

## தாய்நாடு போற்றுவம்!

பல்லவி

தாயே எங்கள் தவத்திரு நாடே
தருவோம் எல்லாம் உனக்காக!

சரணங்கள்

சிந்தனை வாக்கு செயல் இவை யாவும்
தேவி உனது பணிக்காக!
வந்தனை செய்துனை வணங்குதலொன்றே
வழிபடும் மதமாய் எமக்காகும்! – தாயே
உடல் பொருள் ஆவி உழைப்பெனும் யாவும்
உனக்கே சமர்ப்பணம் முழுதாக!
இடர் துயர் ஏதும் உனை அணுகாமல்
எமதுயிர் காவல்! எழு தாயே! – தாயே

கவிதைகள் வனைவதும் காவியம் புனைவதும்
கலைகளில் முனைவதும் உனக்காக!
புவியெலாம் உன் பெயர் புகழ் வரலாறுகள்
புகல்வதும் எம் உயிர்த் தவமாகும்! – தாயே

# அன்னை இலங்கை

## கண்ணிகள்

அன்னை இலங்கையின் பொன்னடி போற்றி
அல்லும் பகலும் அவள் புகழ் சாற்றி
பண்ணில் அவள் உயர் பண்புகள் ஏற்றி
பாடிடுவோம் வாரீர்!

கண்டியில் மாத்தளை காலியில் தெற்குக்
கரைகள் துறைகளில் வாழ்ந்து செழித்திடும்
திண்டிறல் வீரியச் சிங்களர் போதித்
திருமறை ஓம்பிடும் ஊர் – அன்னை

தேனில் இனித்திடும் செந்தமிழ் பேசி
திருமலை யாழகம் சேரும் கிழக்கினில்
மீனிசை பாடிடும் மட்டுநகர் மிசை
மேவும் தமிழ் ஓசை – அன்னை

மாநபி நாயகம் சொன்ன வழி நின்று
மன்னும் மணிகள் மரகதக் கற்களின்
வாணிபம் செய்து வளங்கள் சுரந்திங்கு
வாழும் திரு நாடு – அன்னை

மேற்றிசைச் சீமையின் மேன்மை பொலிந்திட
மேவிய சீரிய பண்பு செறிந்திட
ஆற்றல் மிகுந்த பரங்கியர் குடி
அணைந்து மகிழ் தேசம் – அன்னை

பண்டைய தேசியப் பண்புகள் ஓம்பிப்
பகுத்துண் டெளிமையில் செம்மை நலம் செய்து
நன்றென முந்தையர் கண்டவை போற்றி
நடந்திடும் வேடுவர் பார்! – அன்னை

சிங்களர் சோனகர் வேடர் பரங்கியர்
செந்தமிழ் மக்கள் அனைவருமாய் இங்கு
பங்கமிலாதைந்து பாண்டவர் போல் ஒன்று
பட்டுழைப்போம் வாரீர்! – அன்னை

## சட்ட விரோதம்!

ஆண்டிடுவோர் செய்கை இது
விந்தை விந்தை
அச்செய்கைத் தன்மையினை
என்னென் போம் நாம்!

மாண்டிடுவார் அனேகர் கத்தி
முனையில் என்று
மழுங்கு முனைச் சிறு கத்தி
யில்லா தொன்றைத்

தீண்டவுமே கூடாதெனச்
சட்டஞ் செய்தார்
தீங்கொழிந்த தென; அந்தோ
சட்டம் மீறி

நீண்ட வொரு கத்தி தனை
நிமிர ஏந்தி
நெடுந்தடியில் கொலைச் சிங்கம்
பறக்கலாமோ?

18.3.1951 சுதந்திரன்
ஞாயிறு இதழில் வெளியானது

★★★

## பொருள்வளம் பெருக்கிடுவோம்!

பல்லவி

வளங்கள் பெருக்கிடுவோம் – இனி
இலங்கை மணித்திருத்தேசம் நிமிர்ந்தெழ

அனுபல்லவி

தோழமை பூண்டு தொழில்துறை ஆண்டெம
தீழ நன்நாட்டில் இருப்பவர் யாவரும் – வளங்கள்

## சரணங்கள்

1. ஈழத் துணவினை ஏற்றுமதி செய்து
வாழப் பிறர்க்கு வழிவைத்த நாள்வந்து
மீளப் பயிர்கள் மிக விளைத்தே வளம்
சூழத் தரைதொறும் ஏரைச் செலுத்தி எம் – வளங்கள்

2. சேலைத் துணிகட்கும் சீமையை நோக்கி
மேலைச் சொகுசை விலை தந்துவாங்கி
நாளைக் கழிக்கின்ற நாண நிலை விட்டு
நூலைத் துணிநெய்யும் ஆலை அமைப்போம் – வளங்கள்

3. காசைக் கடல் கடந்தே பிறநாட்டில்
வீசக் கெடும் எங்கள் தேசச் சுபீட்சம்
நாசத்தை நீக்கி உள் நாட்டில் தொழில்தலம்
வாசற் படிக்கொன்று வைத்துப் பிழைப்போம்! – வளங்கள்

4. எங்களின் தேசம் வளங்களிலே பின்
தங்கி விடாமல் தகுந்த விதத்தில்
பொங்கும் நவீனப் பொருள்கள் புனைந்துல
கெங்கும் அனுப்பிவைத் தீட்டிடுவோம் பணம்! – வளங்கள்

5. ஆணியும் மீன்பிடி தோணியும் தென்னம்
பாணியும் பல்வித பேணியும் நாரில்
கோணியுமாய் விதம் கோடி உற் பத்திகள்
பேணிப் படைத்துப் பெருக்க வழி செய்வோம் – வளங்கள்

6. மெத்த வளங்கள் மிளிர்கின்ற ஊர்களில்
எத்தனையாய் நவ மார்க்கங்கள் உண்டோ
அத்தனையும் கற்றுக் கொண்டவ் வழியினில்
சுத்த சுதந்திரச் சோதியில் நிற்போம் – வளங்கள்

7. சாதி இனம் மதம் பாஷை குலங்கள்
ஆதிய பேதம் அனைத்தும் களைவோம்
மேதினி மீதெவ ரோடும் சமன் நின்று
தீதின்றி ஈழம் திகழ்ந்திடச் செய்வோம்! – வளங்கள்

# நானோர் இலங்கையன்!

பல்லவி

இலங்கையன் என்றதும் என் இனம் சாதி மதம்
எல்லாம் மறந்தேனே!
நிலம் ஒன்றிலே பிறந்தால் நெறி குலம் யாவும் ஒரே
நிகர், நேர், சமம் தானே!

சரணங்கள்

1. எங்கிருந்தோ இலங்கைத் தங்கத் திரு நிலத்தை
எய்தி அரசு செய்த வெய் தொலை நாட்டினரைச்
சிங்கம் நிகர்த் தெதிர்த்தோர் சிங்களரோ, தமிழத்
தீரர்களோ, பிறரோ, தேசப் புதல்வரன்றோ!
– இலங்

2. வீதிய பண் டாரன், வீ ரா சாமி என்ன,
வீரன் கெப்பிட்டிப்பொலை, வேறும் அநேகரென்ன,
சாதி மதத்தினுக்கா, தாய் நிலம் மீள்வதற்கா
தங்கள் உயிர் பலியாய்த் தந்தனர்? நாட்டினுக்கே!
– இலங்

3. பாரன் சயத்திலகன், பொன். ராம நாதன் முதற்
பற்பலரும் எமக்குப் பொற்புச் சுதந்திரத் தேன்
சேரமுனைகையிலே சிந்தனை தம் இனத்துச்
சேமத்திலா பிறந்த தேசத்திலா பதித்தார்?
– இலங்

4. நாவலன், சித்தி லெவ்வை, நல்அனகாரிகன் என்
நாட்டினராய்ப் புகழை நாட்டினர் என்பதெண்ண
மேவும் களிப் புளத்தில்! மேதினி மீதில் இன்றும்
வியப்புக்குரிய ஒரு விந்தைச் செயல் புரிந்தான்
– இலங்

5. பொன்னம்பெரு மானனும் புலமை விஞ்ஞானிஒரு
புட்டியிலே மனிதப் புத்துயிர் தோற்றுவித்தல்
ஒண்ணும் என்றாய்ந்து கண்டான் உலகில் முதன்முதலில்
'ஒ'வென்று மாந்தரினம் யாவும் வியக்க; அவன்
– இலங்

6. எதிர் வீரசிங்கம், நவ ரத்தினசாமி, மற்றும்
இளைஞன் ஆ னந்தனும் கா மினியும் லொறேன்இரத்னம்
முதலியரும் பிறரும் முதன்மை பல் துறைகளில்
முனைந்து பெற்றார் எனுங் கால்முகிழ்ப்ப தென்நாட்டி லன்பே
– இலங்

7. நானவன் நானிவன் என் நல்லினம் சாதி மதம்
நல்லது வல்லதென்று நாத்தடை வேலியிட்டே
ஈனமுறா துறையும் ஈழமணித் திருத்தாய்
ஈன்ற மகார் எனும் நல் இணைப்பில் மனம் செலுத்தி
– இலங்

★★★

## மீனவ சங்கற்பம்!

### கண்ணிகள்

1. அலையோடும் வலையோடும் மலையாமல் விளையாடிச்
சளையாத வீர மனமே! – நாளை
விடிவோடு புது வாழ்வு திடமாக வருமென்று
தளராமற் கூறு மனமே!

2. குலபேதம், இனபேதம், மொழிபேதம், மதபேதம்
இலையாகும் திரு நாட்டிலே – நாங்கள்
நலமாக சுகவாழ்வு பெறுமாறு வருமாண்டு
தரும் உண்மைப் பேறு மனமே !

3. வளர்கின்ற நிலவோடு வருகின்ற புத்தாண்டு
வளமெலாம் கொண்டு வருமே ! – எங்கள்
இளமாந்தர் எதிர்கால நலமோங்க ஒன்றாக
எழுவார்கள் தேறு மனமே !

4. கடல் சூழும் எழில் நாடெம் தாய் நாடு மணிநாடு
கரை சேர வழி காணுவோம் ! – எங்கள்
உடல், ஆவி, பொருள் யாவும் எமதன்னை உயர்வுக்கு !
உறுதிகள் உடன் பூணுவோம் !

5. உலகோடு சமமாக ஒரு தேச மக்களாய்
ஒன்றித்து முன்னேறுவோம் – கடல்
அலை வீழும்; எழும்; ஆழி அழியாது; கடல்போல
அகிலத்தை வென்றாளுவோம் !

# சமாதானத் தூதுவன்

ஆண்: பெண்

பல்லவி

இருவரும் – சித்தார்த்தா மீண்டும் வாராயோ ?
சீர்கள் எலாம் எமக்குத் தாராயோ ?

சரணங்கள்

1. பெண் – கத்தும் கடல் இடையில் முத்தாய் ஒளிரும் எங்கள்
தாய் நாடே இந்த இலங்கை நிலம் !
ஆண் – சித்தத்தமைதி கண்ட சுத்தன், கருணை வள்ளல்
புத்தன் பதம் பதித்த புனிததலம் – இங்கே

இருவரும் – சித்தார்த்தா மீண்டும்

2. ஆண் – கோலியர் சாக்கியர்கள் கொண்ட பகைமை முற்றிக்
கோரச் சமர் புரிந்தார் ஒரு நதிக்காய் !
பெண் – வேலிச் சமர் இதுவோர் கேலிச் சமர் என நீ
விளக்கி, அமைதிவர வழி விதித்தாய் ! இங்கே

இருவரும் – சித்தார்த்தா மீண்டும்

3. பெண் – "மண் என்ன மேலானதா மக்களை விட? "என்றாய்
மக்கள் திரண்டு வந்தார் "இல்லை"என்றார் !
ஆண் – "தண்ணீரினும் தாழ்வா குருதி?" என்றாய் – "இல்லை
சாந்தி சமாதானம் பெரிது" என்றார் – இங்கே

இருவரும் – சித்தார்த்தா மீண்டும் வாராயோ ?
சீர்கள் எலாம் எமக்குத் தாராயோ ?

# இலங்கை பற்றி ஓர் அங்கதக் கவிதை

பல்லவி

வாழ்க வாழ்கவே !
வாழிய இலங்கை மணித்திருநாடு – வாழ்க ....

சரணங்கள்

இயற்கை வளம்

சரியும் மலைகளும் பெருகும் ஆறும்
சாயும் மரங்களும் மாயும் பயிரும்
அருகும் இயற்கைச் செல்வமும் யாவும்
அனந்தம் எங்களின் அற்புத நாட்டில் – வாழ்க...

இனம்

சிங்களவர், தமிழர், சோனகர், பரங்கியர்
சீமையர், இந்தியர், பாகிஸ் தானியர்
தங்களுள் தாமே சண்டைகள் போட்டுச்
சாவதும் வாழ்வதும் எங்களின் நாட்டில் ! – வாழ்க...

சமயம்

சைவம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம்
சகல மதஸ்தரும் ஒருவரையொருவர்
வைவதும், அதனால் குரோதமும் பகையும்
உய்வதும் எங்கள் உயர்வுறு நாட்டில் ! – வாழ்க...

மொழி

சுத்தத் தமிழுடன் சுவைதரும் ஆங்கிலம்
சித்தத் தெமக்குப் புரியாச் சிங்களம்
அத்தனை மொழியிலும் அரற்றுவோம்; அவற்றின்
அர்த்தம் அறியோம்; அடி பிடிப்படுவோம் – வாழ்க...

கலை

தந்தனத் தானா தானா என்று
தாளம் பிசகிக் குதிப்பதெம் நடனம்;
'அந்தோ' என்றிசைக் குரவையும் வைப்போம் !
அருங்கலை வளர்க்கும் எம் அழகுறு நாடு – வாழ்க...

வீரம்

கொலைகள் மலிந்த திங் கென்றெவன் கூறினும்
"கொண்டுவா துவக்கெ" னக் கொடுக்கை வரிப்போம்
கலைகள் எமக்குக் கத்தியும் கம்பும்
கஞ்சாக் குடியும் பயிலுதல்; என்றும் – வாழ்க...

கொள்கை

ஊரும் சிறிய எறும்பையும் நசியோம்
உணவுக்காக உயிர்வதை செய்யோம்;
யாரும் எம்முடன் முறைத்தால், அவர் பிழை
ஒரும்படியாய் உயிரைக் குடிப்போம் – வாழ்க...

அறம்

மானிடர் உயிரை மதிப்பதெம் நாடு !
மாரகர் தமக்கும் மன்னிப் பருளி
மரண தண்டனை யொழித்த தெம் நாடு !
மானிலத் தெங்கணும் எமக்கிலை ஈடு – வாழ்க...

அரசியல்

அரசியல் வெத்துவேட்டுக் கலையில்
ஆனா முதல் அஃகன்னா வரையும்
அலசிக் குடித்த அறிஞர் எமைப் போல்
ஆருளர்; இதில் நாம் அனைவரும் மன்னர் ! – வாழ்க...

★★★

# புலவன்
# மனங்கவர்ந்த
# பொன்னாடுகள்!

# புலவன் மனங்கவர்ந்த பொன்னாடு !

யான் மதிக்கும் நாடிந்த ஞாலத்தில் ஒன்றுளதேல்
சீனத் திரு நாடு ! தேவருறை வானகத்தைப்

பூதலத்தில் மானிடரே புனைந் தமைத்த பொற் தேசம்!
பேதமனைத்தும் பிடி சாம்பர்செய் தொருமைப்

போதம் மலர்ந்த பொதுவுடைமைப் பூந்தோட்டம் !
ஓதரிய பேறெல்லாம் ஓங்கி வளர் தீங் கோட்டம் !

ஐயைந்து நூற்றாண்டுக் கப்பாலும் வேரோடி,
வையம் தரிசாய் வறிதே கிடந்த பழங்

காலத்தும் நாகரிகங் கண் டவ் விருள் யுகத்தும்
சாலச் சிறந் தொளிர்ந்த சால்புற்றுப், பழமைக்கும்

பழமை மிகுந்த பதி ! பாங்காய்ப் புதுமையெனும்
இளமைக்கும் சீரிளமை எழில் பெற்றிலங்கிடும் ஓர்

அற்புதத்தின் அற்புதம் ! இவ் வகிலம் முழுவதுமே
பொற்புறு மா றோங்கும் புரட்சிக்கு மார்க்கத்தைக்

காலாதி கால முதற் காட்டி நிற்கும் வரலாற்றின்
மூலாதி மூலம் ! முதல் நூற்றாண் டாரம்பக்

காலத்தினில் 'பச்சைக் கானகத்துச் சேனை'[1]யினை
ஞாலம் வியக்க நடத்தி 'வங் மாங்'[2] ஆட்சியினை

வீழ்த்தியதும் எங்கே ? நாள் விரைய மறு நூற்றாண்டின்
ஈற்றினிலே 'சங் சியாவோ'[3] என்னும் ஒரு மாவீரன்

'மஞ்சட் தலைப் பாகை மறவர் படை'[4] நிறுவி
வெஞ்சமரிட் டாட்சி வெறியாட்டமாடிய 'ஹான்'[5]

காணி முதல்வருக்குக் கடுக்காய் கொடுத்த தெங்கே ?
ஊணின்றி வாட்டமுற்ற உழவர் படை திரட்டி,

ஒன்பான் நூற்றாண்டினிலே 'உவாங் சாவோ' [6] என்றொருவன்
வன்பான் நிலத் தாண்மை வர்க்கத்தைச் சாய்த்த தெங்கே?

ஈரேழாம் நூற்றாண்டில் 'இலியூஃபூ துங்' [7] என்பான்
சீரேறும் 'செங் குல்லாச் சேனை' [8] யினைப் பாட்டாளித்

தோழரினால் உண்டாக்கித் துரைத் தனத்தார் கொட்டத்தைக்
கீழமர்த்தி வென்ற தெங்கே ? 'லீத்சூ செங்' [9] பதினேழாம்

நூற்றாண்டுப் பஞ்சத்தில் நுடங்கிய தன் தேசத்தின்
ஏற்றத்திற் கண் செலுத்தி ஏழைகளின் பட்டாளச்

சக்தியினால் மாபுரட்சிச் சாதனையைச் செய்ததெங்கே ?
எத்திசையும் புகழ் வீசி எழில் சாருஞ் சீனத்தில் !

நஞ்சாம் அபினை அந்த நாடனைத்தும் ஊடுறுத்த
வஞ்சத் தனமாய் வலை விரித்த ஆங்கிலரின்

ஆதிக்க ஆட்சிக் கடிமைப் படாத வண்ணம்
மோதிப் பரரை முறியடிக்கச் 'சிந்தியனில்' [10]

'தாய்ப்பிங்' [11] புரட்சி தலையெடுத்து வென்றதெங்கே ?
"வாய்ப் பிந்த வேளை; உடன் வளைத்திடுவோம் சீனத்தை"

என்றொருங்கே கூடி வந்த இத்தாலி, ஆஸ்திரிய
ஹங்கேரி, யப்பான், கனதனஞ்சார் அமெரிக்கா,

ஜேர்மனியும் பிரான்சோடு ஆங்கில நாடின்னவையும்
ஜார் ஆண்ட ரஷ்யாவும் போர்தொடுத்த வேளையிலே –

எண் நாடுங் கூடி எதிர் கொண்ட வேளையிலே –
திண்ணார் புரட்சித் தினவேறித் தாய் நாட்டைக்

காப்பதற்காய் 'ஐ ஹோ துவான்'[12] களப்படை நின்றார்த்த தெங்கே?
மாப் புகழார் சீனத்து மண்ணில் ! முடியரசை

நீறாக்கி, குடிமக்கள் நெஞ் செழுந்த தீகொண்டு,
மாறாட்டம் செய்த பொதுமக்களெதிரி 'ஷியாங்' [13]

கும்பலினைச் சுட்டெரித்த குடியாட்சிச் செஞ்சீனம்,
உம்பர் பொறாமைக் குரித்தான புவிமோட்சம் !

பார் ஆதித் தோற்றப் பருவம் முதலாகப்
போராடிப் போராடிப் புரட்சிக்காய்ப் போராடி,

வீரச் சமர்க் களத்தில் விழுப்புண்தழும்பேறித்
தீரஞ் செறிந்த திரு நாடு சீனமலால்

வேறுண்டோ ? உண்டோ ? இவ் வியனுலகின் தேசமெலாம் !
வீறுண்டு, புரட்சி விளைந்து, பொதுவுடைமை

பூப்பதற்கு வழி காட்டும் புதுச் சீனப் பாதையலால்
ஏற்பதற்கு வேறுண்டோ ? "என்னுடைய காரியங்கள்

முற்றுப் பெற்றாகி முடிந்தன" என் றோயாமல்,
மற்ற மற்றத் தேசத்தும் மானிடர்கள் தேவர்களாய்

ஏற்றம் பெறு மாறின் றெழுச்சிப் பெரும் பணிகள்
ஆற்றும் திருத் தேசம், அகிலப் புரட்சித் தாய்,

செஞ் சீனம்! ஆசியத்தைத் தீண்ட வரும் ஆதிக்க
நஞ்சீனும் பாம்புகளை 'நாட்டோ'[14] வின் கூட்டைவிட்டு

நீட்டித் தலை காட்ட நினையாதீர் என்று பயங்
காட்டி யொடுக்கி வைத்துக் காவல்செய்யும் வெண்கீரி

தென் கொரியப் பாதி படு தேசத்துச் 'சிங்மன் றீ' [15]
என் பொடியச் செய்தது போல், இவ்வுலகத் தேசமெங்கும்

மன்பதைகள் எழுச்சிக்கு மார்க்கத்தைக் காட்டவந்த
மின்விளக்கு ! நவயுகத்தின் விடிவெள்ளி ! மக்களெலாம்,

காணியுள்ள இடமெங்கும் கை கூடிப் பயிர் செய்து,
நெல்லுள்ள இடமெல்லாம் நெருங்கியிருந்தொருங்குண்டு,

ஆடையுண் டெங்கானாலும் அனைவருமாய்ப் பிரித்தணிந்து,
பணமுண்டேல் யாவருமாய்ப் பகிர்ந்தே செலவு செய்து,

பொதுமையிலே பூரித்துப் புளகாங்கிதமடையும்
புதுமைமிகும் சீனம் அதைப் புறம்படுத்தி 'ஐக்கிய நாட்

டாஸ்தானம்'[16] மதிக்கா தகற்றியுமென் ? யான் மதித்துப்
போற்றுகிறேன்; செஞ்சீனப் பொன்னாடே ! வாழிய நீ !

"யுவசக்தி" அக்டோபர் 1963.

குறிப்புகள்.

1. Green Wood Army A. D. 21
2. Wang Mang: A. D. 9-A. D. 23
3. Chang Chiao
4. Yellow Turbans Uprising - A. D. 184
5. Eastern Han Dynasty: A. D. 24 - A. D. 219
6. Huang Chao: A. D. 875 - A. D. 880
7. Liu Fu - Tung
8. Red Turban Army: 1355 - 1359
9. Li Tzu - Cheng - 1644
10. Chintien Uprising: 1840 - 41
11. Taiping Revolution: 1851 - 64
12. I Ho Tuan Movement: 1900
13. Chiang Kai-Shek
14. NATO
15. Singman Rahee
16. U. N. O.

# மாட்சி பெற்றிலங்கும் கியூபா

ஆங்கில மூலம்:
இ. ஆர். எஸ். ஆர். குமாரஸ்வாமி

டிசெம்பர் 1963

*வீரமிக்க கியூபா மக்கள் தமது புரட்சியின் 7வது ஆண்டு தினத்தை ஜுலை 26 ஆந் திகதி கொண்டாடினர். அவர்களுக்குப் புரட்சி வணக்கம் செலுத்து முகமாகக் கவிதாஞ்சலி செய்கிறோம்.*

கண்டவர் மனங்கள் கவ்வும்
கவின் மிகுந்தீவம் தாயாய்க்
கொண்ட பல் இனங்கள் ஒன்றாய்க்
கூடியே ஓம்பும் சீர்கள்
கண்டு யான் வியந்தேன்; சற்றும்
களைப்பிலா துழைக்கும் மாந்தர்
மண்டும் ஓர் தலமாய்க் கியூபா
மாட்சி பெற்றிலங்கக் கண்டேன் !

பணவெறி மயக்கால் ஏதோ
பசப்பிடும் அமரிக்கா வாழ்
குணமிலார் பொய்கள் கோடி
கூறினும் கியூபாத் தேசம்
திணமுளார் தேசம் ; மேன்மைத்
தீரரின் தேசம்; நாட்டைக்
கணமெனும் மறவா நோன்பே
கருமமாய் வரித்தோர் தேசம் !

"வேண்டுவ தெல்லாம் நாட்டின்
விடுதலை ஒன்றே!" என்னும்
தூண்டுதல் கிளர்த்தும் வீரச்
சுதந்திர வேட்கைச் சங்கம்
மூன்றுடன் இரண்டே ஆண்டின்
முன் பொலி முழக்கிற்றாங்கே;
பூண்டனர் போரின் கோலம்
பொள்ளெனத் தேச மாந்தர்!

ஏனும் ஆண்கள் பெண்கள்
எல்லவர் களுமே தம்பே
ராண்மை தாய் நாட்டின் மீட்சிக்
கர்ப்பணித் துயிரும் நீக்க
"நானிதோ, நான், நான்!" என்றார்;
"நாட்டினுக் களித்தற் கன்றி
ஏனுயிர் ? ஏன், ஏன் ?" என்றே
எழுந்ததோ கோஷம் எங்கும் !

காணுதற் கரிய மேலாங்
கற்பகன் கஸ்ட்ரோ பூண்ட
சேனுயர் தலைமை கொண்டு
செலுத்தினர் மீட்சிப் போரை;
ஊனுடை இலராய் மக்கள்
உழல்கையிற் சுகித்தோர் கூடத்
தோணியைப் பிடித்தார் நாட்டைச்
சுரண்டினோர், துரத்தப் பட்டே !

கரிபியன் கடலின் ஓரம்
சார்ந்த நாடடங்கும், "பாரிற்
சரி எதோ, நீதி ஏதோ,
தரிப்பதும் அதுவே!" என்னும்
தெரிநிலைச் சான்றாய், மேன்மைத்
திருமிகும் பொதுமைத் தீபத்
திரியுமாய்ச் சுடரக் கியூபாத்
தேசமிங் கெழுந்த தின்றே!

"தம்மைத் தாம் ஆட்சி செய்து
தம் வழி தாமே செல்லும்
செம்மை சால் வழி அந் தந்தத்
தேசத்தின் உரிமை" என்றே
இம் மகி தலத்தின் மேற்கே
எய்து வல் லரசார் கையிற்
பொம்மையாம் தேசத்தோர்க்குப்
புகட்டிடும் பாடம் கியூபா !

அச்சுப் பேய்த் தமுக்கால், ஆள்வோர்
அறிக்கையால், அமரிக்கா தன்
பொய்ச் சுழல் பெருக்கித் தன்னூர்ப்
பொது மகார்க் குண்மை மூட
நச்சினும், உலகம் கியூபா
நாட்டிய நீதி கண்டு
மெச்சி அங்கின்று பூக்கும்
மேன்மையை வியந்து போற்றும் !

பரர்க் கடி தொழுதல், வேற்றோர்
பணப் பொருள் வேட்கை தீர்தற்
குரப் பொருளாதல் யாவும்
ஒழிந் துயர்வடைந்து வாழ்க்கைத்
தரத்தினில் கியூபா மக்கள்
சமத்துவம் ஓம்பித் தங்கள்
கரத்தினில் தமது நாட்டின்
கால நற் பலனைக் கொண்டார் !

அன்னவர் உளத்தில் இவ்வா
றரும்பி இன்றலர்ந்து பூக்கும்
உன்னத உணர்ச்சி, சோரா
துழைக்கும் ஒவ்வொருவர் கைக்கும்
பொன்னொடு பொருளும் சுவர்க்க
போகமும் வாய்க்கு மாறு
நன்னலம் விளைக்கும்; கியூபா
நாடெலாம் செழிப்பில் வைகும்!

தூய்மையில் வாய்மைப் பாங்கில்
தோய்ந்த அந்நாட்டார் தம்மைச்
சேய்மை நாடுறைவோன் நாடிச்
சென்று நோக் கியற்றுங்காலை
வாய் வயமிழந்து நெஞ்சால்
வணங்குத லொன்றே வல்லோ
னாய் அயர்ந்திருந்தேன்; கியூபா
நாட்டை என்நாவே போற்றாய் !

இங்கிதம் பொலியும் நாடே !
இடர் பல எதிர்ப்பட்டாலும்
பங்கமே புரிதற் கொண்ணாப்
பகைவர்கள் சதிப் பட்டாலும்
தங்கரம் துணையாய் என்றும்
தருவதற் குலகத் தேசத்
தெங்கணும் உள்ளார் நண்பர்;
எழு புகழ் கதிர்த்தே வாழ்வாய் !

# கார் நிறத்துப் பூ பொலிந்து காங்கோ இனித் தழைக்கும் !

பட்ரிஸ் லுமும்பா

ஓ ! நீகிரோத் தோழ !
ஓயாத் துயர்க் காட்டில்
ஓராயிரம் வருடம்
உழன்றாய் வனவிலங்காய் !

பாலைவனப் பேய்க் காற்றில்
படரும் புழுதியெல்லாம்,
சூளையிலிட் டுன் னுயிரைச்
சுட்டெரித்த நீறாச்சு !

மற்றவரைப் போல் நீயும்
மானிடன்தான்! "வெள்ளைத் தோல்
கொற்றவரே கடவுளர்கள்;
கோரும் வரங்களெலாம்

நல்குவர் "என்றுரைத் துன்னை
நம்பிடுமா றேவுகிறார் !
இல்லமற்று அந்நியரின்
இருப்பிடத்து வாசல் தொறும்

கூவி இரப் பவனின்
குரலை ஒலி இழைந்துன்
பாவினிலே கேட்கும்
படி, ஆங்கோர் தீக் குவியற்

பக்கம் அமர் ந்துன் துயரப்
பாடல் முனகுகிறாய்!
துக்கமெல்லாம் தீச்சுடரின்
துடிப்பில் மறைகிறது !

வானத்தில் உதயம், அதோ
வந்தது பார், சோதரனே !
வானத்துச் சோதி உந்தன்
வதனத்தில் வந்தது பார் !

பண்டைச் சீர் பூத்துப்
பல்கிடுமோர் ஆபிரிக்கா
கண்டத்தில், புத்தொளியின்
காலை பிறந்தாச்சு !

நீடு வளம் பெருக்கும்
நீரும், பே ராறுகளும்,
நாடும், இனி அவர்க்கே
நல்லுடைமையாகி விடும் !

ஆண்டு பல ஆயிரமாய்
அப்பாவி நீகிரோக்கள்
மண்டியிட்டு நல்கி வந்த
மாச் செல்வம் அவர்க்காகும் !

சூரியனின் சக்திச் சுடர்
மீண்டும் அன்னவர்க்கு
வீரியமாய் வீசும்; அவர்
விழி நீரும், அவர் முகத்தில்

காறி உமிழ்ந்த
கழி நீரும் வற்றிவிடும் !
வீறு கொண்டு, விடு தலையில்
விழித்துச் சிலிர்த்தெழுந்து,

அடிமைத் தளையை அவர்
அறுத் தெறியும் போதினிலே
மிடிமைப்பிணி தொலையும்
மீண்டும் அது தோன்றாது !


கருமண்ணின் உரம் தின்று
காங்கோ துடித் தெழுந்து
பெருமையுடன் சுதந்திரமாய்ப்
பீடுநடை போடுமினி !

கருமண்ணின் உரம் தின்ற
கரும் விதையில் வேர்விட்டு
கார் நிறத்துப் பூ பொலிந்து
காங்கோ இனித் தழைக்கும் !

★★★

தமிழாக்கம்.

# அகம் — புறம்




(சில்லையூரார் 'அகம்-புறம்' என்பதற்கு அமைத்த வரைபு இது. கவிதைகளினிடையே காணப்பட்டது.)

## அசைவிலார் !

வென்றால் சிரசை மெல்ல
மேல் கீழாய் அசைக்கின்றேன்
தோற்றால் தோள் சற்றுயர்த்தித்
துணிக்கித் தணிகின்றேன்!
வெற்றியும் வெற்றியன்று;
தோல்வியும் தோல்வியன்று !
"பெற்றி" களை ஞான மனப்
பேரறிஞர் தாம் அறிவர் !

★★★

## விருந்தோம்பல் !

வாரும் விருந்தினரே !
யாரோ நீர் ? கேளோம் யாம் !
மனம் கூப்பி கை கூப்பி
வரவேற்கிறோம் உம்மை
நண்பர் எனில் ! அந்நியர்
எனில், அவ்வாறில்லை இனி !
பகைவன் எனில், எங்கள்
பாசத்தால் உமை வெல்வோம் !

★★★

## வார்த்தை பத்தில் வாழ்க்கைத் தத்துவம் !

ஒரே ஒரு தடவை சொல் எனக்கு !
இரண்டாம் தடவை சொல்ல வைக்காதே உனக்கு !

★★★

# மகளும் மகனும்

சின்ன இடை, சின்ன நடை
கன்னம் அடை, சொர்ணமுகம்
சின்னப் பேடை !
வன்ன உடை தரித்து நடம்
பண்ண, அவள் அரங்கேற்ற
வடிவம் கண்டு
மின்னல் எனப் பன்னி வரும்
கழல் எழிலில், கண் அழகில்
மிதந்தென் நெஞ்சம்,
என் அவளை, என் மகளை
அரவணைத்து, நெகிழ்ந்து, கனிந்து
உருகி நையும் !

மென் நடனச் சுழற்சியின் முத்
திரைகளினால் என் விழிகள்
நீர் பனிக்க
என் அடுத்த மழலை மகன்
இளம் கரத்தால் கண்வருடி
இரங்கல் தீர்த்தான் !
சொன் நடையும் பொருள் நடையும்
அணிநடையும் அன்னபிற
நடையும் வாய்ந்த
அன்ன நடைக் கலை நயங்கள்
அறிந்துணர்ந்தே உருகும் உளம்
அடைந்த பேறே !

15.03.90

★★★

## புரட்சி = காதல் !

புரட்சியின் மறு பேரன்று;
புரட்சியே காதலாகும் !
மிரட்சியை – சமயம், சாதி
மேட்டிமை, வயது, மற்றும்
புரட்டு வாதங்கள் பேசும்
புல்லருக் களித்து, அன்னாரை
விரட்டி ஈருள்ளம் வெல்லும்
வீரப்போர் காதலாகும் !

★★★

## உயிர் மூச்சு !

பேசிய செல்லப் பேச்சிற்
பித்து நான் கொண்டிருப்பேன் !
மாசிலா உந்தன் அன்பில்
மயங்கி நான் களித்திருப்பேன் !
நேசியே ! வெறிதாம் என்றன்
நெஞ்சிலே தென்றலாக
வீசிய அன்புக் காற்றே
வெற்றுடற்கு உயிர்மூச்சானாய் !

★★★

## மயக்கம்

தெரிவது போலிருந்தும்
தெளிவுறா நெஞ்சனாகிப்
பரிவிதென் றெண்ணி மேலும்
பாசமே கொண்ட தல்லால்
கருதியதில்லை அன்று இக்
காத்திரமான சேர்க்கை
மருவு மென்று; எனினும் இன்றோ
மாறிய தென் மயக்கம் !

## அன்புத் தளை

தாமரை மார்பிற் சூடத்
தருணம் ஒன்றுதயமாகும் !
ஓமத்தீ முன்னால் நின்றீர்
உள்ளமும் உருகி ஒன்றாய்த்
தாமணைந் திணைய அன்புத்
தளைப் படும் நாளின் பின்னர்
சாமமாய்ப் பகலாய் எந்தச்
சணமும் சேர்ந்துயிர்த்தல் சாலும் !

★★★

## தெய்வ சித்தம்

இப்படி ஆகும் என்று அன்று
எண்ணியதில்லை யேனும்
தப்பெனப் பிறகு கூறித்
தடுத்திட முயன்றே னேனும்
"எப்பிறப் பினிலும் சூழ்க
இப்பிணைப்பு" என்று தெய்வ
வைப் பிருந்தால் எவ்வாறு
மாற்றிடக் கூடும் எம்மால் ?

★★★

## ரயில் விடு தூது !

குக்கூ குக்கூ என்று
கூக்குரலிட் டென் நெஞ்சின்
திக்கிட்ட குரலை ஒலித்
தேம்புதலையே பிரதி
செய்தோடும் ரயிலரசி !
சேதி ஒன்றென் காதலிக்கு –
கண்ணிற் கருத்திற்
கலந்திணைந்த என்கமல
வண்ண மடவாளுக்கு –
வாழ்த்தி உரையாயோ ?

நாளும் பொழுதும், எந்
நாழிகையும், நாழிகையிற்
சூழும் கணந் தோறும்,
கணத்தின் ஒரு கூறு தொறும்,
கூறாம் கணத்தின் ஒரு
கோடி துகட் பொழுதும்
நீறாய்க் கனல்கின்ற
நெஞ்சோடிருந்தொருவன்,

'கோடி யுகங்களாய்க்
கூடி இணைந்தொருங்கு
பாடி உறவாடிப்
பல்லாயிரம் பிறப்பிற்
சோடிப் பறவைகளாய்ச்
சுற்றிக் களித்த' நினைவு
ஓடி மனத்தை
உலுக்கத், தனது துணை
இந்தப் பிறப்பினிலே
ஏன் பிரிந்த தென்று அயரும்

சிந்தையனாய் வாடுகின்ற
சேதியினைக் கூறாயோ ?
அந்த நினைவே அவ்
வாரணங்கின் உள்ளத்தை
நொந்துழல வைப்பதனால்
நொடியும் களிப்பின்றி
ஏங்கித் துடிப்பதனை
இவனும் அறிவான்; அத்
தாங்காத் துயரைத்
தகர்த்தெறிந்து வல்விரைவில்

முந்தியிருந்த நிலை
முகிழ்க்க வழிதேடி
வந்திடுவான்; ஆதலினால்
வாடாத தாமரையாய்,
அந்தத் தினம் வரையும்
ஆறி மனம் தேறி,
சிந்தும் நகைப்பும்
செழிக்கும் மனநிறைவும்

புந்தி பசிக்காப்

புசிப்பும் உயிர்ப்பும் உற்றுக்

கந்தம் கமழ்கின்ற

காரிகையாய், நம்பிக்கை

வைகும் மனவுறுதி

வாய்ந்திருக்கும் வாறாகச்

செய்கும்படி, தேற்றச்

செய்தியினைக் கூறிவிடு !

★★★

## வாணி தா மூன்று வரம் !

வாணி ! வாணி ! வா நீ ! வா நீ !
தமியேன் நெஞ்சத் தரிசனத் தவிசில் !
வா நீ ! வாணி , உன் வடிவம் தா நீ !
ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கின்றாய் !
அழகு மயில் ஒன்றருகிலே ! வெள்ளைத்
துகில் அணிந்து வெண் தாமரை மீதில்
வீணையும் ஏடும் விரல்களிலே செப
மாலையும் ஏந்தி, மந்த காசப்
புன்னகை தவழப் பூரணித்தாயே
வீற்றிருக்கின்ற விந்தைத் தோற்றக்
காட்சியில் உள்ளம் கரைந்து நெகிழ்கிறேன் !
கரிக் குறை விடாத கற்பூரத்தின்
சுடர் நிகர் ஞானாக் கினி எனும் ஒளியில் உன் !
தரிசனத் தத்துவத் தாற் பரியத்தின்
சூட்சுமக் கருத்தின் சுருக்கை அவிழ்க்கிறேன் !

வெள்ளைக் கலை ஏன் ? கள்ளச் சிந்தை
வெள்ளைக் கில்லை என்பதைக் காட்ட !
புள்ளியும் எழுதா வெள்ளைக் காகித
உள்ளம் படைத்த பிள்ளைகள் நிகர்த்த
மாசிலா வாழ்வின் மகிமையை விளக்க !

பாடை புகினும் ஏடது கை விடேல்
என்பதைச் சுட்ட ஏடு விடாக் கை !
"படித்ததை நித்தம் பாராயணம் செய் !
தியானம் என்றும் தேவை"! என்றெலாம் !
செப்பக் கையிற் செபத்திரு மாலை !
"மீட்டும் மீட்டும் மீட்டிக் கற்றதைச்
சாதகம் செய்தால் சாதனை கிட்டும்",
சித்திரம் கையிலும் செந்தமிழ் நாவிலும்
நித்தம் பழக்கி வைத்தல் சித்தி " என
விளக்கம் பெறக்கை விடாத வீணை !
இருளைக் கண்டால் இதழ்களை மூடும்
தாமரை ஆசனத் தமர்ந்திருப்பதும் ஏன் ?
காலையில் மலர்வதே கல்வித் தாமரை !
ஞானக் கதிரின் ஒளி பெற்றொளிரும்
உள்ளத் தாமரைக் குயர் உவமானம் !
மயிலோ ஆணவ மலமாம் பாம்பை
அடக்கும் சின்னம் ! ஆற்றைப் போன்றே
கலைப் படைப் பாற்றல் சீர் கதியிலே அமைதல்
வேண்டும் என்பதை விளக்கும் ஆற்றங்கரை !
வாழ்க்கையும் ஆறு போல் மேடு, பள்ளங்கள்,
மலைகள், சரிவுகள், மற்றெலாத் தடைகளும்
நெளிவு சுளிவுடன் நிமிர்ந்தும் பணிந்தும்
இழைந்தும் நுழைந்தும் கடந்து நடந்து
நானிலம் பயனுற நல்வழி காட்டும்
வாணியின் வடிவ வழிகாட்டலின் படி !
ஆவின் மலமாம் சாணியைச் சுட்டு
நீறெனப் பூசி எம் நெற்றிக் கண்ணைச்
சீருறத் திறக்கச் செய்தல், ஆணவ
மலத்தைச் சுட்டு, மாண்புறக் கலைப் படைப்பு
ஆகுதித் தீயின் ஆற்றலை ஓம்பும்
மார்க்கம் என்பதை வழுத்தும் காரியம் !
திரு நீறணிந்து திகழும் தேவியின்
அருளால் நுதற் கண் அடை படாச் சிறைப்படா
சிந்தனைச் சுதந்திரச் சித்தி நாம் பெறுவோம் !

சுதந்திரச் சிந்தனை குழந்தைகள் சொத்து !
வளர்ந்தோர் கூடிய வட்ட மேசையிலே !
வெள்ளைத் தாளிற் கரும் புள்ளி ஒன்றிட்டுக்
கருத்துக் கேட்டார் தலைவர் ! "வெள்ளைக்
கடதாசியில் ஓர் கறுப்புப் பொட்டு"
எல்லோர் பதிலும் இவ்வாறமைந்தது !
கட்டளைச் சட்டக் கட்டுகளில் சிறைப்
பட்டு வளர்ந்த பாவப் பிறவிகள் !
சின்னஞ் சிறுவர் சேர்ந்த ஓர் அவையில்
ஈதே கேள்வியை எழுப்பினேன் ஒருநாள் !
"நசுக்கிய மூட்டைப் பூச்சி" என்றொரு சிறு
பாலகன் சொன்னான் ! "இல்லை, இல்லை,
செத்த நுளம்பு" எனச் செப்பினான் மற்றவன் !
"முற்றுப் புள்ளி அது" – மொழிந்தான் ஒருவன் !
கட்டளைக் குட்படாக் கற்பனை வளத்தின்
சுதந்திரச் சிந்தனை குழந்தைகள் சொத்து
அதே காகிதத்தில் அருகருகாக
மேலே இருந்த தனித்த புள்ளியின்
கீழே இரண்டு புள்ளிகள் இட்டேன் !
"என்ன ஈதென்றேன்" "அடுப்பு" என்றொரு சிறு
மன்னவன் சொன்னான் ! மற்றவன், "இல்லை,
அஃகன்னா அல்லவோ, அது" என மறுத்தான் !
சின்ன என் புதல்வனைக் கேட்டேன் காட்டி !
என்ன அதிசயம் ! அதிசயன் அதனைச்
"சிவபெருமான் சிரசு" எனச் செப்பினான் !
எனக்குப் புரியவே இல்லை எதுவும்!
தாய்க்கும் சிதம்பர சக்கரம் பார்த்த
திகைப்பு ! விளக்கம் கேட்ட பின் புரிந்தது !
நெற்றிக் கண் மேற் புள்ளியாம் ! கீழே
நேத்திரம் இரண்டாம் ! முக்கண் சிவனார் !
மூன்று புள்ளிகளை மூடி ஓர் வட்டம்
போட்டால் படத்தில் புறப்படுவாராம் !
கட்டளைக் குட்படாக் கற்பனை வளத்தின்
சுதந்திரச் சிந்தனை குழந்தைகள் சொத்தே !

தாயே ! சரஸ்வதி ! தடைகளில்லாமல்
குழந்தைகள் போலே கோடி கோடிப்
புதுப் புதுக் கற்பனைப் புலமைத் திறன்கள்
செறிந்த எண்ணங்கள் சிந்தனை வனப்புகள்,
படைப்பின் ஆற்றற் பரிமாணங்கள்
நானும் அடைய நல்குன் பேரருள் !
என் மனம், வாக்கு, செயல் எலாம் இப்புவி
மன்குலம் உய்ய வழிசெயும் வகையில்
உன் வரம் வேண்டி, உய் வழி காட்டக்
கோரிப் பணிகிறேன் ! குல தெய்வீ ! என்
வாணி ! எனக்கு மூ வரம் அருள் தாயே !
மணவாளன் எனும் மாயக் குரலோன் !
தீபவர்த்தினி ராகம் இசைத்தே
எரியா விளக்கினை ஏற்றவும், வள்ளல்
அக்பரின் அரண்மனை அடுத்திசை வேந்தன்
தான்சன் என்பான் மேகராகக்
குறிஞ்சியை இசைக்கக் குளிர் மழை பொழியவும்,
மூவள வேந்தர் முன்னால் ஒளவை
வெண்பா இசைக்க வெறிதே கிடந்த
குறும்பனந் துண்டம் குருத்தலர்ந் தெழுந்து
மரமாய்த் தழைக்கவும் வைத்த கலாவதி !
பாரோர் உளங்கள் பண்படச் செய, அதே
மூன்று வன்மையும் வேண்டும் இன்றெனக்கே !
இருட்கணம் கப்பிய இதயங்களிலே
இலட்சிய வேட்கை எனும் பெரும்சுடர்த்தீக்
கொழுந்தெழுமாறும் கொடிய பாறைக்
கன்மன மாந்தர் கனிந்துளம் நெகிழ்ந்து
கண்ணீர் மழையினைப் பொழிந்திடுமாறும்,
பட்டுக் கிடக்கும் பாழ் மனங்களிலே
அன்பு அறம் அருள் முதல் அத்தனை பண்பும்
தழைத் தெழுமாறும், தமிழினைக் கருவி கொண்டு,
அற்புதக் கவிதைகள் ஆயிரம் ஆயிரம்
பாடிடும் வரமருள் பாதம் –
சூடினேன் சிரமிசை சுடர்கலைச் சோதியே !

# சங்கெடுத்து ஊது
# தமிழ்ச்சாதி பெருஞ்சாதி !

சாதி குலமென்று சமராடும் பேர்வழிகள்
நீதியென்றொன்றிந்த நீணிலத்தில் உள்ளதெனத்
தாமறியார் போலும்; அதன் தாற்பரியம் கற்றிருந்தால்
நாமறிவோம் அண்மையிலே நமதூர்க் கோவில்களிலும்
சிற்றூர்களிலும் இச் சீர்கெட்ட சாதிப்போர்
உற்றதொரு காரணத்தை ? உத்தமரே ! கேடுகெட்ட

சாதிக் கொடுமைக்கு – சமத்துவத்தைக் கொல்கின்ற
சாதிக் கொடுமைக்கு – சாக்காடு எப்போது ?

எங்களூர்த் தனபதியின் ஏக புதல்வனுக்கு
இங்கிலாந்தூரில் இவன் கறுப்பனென்பதனால்
சங்கைக் குறைவாகச் சங்கடங்கள் நேர்ந்துவிடின்
அங்கம் பதறி மிக அலமந்து வெள்ளையனின்
பேதக்குணத்தைப் பிழை யுரைக்கும் ஐயாக்கள்
பூதனையும் கந்தனையும் பொன்னியையும் வள்ளியையும்
திண்ணையிலே கால்வைக்க, திருக்கோயில் உள்ளில் வர,
ஒண்ணாத வாறவரை ஒடுக்கியடக்கி வைத்துச்

சாதித் திமிரிற் சழக்குரைப்பர்; எங்கள் தமிழ்ச்
சாதியோ ஆமாம்; தனிச்சாதி; பெருஞ்சாதி !

காளை ஒருவன் அதி காலையிலும் மாலையிலும்
நீளப் பனையளந்த நெற்றி வியர்வையுடன்
பாளை பிழிந்த பதநீர் கலந்து வரக்
காலைப் பிடித்துக் கடன் சொல்லிக் கள் இரந்து
வேளைக்கு வேளை விட்டு நிரப்பித்தன்
பேழை வயிற்றுள்ளே பிதற்றி வெறியாடும்.
சாலைகளில் தன் சபைகள் சந்திகளில் அந்த இளங்
காளையினைக் கண்டாலோ காறி உமிழ்ந்தவன் கீழ்ச்

சாதியென்று சாதிக்கும் சாதியெங்கள் சாதி !
சங்கெடுத்து ஊது தமிழ்ச்சாதி பெருஞ்சாதி !

பேனும் பொடுகும் பிடித்த தலைமயிரை
ஊனும், உதட்டின் உமிழ்நீரும் ஊறி மிக
ஈன உருக்காட்டும் இழிவான தாடியினைத்
தானீக்கி வேளைக்குத் தக்கபடி சிங்காரம்
பூணுவிக்கவோ, சவரம் புரியும் கலைஞனிடம்
கூனிச் சிரத்தைக் குனித்தே அவன் கைகள்
போன திசை போக்கும்; புறத்தோ அவனைக் கீழ்ச்

சாதியென்று சாதிக்கும் சாதியெங்கள் சாதி !
சங்கெடுத்து ஊது தமிழ்ச்சாதி பெருஞ்சாதி !

நாளும் பொழுதும் தன் நாற்றவுடல் உள்ளிருந்து
மீளும் அசுத்தத் தை மேவிஇரை கொள்கின்ற
பாழும் விலங்குகளைப் பசியாறும் தன்னுடலிற்
சூழும் அழுக்கிழிந்தால் தொடவும் கை கூசும், அதை
நாளும் அகற்றி நலிந்து புழுக்கடையின்
கூளத்தை, குப்பையினைக் கூட்டிச் சுகமாக
வாழவழி செய்து வருவோன் இவர் மலத்தை
ஊழ்வினையாற் தொட்டதனால் உதாசீனஞ்செய்தவன் கீழ்ச்

சாதியென்று சாதிக்கும் சாதியெங்கள் சாதி !
சங்கெடுத்து ஊது தமிழ்ச் சாதி பெருஞ்சாதி !

இழிகுலங்கள் என்றேதான் இயம்பும் குலத்தவர்கள்
வழி நடந்த வீதிவழியே நடப்பதிலும்
தொழில் செய்தே அன்னவர்கள் தொட்டுத் தமதுடலில்
வழியும் வியர்வையுடன் கலந்து தருவதனை
இழிவென் றொதுக்காமல் ஏற்றுண்டு வாழ்வதிலும்
வெளியில் அவர் வாங்கி விடுகின்ற காற்றினையே
பொழுதெல்லாம் சுவாசித்துப் பூரிப்பதிலும், ஒரு
பழிகாணா தவரைத் தன் பந்தியிற் பார்த்தாலோ கீழ்ச்

சாதியென்று சாதிக்கும் சாதியெங்கள் சாதி
சங்கெடுத்து ஊது, தமிழ்ச்சாதி பெரும்சாதி !

ஆமாம் தனிச்சாதி !
பெருஞ் சாதி !!

# இன்றுலக நனவெல்லாம்
# சென்றவரின் கனவன்றோ !

தினமும் விழிக்கையிலே கனவில் இனிக்கின்றேன் !
தினமும் விழித்தவுடன் கனவோ கசக்கிறது !
மனமோ விழித்தவுடன் மயக்கம் கலைகிறது !
அனர்த்த உலகத்தின் அர்த்தம் புரிகிறது !

யதார்த்தம் என்ற பதத்துக்குப் பதார்த்தம் கிடையாது !
சதார்த்தப் பொருண்மைதரும் சரித்திரங்கள் கிடையாது !
கனவுகளின் ஆனந்தம் நனவுகளில் கிடையாது !
கனவுகளில் வென்றவர்கள் நனவுகளில் தோற்றாலும்

வென்றவர்கள் ! வென்றவர்கள் ! வேறுலக வாழ்க்கைக்குச்
சென்றவர்கள் ஆனாலும் இவ்வுலகை வென்றார்கள் !
சென்றவர்களின் கனவே இன்றுலகம் ! இன்றுலகம் !
இன்றுலகம் வாழ்வதெல்லாம் சென்றவர்களின் கனவில் !
சென்றவரின் அடிச்சுவட்டில் !

இன்றுலக நனவெல்லம்
சென்றவரின் கனவன்றோ ?

★★★

# 'அசுணப் பறவை'
# - அல்லது -
# 'நான்'

மனதின் மூலை முடுக்கெல்லாம் மாலை மதிய மாருதமாய்
சுனையின் சுகிப்பாய் வசந்தத்தின் சுகந்த மாகச் சுழாவி வரும்
இனிய லயமே ! சுருதிகளே ! இசையே ! உம்மால் இருந்தேன் நான் !
பனியின் குளுமைச் சங்கீதப் பரிபாலனமே என் உயிரே !

(23.07.87)

★★★

## மனிதனுக்கு....

யானைக்குத் தும்பிக்கை !
மனிதனுக்கு நம்பிக்கை ! (23.07.87)

★★★

## முதலுதவி

எய்தவன் இருக்க அம்பை நோதல் தீதாம் !
தீது தான் ! எனின் அம்பால்
தீய்ந்தவன் பிழைத் தெழச்
செய்தலை மறந்து விட்டு, அம்பு
செலுத்தியோன் யாரெனத்
தேடிச், சலித்தல் அதனினும்
தீதே யன்றோ ?! (14.04.86)

★★★

## தடுமாற்றம்

ஏதேதோ பேசுகிறோம்; உரைப்பதில்லை !
என்னென்னவோ கேட்போம்; உறைப்பதில்லை !
ஏதேதோ காணுகிறோம்; பார்ப்பதில்லை !
எதும் செய்வோம்; எனின் எதையும் தீர்ப்பதில்லை !
ஒளிபரப்பி, ஒலிபெருக்கி, கணணி, மானி,
உத்திகளோ பலகண்டோம்; பார்க்கக், கேட்க
விழியிழந்து, செவியிழந்து, வினைகளுக்காம்
விளக்கமிழந் திழிந்து விட்டோம் மனிதச் சாதி !

★★★

## எதிர்பாராதவை !

குழந்தைக் கெப்போது புறங்கழியும் ?
கோதைக் கெப்போது சூதகம் படும் ?
கன்னி எப்போது பூப்பெய்துவாள் ?
கடலில் எப்போது புயல் கிளம்பும் ?
மனிதர்க் கெப்போது மரணம் வரும் ?
மையற் காதலும் அவ்வாறு தான் ! (06.04.94)

★★★

# மேல் அவனே !

தப்பிப் பிறந்த ஒரு மேதை, வெறும் போலிக்
கொப்பிப் படிப்பறிவுக் கோலனிலும் மேலவனே ! (07.04.82)

# மீட்சி விண்ணப்பம்

புற்றெறும்பு துதிக்கைக்குள் புகுந்த ஒரு யானையைப் போல்
சுற்றிச் சிரசைச் சுழற்றி, மர மனிதர்
மீதெல்லாம் மோதிமிடிமை கொள்ள வைக்காமல்
மாதடக்கும் பாகா ! நின் மகனாய் எனை எடுக்காய் !

*(இந்தக் கவிதைக்குச் சில்லையூராரே எழுதிவைத்திருந்த விளக்கம்: 'புற்றுச்சோறு' என்பது எலிப்புற்று, பாம்புப் புற்று, கறையான் புற்றில் எல்லாம், பண்டசாலையிற் போல விளைந்திருக்கும். அந்த வெள்ளைச் சோறு, யானைக்கு மிகப் பிடிக்கும். அதை உண்ண விழைந்து துதிக்கையாற் புற்றைச் சிதைக்கும் யானை. அப்போது தும்பிக்கைக்குள் எறும்பு நுழைந்து கடிக்கும். மூசினாலும் போகாது. புலி, சிங்கத்தோடு போராடும் யானைக்குச் சின்ன எறும்பு எமனாகும். மரங்களில் சிரசை மோதிச்சாகும். அதுபோல உலக இன்பங்களில் விழைந்து மாட்டிக் கொண்ட என்னைச் சிவனே ! பாகனாகி (சிலேடை–சிவன் மாதொருபாகன்) யானைப் பாகனைப் போல பிள்ளையாராய் ஏற்றுக்கொள்)*

★★★

# சிவ தாண்டவம்

மலைகளும் கடல்களும், மண்ணும் பற்பல
நிலைகளில், நர்த்தன நிலைகளில் நாட்டியம்
பயின்றன ! மலைகளில் பனிச் சதிர் ! கடல்களில்
ஒயில் அலைநடம் ! ஒகோ ! உலகம் நடுங்கிப்
பூமி அதிர்ச்சியில் புல்லரித்தது ! சிவ
சாமியின் ருத்ர தாண்டவம் !!

★★★ (23.07.87)

# மானப் பொற் கலைஞனாய் எனை ஏன் படைத்தனை ?

தணியாத் தாகத் தவிப்பில் துடிப்பினும்
மழைத்துளிக் கேங்கி மடியத் துணியும்
அசுணப் பறவை போல் அலமந்துலையும்
கலைஞனாய் என்னை ஏன் படைத்தனை இறைவா?

அணுப்பிரமாணச் சுருதி பிசகினும்
ஆற்றாது அனுங்கித் துளங்கி உயிர்விடும்
சாதகப் புள்போல் சாதா மனிதருள்
கலைஞனாய் என்னை ஏன் படைத்தனை இறைவா?

உயிர் வளர்வதற்காய் உண்டும் குடித்தும்
செயிர் வளர்க்கின்ற சேதாரங்களுள்
மயிர் ஒன்றிழியினும் மாயும் மான் போல்
மானப் பொற் கலைஞனாய் எனை ஏன் படைத்தனை ?

★★★

# தெரியாதவன்

கழிக்கவும் இழிக்கவும் இளிக்கவும் அழிக்கவும் அளிக்
கவும் ஒழிக்கவும் ஒளிக்கவும் குழிக்கவும் குளிக்கவும்
சுழிக்கவும் சுளிக்கவும் களிக்கவும் நெளிக்கவும் துளிர்க்கவும்
பழிக்கவும் மழிக்கவும் விழிக்கவும் விளிக்கவும்
தெரியாதவன் ஒளிர்க்கத் தெரியாதவன் (18.06.87)

★★★

# வெளியேறு !

சந்தையின் கூளச் சழக்கனே வெளியேறு !
வெள்ளையனை வெளியேறு வெளியே றென்றே கூவித்
துள்ளியவனே ! தூர்த்தா ! தூர்த்தா வெளியேறு !
வெட்கம் உனக்குண்டா ? உன் விடுதலைக்காய்க் கூவியவர்
பெட்பு மொழி விளக்கம் பேதையே தேர்வாயோ?

'குயிட் இந்தியா' என்று கூவிப் போர் தொடுத்தோரின்
'மயிட் இந்தியா'வே ! சீ ! மானம் இழந்து விட்டாய் !

தான் பெற்ற பொன் மகளைக் கற்பழிக்கும் பேய்மானி
ஏன் பெற்றான் சுதந்திரம் என்று ஏங்குகிறோம் ! பாதகனே !!

சாப்பாடு போட்டுத் தடவி வளர்த்ததெல்லாம்
கூப்பாடு போடவைத்துக் குதற நீ போட்ட திட்டம்

என்பதறியாமல் ஈழத்துத் தமிழ்க் கன்னிப்
பெண்பேதை செய்த பெரிய தவறுணர்ந்தோம் !

போடா போ ! உன்னுடைய பொய்ப்பேச்சும் பம்மாத்தும் !
கோடானு கோடிக் குலமரப்புப் பண்புகளைப்

பேணிப் பெருக்கிப் புறநானூற்றின் வீர
மானியங்கள் யாவும் இன்றும் மடியாமல் காத்துவரும்

செந்தமிழர் கூட்டத் திருமக்கள் நாங்களடா !
சொந்த மென்று தமிழர்க்கோர் சுயநாடு வாய்க்கும் என்றால்

அந்தத் தனிநாட்டை அமைக்கின்ற ஆற்றலினை
இந்த யுகத்தில் இறுதிப் படுத்திடவும்

உறுதிப் படுத்திடவும் உயிரைக் கொடுத்திடவும்
அறுதி உயில் எழுதி ஆர்க்கும் இனம் நாங்களடா !

கோழைப்பயலே ! குரங்காட்டம் ஆடி எங்கள்
ஈழத்தை எரியூட்ட எத்தனித்தாய் ! வரலாறு

மீண்டும் சுழல் தொடராய் மீளும் என்றோர் மேல்நாட்டு
வாண்டுப் பயல் சொன்ன வார்த்தைகளை நம்பி விட்டாய் !

ஊடல் எனக்கும் என் இணைப் பத்தினிக்குமடா ?
ஊடலைத் தீர்க்க உனக்கேதுரிமையடா ?

★★★

# முகில் விடு தூது !

வெள்ளிப் பனிப் படகாய் விண் கடலிலே பறந்து
செல்லுகின்ற மேகமே ! சில நொடிகள் தாமதித்து
நில்லாய் ! என் தாய் நாட்டை நீ தாண்டிப் போகையிலே
சொல்லாய், என் தாய்க் கென் சுகத்தைத் தயவு செய்து!
நல்லாய் இருப்பதாய் நவில் ! இங்கே நீ நேரில்
கண்ட தொன்றும் சொல்லாதே ! காதோடே நான் உனக்கு
விண்டுரைப்ப தல்லாத வேறொன்றும் கூறாதே !
சொந்தத் திருநாட்டில் 'சுயம்' இழந்து, மைதானப்
பந்தாய் உதையுண்டு பராதீனப் பட்டுப் போய்
வந்திந்த நோர்வே வள நாட்டில் கால் வைத்த
அந்தக் கணத்திலோ ஆயிரமாய்க் கற்பனைகள் !
சின்னப் பருவம் முதல் சீராட்டிச் சோறூட்டி
அன்னை வளர்க்கையிலே, ஆளாகப் பேராக
என்னைப் பயிற்றுவித்தே ஏற்றம் அடைய வைத்து
முன்னேற்றக் கண்ட மோனக் கனவுகளை,
ஒப்பேற்றி வைப்பதற்கோ ஒண்ணாமல் தாய் நாட்டில்
போய் விட்ட போதும், புது நாட்டில் வந்திறங்க
வாய்த்து விட்ட வேளையிலே, வருங் காலம் தாயாரின்
நேர்த்திகளை எல்லாம் நிறைவேற்றலாம் என்று
நெஞ்சுக்குள் தோன்றி நீண்ட பல கற்பனைகள் !
கல்வி தொடரக் கனா ! கற்றுத் தேறிய பின்
'சல்லி' மரம் காய்க்கத் தக்க தொழில் வந்து
சித்திக்கும் என்று கனா ! திரவியங்களைப் பெருக்கி,
ஊருக்கனுப்புவதோ, உற்ற குடும்பத்தார்
எல்லாரும் யாழ்ப்பாணத் திருந்து வர வைத்து
நோர்வேயில் வாழுவதோ என்றிரண்டும் கெட்டானாய்
மயக்கம் தருகின்ற மற்றோர் கனா ! அனைத்தும்
காற்றுச் சுழன்றடித்தால் கலைகின்றமேகம் போல்
ஆயினவே! ஆயினும் அதைப் போய் நீ சொல்லாதே !
கொட்டும் பனிக்குக் கொடுகி நடுங்கி, ஒரு
கிட்டங்கிச் சிற்றறையில் சிணுங்கி, அரை வயிற்றுப்
பட்டினியாய் – உண்டாலும் பழக்கமில்லாச் சொந்தச்
சமையற் தொழில் பார்த்துச் சாப்பிட்டு – நாளைக்கு
நடப்பதென்ன என்ற நனவு நினைப்பின்றி,
அன்றாடம் தாண்டும் அகதியாய் உலைவதனைக்

கண்டாய் நீ ! என்றாலும் கண்டதெல்லாம் சொல்லாதே !
சோற்றைத் திரணையாய்க் குழைத்து வாய் ஊட்டிடினும்
தீற்றும் பருக்கை சில சிதறி விழச் சாப்பிடுவான்;
தேத் தண்ணி வைக்க உலைத் தீ மூட்ட அறியாதான்;
கூதல் என்று தோளிரண்டைச் சுற்றிக் கட்டிப் பிடித்தென்
சேலைத் தலைப்புக்குள் செருகித் தலை வைத்து
நித்திரை செய்கின்ற மகன் ; நினைத்தவுடன் சோட்டைத் தீன்
வாங்கவென் றோடி வந்தென் மடிப் பெட்டியைத் தடவிக்
காசெடுத்துச் செல்லும் கண்ணான செல்வ மகன் ;
இப்படியா வாழுகிறான் ?என்று வயிற்றில் அடித்து
ஒப்பாரி வைத்தே உயிர் துடிப்பாள் என் அம்மா !
ஆதலினால், ஈதொன்றும் அவளுக்குச் சொல்லாதே !
"காளை உங்கள் மைந்தன் கன கச்சிதமாக
வேளைக்கு வேளை விதவிதமாய் உடையணிந்து,
சோக்காய்ச் சுதியாய்ச் சுகமாகத் தின்று குடித்து
ஒய்யாரமாக உயிரோ டிருக்கின்றான்!
கவலை விடுங்கள் !" என்று கட்டாயம் அன்னையிடம்
சேதி சொல்லாய் மேகமே, செல் !

★★★

## ஒரு முதல் இரவு

கன்னிக் காற்றுக்கும் நாணம் வருமோ?
கதவைத் திறக்கப் பூமாலை அசைந்த
சத்தமும் மெல்லக் கேட்டதே ! மணமகன்
நுழையும் போது தென்றலின் கனிவைக்
காதலி போலக் கதவும் அறியுமோ ?
இடுக்கால் மங்கல்விளக்கும் அணைந்தது!
விடியும் வரையும் குசுகுசுக் கூக்குரல்
உதிர்ந்த பூக்கள் விழுந்த ஓசைகள் !
கேட்டுக் கேட்டுக் கிளுகிளு ஒலிகள் !
இடுக்கால் மங்கல் விளக்கும் அணைந்தது !
உள்ளே இருளில் இருவர்க்கு வெளிச்சம் !
வெளியே விடிய விடியப்
பலருக்கோ வெளிச்சத்தினில் இருட்டு !

★★★

# புதிர்

என் அன்னத்துக் கொரு
சின்னப் புதிர் !

பாலை நீர் நீத்துப் பயில என் அன்னம், இரு
பால் சார்ந்த பெயர்கள் அன்பால்
மாலையென அட்சரம் மாற்றித் தொடுத்த புதிர்
மன்னி செகராச வல்லி !

குறிப்பு : கடைசி வரியில் 'மன்னி செகராக வல்லி' என்ற தொடரில் அன்பால் இணைந்த இருவர் பெயர்கள் அட்சரம் அட்சரமாக மாற்றித் தொடுக்கப் பட்டிருக்கின்றன. 'மன்னி செகராசவல்லி' என்று கலைமகளுக்கும் ஒரு பெயருண்டு.

- *கமலினி செல்வராசன்*
*(மன்னி செகராசவல்லி)*

★★★

# வித்துவம்

குறிப்பு:

கட்டளைக் கலித்துறை என்ற இலக்கண அமைப்பில் கவிதை எழுதுவது பற்றிக் கேட்டபோது எழுதிய கட்டளைக் கலித்துறை கவிதை. நேர் அசையில் தொடங்கினால் (பாட்டென்றால்..) இந்தக் கட்டளைக் கலித்துறைச் செய்யுளில், ஒவ்வொரு அடியிலும் 16 உயிர்மெய்யெழுத்துகள் வரும். நிரை அசையில் தொடங்கினால் (கலை என்ற) ஒவ்வொரு அடியிலும் 17 உயிர்மெய்கள் வரும். 'ஏ' என்றே கவிதையின் ஈறு அமையும்.

பாட்டென்றால் என்ன படிப்பென்றால் என்ன என்றென் பயலோ
கேட்டான் உடனே கிளர்ந்து கவிதை கிளைத்த தொரு
பாட்டாய் ! இலக்கணப் பக்குவப் பண்புகள் யா தென்றவன்
நோட்டம் இடவே அந்நுட்பம் அனைத்தும் நுவன்றனனே !

கலை என்ற ஒன்றினைக் கற்பதற்காவற் கனல் இல்லையேல்
இலை என்றன் சேயே ! இதையே உனக்காய் எடுத்துரைத்து
விலை யற்ற தாய்ப் பெரும் வேளை பலதை வியர்த்தமிட்டு
மலைவுண்டு நிற்கிறேன் ! மைந்தா ! இனிமேல் மதி கொள்வையே!

★★★

# புதிய பிள்ளைப் பாட்டு !

சிறுவன் : அங்கே மேற்கில் அக்கினி புகையுது !
இங்கே கிழக்கில் எரியுது ! புகையுது !

சிறுமி : அங்கே புகைவது ஓர் அரசனின் எரி சிதை !
இங்கே தெரிவது ஓர் யாசகன் எரி பிணம் !

எல்லாச் சிறுவரும் :
ஓகோ ! ஓகோ ! ஓகோ !
இருவரும் இறுதியில் இரு பிடி சாம்பர் !

சிறுமி : அங்கே வடக்கில் அக்கினி புகையுது !
இங்கே தெற்கில் எரியுது ! புகையுது !

சிறுவன் : அங்கே புகைவது ஓர் சிங்களன் சடலம் !
இங்கே எரிவது ஓர் தமிழனின் உடலம் !

எல்லாச் சிறுவரும் :
ஓகோ ! ஓகோ ! ஓகோ !
இருவரும் இறுதியில் இரு பிடி சாம்பர் !

சிறுவன் : அங்கே மலையில் அக்கினி புகையுது !
இங்கே மடுவில் எரியுது ! புகையுது !

சிறுமி : அங்கே புகைவது ஓர் சாமியார் மேனி !
இங்கே கருகுது ஓர் பாவியின் பிரேதம் !

எல்லாச் சிறுவரும் :
ஓகோ ! ஓகோ ! ஓகோ !
இருவரும் இறுதியில் இரு பிடி சாம்பர் !

சிறுவனும் சிறுமியும் :
மதமும் இனமும் பதவியும் பணமும்
மனித பேதங்கள் அனைத்துமே சாம்பர் !

எல்லாச் சிறுவரும் :
ஓகோ ! ஓகோ ! ஓகோ !
இருவரும் இறுதியில் இரு பிடி சாம்பர் !

★★★

# எயிட்ஸ்
# தோம் தரி கிட

இணைந்தோம் தரிகிட
அணைந்தோம் தரிகிட
பிணைந்தோம் தரிகிட

பரிந்தான் பரிந்தேன்
உரிந்தான் உரிந்தேன் சரிந்தேன் விரிந்தேன்;
புரிந்தான் பிரிந்தான்;
சரிந்தேன்; தெரிந்தேன்; மனம் திரிந்தேன்;
தெருத் தெரு திரிந்தேன்
மழலையொடு திரிந்தேன்
பலப்பலர் புணர்ந்தோம்
தோம் தரிகிட தோம்தரிகிட
வாழ்க்கை இதுவென உணர்ந்தோம் தரிகிட. .

★★★

# பயணத்தை
# நிறுத்த மாட்டோம் !

பரம்பரையாக வந்த பழக்கத்துக்கு அடிமைப்பட்ட
தரங் கெட்ட தமிழச் சாதித் தலைமுறை ! அரசர் கூட
முரண்பட்டுச் சேரர், சோழர், பாண்டியர் என முக் கூறாய்ப்
புறம் பட்டுப் பிளவு பட்ட புத்தியிற் பித்துக் கொண்டோர் !

நரர்களில் மட்டும் தானா ? நாயிலும் சாதி பார்ப்பார் !
பறையன் என்றொரு சொல் இன்று பறங்கியர் மொழியிற் சென்று
விரவுதற்களித்த மேலாம் வியன் மொழி, ஆகா ! எங்கள்
தரமுயர் மதுரக் கன்னித் தமிழன்றோ ? பெருமை என்னே !

வடக்கத்துச் சொல், திசைச் சொல், வரத்துச் சொல், அயற் சொல் என்று
துடக்குகள் – பேசுகின்ற சொல்லிலே கூடப் பார்க்கும்
முடக்குவாதம் பிடித்த மூடரை ஒழிப்பதற்குச்
சுடத் துவக்குகள் ஓர் கோடி தூக்குவதன்றோ மார்க்கம் !

ஆயிரம் ஆண்டுக் காலமாக வேர் விட்டு வந்து
போய் உரம் பெற்ற சாதிப் புன்மையை, சிரித்துப் பேசி,
வாயினால் நியாயம் கூறி, வட்ட மாநாடு கூட்டி,
நேயமாய்த் தீர்ப்போம் என்று நினைத்தவர் எமக்குள் உண்டு !

இரத்தத்தில் ஊறிப் போன இராட்சச மூர்க்கச் சாதிப்
பித்தத்தைச் சமாதானங்கள் பேசப் போய்த் தீர்க்கலாமோ ?
இரத்தச் சாட்சிகள் தம் நெஞ்சில் ரவைகளை ஏந்தி மாய்ந்தும் –
யுத்தங்கள் செய்தே எங்கள் யுகத்தினைக் காணல் கூடும் !

முன்னர் வில்லூன்றிக் காட்டில் முதலி பேர்ச் சின்னத்தம்பி
துன்ன, நிச்சாமப் போரில் குமரேசு, கார்த்திகேச
பொன்னுயிர் போத, வைத்தி பொன்றச் சண்டிலிப்பாய் ஊரில்,
மன்னு மந்துவிலில் ரத்னம் மாள – நாம் வேள்வி இட்டோம் !

குருதியால் தமிழ்ச் சமூகக் குற்றங்கள், குறைகள் எல்லாம்
பொருதி நாம் அடித்து, நாளை புதியதாய்ச் சரித்திரத்தைச்
சரி பெற எங்கள் தர்ம சாசனமாக மாற்றி
எழுதுவோம் என்ற உண்மைக்கு இவர்களின் உயிர்கள் சாட்சி !

ஆலயத்தோடும் வேலை ஆலைகளோடும் கல்விச்
சாலைகளோடும் சந்தி சபைகளினோடும் ஓயோம் !
நாளைய உலகை மாற்றி நாதியற்றோரின் வெற்றிப்
பாளயமாக்கும் மட்டும் பயணத்தை நிறுத்த மாட்டோம் !

★★★

# ஒரு வியட்னாம் தியாகிக்கு வீர வணக்கம்

'தேசாபிமானி'

இரவு தோறும், உடுவங் எனப்பெறும்
ஏழ்மை ஊரவர் தீ வளர்த்தே, வலம்
வர இருந்து, மலைப்புறம் எங்கணும்,
வாழ்ந்து சென்ற அவ் வீரனின் ஞாபகம்
விரவி நிற்பதன் செய்தியும், மக்கள் அவ்
வீரனை மனக் கோவிலிலே வைத்துப்
பரவி அன்பிற் பணிகிற செய்தியும்,
பல படக் குறிப்பிட் டுரையாடுவர் !

தென் வியட்டினாம் தேசத்துக் கோடியில்
        தீரர் வாழும் உடுவங் எனும் அவ்வூர்
தன்னை, ஓர் தினம், வன் பகையாளர்கள்
        தாக்கிப் பீடித்துத் "தா வரி ! தா !" என
இன்னல் செய்தனர்; ஏழை முதியவர்,
        இளைய வாலிபர், ஏதுமில்லாதவர்,
என்ன செய்குவர் ? பாழும் எதிரிகள்
        "இடுகுவோம் சிறை" என்று மிரட்டினர் !

பெற்ற மக்களை விற்க நினைந்தனர்
        பேதை அன்னையர்; தந்தையரோ எனில்
சுற்றுச் சார்பினில் ஓடி ஒளித்தனர்
        சூழ்ந்த வன் மிடி தேர்ந்தொரு வாலிப
ஒற்றை நாடி உடம்பினன், "தோழரே !
        ஒக்குமோ இது ? கேவலம் அல்லவோ ?
உற்ற துன்பம் ஒழிவ தென்றோ ?" என
        ஓர் தனிக் கொடிக் கீழ் நின்று ரப்பினான் !

செக்கச் செங்கதிர்ச் செல்வன் மலை உச்சி
        சேரும் காலைப் பொழுதில், ஒரு தினம்,
மக்கள் ஊரில் அணி அணி யாகவே
        வந்து கூடித் திரண்டு நடந்தனர்;
"இக் கணத்திருந் தில்லையடா வரி !
        இல்லை ! இல்லை !" என்றார்ப்பரித் தேகினர்;
அக் கிராமத்து மக்கள், அதன் பினர்
        ஆன யாவையும் இன்றும் நினைகிறார் !

தீயை மூட்டி வளைந்திருந் தன்றைய
        சேதி இன்றும் நினைவு கொள்கின்றனர்;
போய பின்னர் சில தினம், இவ் விளம்
        புத்தெழுச்சி மனத்தனை, வைரிகள்
மாயமாக வசப்படுத்திச் சிறை
        வைத்துத் துன்ப வதைகள் பல செய்தும்,
வாயவிழ்த்துத் தகவல் கறந்திட
        மார்க்கம் இன்றி மலைப்படைந் தேங்கினார்

தோழரை இனங் காட்ட மறுத்தனன்;
தூய நெஞ்சம் நிமிர்த்திச் சிரித்தனன்;
கீழவர்கள், மறு தினம், வீரனைக்
கிட்டும் ஓர் மலை உச்சியில், தீ வளர்
சூளை மூட்டி அதன் முனர் கொண்டு போய்ச்,
சுட்டெரித்திடத் திட்டம் இயற்றி, "ஏய் !
காலெடுத்து வை ! தீக் குழித் தீக் குளி !
தறுதலைச் செம் பிடாரியே" என்றனர் !

"கண் கலங்கிப் பயனிலை ! காலை வை !
சம வுடைமைச் செங் காடையர் உங்களின்
திண் மனத்தை அறிகுவம் ! எஃகினாற்
செய்த என்பும் வன் செப்புத் தகட்டினை
ஒண்ணும் தோலும் உடைய கடினர்கள்
உங்களுக் கெரி செங்களம்; சீக்கிரம்
கண்ணை ஒற்றி இறங்கு நெருப்பிலே !
காதகா !" எனத் தீயில் இறக்கினர் !

வீரன் வாழ்ந்த அவ்வூரினைச் சேர்ந்தவர்
வெம்மை கக்கும் கணப்பினைச் சுற்றியே
ஈரமான இதயமும் கண்ணுமாய்
இன்றும் அந்த நிகழ்ச்சி நினைகிறார்:
தீரமாகப் பயம் என்ப தேதெனத்
தேர்ந்திடாதவன் போல, அமைதியாய்ச்
சீரதான இள நகை சிந்தியே,
சிங்க நோக்குடன் தீயில் இறங்கினான் !

சாதுவாக நின் றீதுரை செய்தனன்,
தலை நிமிர்ந்து, பெருமிதம் சொற்களில்
மீதுரக், கனல் சூழ்ந் தெழ, வீரவான்:
"மேதினிக்குச் சமத்துவப் போதகம்
ஓதுகின்ற சமதர்ம வாதிகள்,
உங்கள் போலவே என்பு தோல் போர்த்திய,
காது, மூக்கு, வாய், கண், கரம் கொண்ட, சா
தாரணப் பிற மாந்தர் நிகர்த்தரே!

"எஃகினால் என்பும், செப்புத் தகட்டிலே
எய்து தோலும் இலா வெறும் மாந்தரே
உய்கு செங்கொடிக் கட்சியினோர்களும்;
உண்மை ! ஆயினும், தீமைகள் தூர்க்கவோ,
வெஃகிப் பொங்கித் துடித்தெழும் வீரர்; தம்
மேன்மை தேசம் விடுதலை பெற்றுயிர்
வைகுமாறு, தம் ஆவியையும் பலி
வைக்கும் சித்த வலிமை படைத்தவர் !

"நாடு வாழத், தம் நாட்டவர் வாழத், தம்
நாட்டின் நாளைய சந்ததி வாழ்வுறக்,
கூடு விட்டுயிர் நீக்கத் தயங்கிடாக்
கொள்கையாளர்கள் !" என்று முழங்கினான் !
வீடு தோறும், 'உடுவங்' எனப் பெறும்
வியட்டினாமிய ஊரில், இரவினில்,
கூடுகின்றனர், தீயை வலம் செய்து,
கூறி வீரன் கதையை, நினைக்கவே !

குன்றிடைப் புகழ் மண்டிக் கிடக்கும் அக்
கொள்கை வீரன் கதையினைப் பேசவும்,
இன்றும் மக்கள் அவனை மனத்திலே
ஏற்றிப் போற்றிடும் அன்பினைச் சாற்றவும்,
சென்று கூடும் 'உடுவங்' கிராமத்தார்,
செருக்களத்தில் வெடி ஒலி கேட்கையில்,
நின்று, தீயினை நோக்கி, அவ்வீரனை
நினைத்து, நெஞ்சில் யம பயம் நீங்குவார் !

*("தான் ஹாய்" என்னும் தென் வியட்னாம் புலவன் எழுதிய ஒரு கவிதையைத் தழுவியது)*

★★★

# நாளைய தமிழருக்கு

காளைய ராய் நான் இங்கே
        காணுவோர் வளர்ந் தெம் நாட்டின்
நாளைய விதியை ஆண்டு
        நடத்துவார்; ஆதலால், அந்
நாளைய தமிழருக்கு
        நான் விதி சொல்ல, இந்த
வேளை – பாரதி நூற்றாண்டில்
        விழைகிறேன்; அவர்கள் உய்க!

ஈழ நா டுவந்து பெற்ற
        இளைஞர்காள்! தமிழ்ச் செல்வர் காள்!
வாழ நம் இனத்துக் கின்று
        வழிதனைக் காட்ட வந்தோர்
ஊழல்கள் பேணுகின்ற
        உலுத்தராய்ப் போனார்; அந்தக்
கோழைகள் தலைமை தூர்த்துக்
        கொள்ளுவீர் தலைமை கையில்!

வெள்ளையர் கப்பல் ஏறி
        விடுதலை பெற்ற பின்னர்
பிள்ளைகளாக இங்கே
        பிறந்து, நீர் வளர்ந்த பின்பும்
கொள்ளைகள் பழைய வாறே
        கொலு இருந் தடிமை நாட்டு
நொள்ளலே உமக்கும் என்றால்
        நோவது யாரைச் சொல்லும்?

"நன்று தீ தென்றும் மற்றோர்
நல்க நாம் பெறுதல் இல்லை"
என்ற மூதறிஞர் கூற்றை
எண்ணுவீர்! நம்மை நாமே
பொன்று மாறாக்கிக் கொண்டோம்;
புல்லரைத் தலைவர் என்றோம்;
கன்றுகாள்! நாளை, உங்கள்
கைப்பட மார்க்கம் காண்பீர்!

நாற் றிசை உலகும் பார்த் திந்
நல் யுகப் போக்கை ஓர்ந்து,
நேற்றைய நிலைமை தேர்ந்து,
நிகழு நாட் பிழைகள் ஆய்ந்தால்,
மாற்றி இன் றிருப்பதான
மாசுகள் தம்மை, நாளை,
மாற் றுயர் மேன்மை கொள்ளும்
மார்க்கமும் அறிதல் ஆகும்!

செவிடு பட்டிருந்த வையம்
சிலிர்த் தெழுந் துயிர்ப்புக் கொள்ளக்
கவிஞர்கள் பலரும் தெய்வச்
சங்கெடுத் தூதினார்கள்;
புவி துயில் நீங்கி இன் றப்
புலவர்கள் சங்க நாதம்
செவி மடுத் துயர்ந்து செல்லும்
செவ்வியைக் காணுகின்றோம்!

"உலகம் என் நாடு; இவ் வையத்
துறைபவர் உடன் பிறந்தார்;
இலகிட எவர்க்கும் நன்மை
இயற்றல் என் மதம்" என் றென்றோ
புலவன் ஓர் கவிதை செய்யப்,
போற்றி இன்று லகின் பாதி
நிலமுளார் தோழராக
நிமிர்கிறார் ஒன்று சேர்ந்து"

சாதியை ஒழித்து விட்டார்;
சமத்துவம் கண்டு விட்டார்;
சூதியல் வேத மூடச்
சூழ்ச்சிகள் தொலைத்து விட்டார்;
மாதினை ஆணுக் கென்னும்
மகத்துவம் கண்டு விட்டார்;
நாதியற் றுழல்வோர் இல்லா
நன்னிலை எய்தி விட்டார் !

ஒருவர் யாவர்க்கும் என்றும்,
யாவரும் ஒருவர்க் கென்றும்,
திருவெலாம் பொதுச் சொத்தென்றும்,
தேசமும் மொழியும் கூடப்
பிரிவு செய் துலகை நாளை
பிளந்திடல் ஆகா தென்றும்,
அரு விதி பலவும் யாத் திங்
கமரராய் உலவுகின்றார் !

"துவக்கினாற் குண்டே தீரும்;
தொல்லைகள் தீர்வதில்லை;
சவக் களம் போர்" என்றோர்ந்து
சாந்தியை நாடி இன்று
துவக்கம் ஆயிற் றோர் ஆப்தம்
தொல் லுலகினிலே—அந்த
நவக் கருத் தினைப் பெரும் பேர்
நாடுகள் நாடல் கண்டோம் !

பேரரசுகள் இவ்வாறு
பிரிவினை நீங்கி வையம்
ஒரர சாகு மாறாய்
உறு வினை இயற்றும் காலை,
சீரறியாத சிற்றூர்ச்
சிற்றின மாந்தர் நாமோ
சேரர், பாண்டியர்கள், சோழர்
செரு வழி ஓம்புகின்றோம்!

"யாதும் ஊர்; கேளிர் தாமே
யாவரும்" என்ற சங்க
மேதகை பாட்டைப் பேச்சு
மேடையிற் பாடை கட்டி,
வாதுகள் சாதிக்காக,
வம்புகள் நிலத்துக்காக,
தீதுகள் உயர்வுக்காகச்
செய்து செய்துழல்கின்றோமே !

வள்ளுவன் கோடி புத்தி
வழங்கினான்; இளங்கோ, கம்பன்,
ஒள்ளிய புலவர் பல்லோர்,
ஒருவர் பின் ஒருவராகத்
தெள்ளிதின் உரைத்தார் புத்தி;
தேர்ந்திலோம்; பாரதிக்கும்
கொள்ளி வைத் தெரித்து விட்டுக்
குரோதமே பேணுகின்றோம் !

வேற்றவர், தங்கள் பாட்டின்
வேந்தரை, அவர்கள் பாட்டிற்
சாற்றிய மார்க்கம் தன்னைச்
சார்வதன் மூலம், பேணிப்
போற்றுவர்; நாமோ எங்கள்
புலவரின் இதய மூச்சைக்
காற்றிலே விடுத் துடம்பைக்
கல்லிலே சிலைகள் செய்வோம் !

பட்டினி தீர இங்கே
பாதையைக் காட்ட மாட்டா
மட்டிகள் தலைமை பூண்டு,
மதம், இனம், சாதி, பாஷைக்
குட்டையைக் குழப்பி, உண்ணாக்
கும்பியிற் கூடத் தீயை
இட்டிடும் வெறியை மூட்டி
இருக்கிறார் அரசு கட்டில் !

முத்து மீரானின் மைந்தன்
முகம்மதோர் ஏழை மாந்தன்;
சித்திவி நாயகத்தார்
சில்லறை; சிறி சேனாவும்
பத்தல மேயுசென்ற
பரங்கியும் பறுநாந்தோவும்
அத்தகை யோரே! ஆனால்
ஆயிரம் பேதம் காண்பார் !

பல் இனம், மதம், பல் சாதிப்
பகுப்புகள் குறித்து நின்று,
நல்குரவறியா ராய்த் தம்
நாம பேதங்களாலே
எல்லைகள் வகுத்து மாளும்
இழிநிலை இவர்க்கு நீக்க
வல்லவர் நீவிர் அன்றோ?
வரு யுகத் தமிழ்ச் சிங்கங்காள் !

புலியை ஓர் புலி அடித்துப்
புசிப்பதை அறியோம்; சாதிக்
கிலி அடித் தறிவு மங்கிக்
கிடக்கிற தமிழன், கோயிற்
பலியடிக்கின்றான் மற்றோர்
பக்தனைத் தாழ்ந்தோன் என்றே!
எலி அடிப்பதற்கோ "சுத்த
சைவம் ; நான் கொல்லேன்" என்பான் !

எழு கதிர் பொதுச் சொத் தார்க்கும்;
இன் மழை யார்க்கும் பெய்யும்;
உழுது யார் பயிரிட்டாலும்
உயர் பயன் நல்கும் பூமி;
முழுதுலகறியும்; ஆயின்
முது தமிழ் நிலத்தில் மட்டும்
பழுதுறு குலத்தோரானாற்
பகல், மழை, நிலம் விலக்கு !

விலக்குகள் அனந்தம் எங்கள்
வியன் தமிழ் மரபு வந்த
குலத்தவர்க் குள்ளே! இந்தக்
குறைகளைக் களைவதாயின்,
இலக்கினை ஆட்சி மன்றத்
திருப்பிடம் தன்னில் நின்றும்
விலக்குதல் அறியார் தம்மை
விலக்குதல் வேண்டும் நீங்கள்!

மதம், இனம், சாதி என்று
மாய மான் காட்டிக் காட்டி
நிதமுமே எம்மைத் தாழ்த்தி
நிரந்தரத் தலைமை பூணும்
பதவியே குறிக் கோளான
பதர்களால் தமிழ் இனத்துக்
குதவிகள் எதுவும் நண்ணாது;
ஒரு பயன் தமிழர் காணார் !

மாவட்ட சபைகள் என்றும்
மாய மான் தோற்றம் காட்டும்;
மாவிட்ட புரத்தான் கோவில்
வாயிலிற் பூட்டே தொங்கும்;
தாவற்ற நிலையில் நின்று
தமிழ் அர சாங்க சேவை
ஏவலர் தவிப்பார்; வேலை
இளைஞருக் கெய்தா தென்றும் !

பல் கலைக் கழகம் எங்கள்
பகுதியில் தோன்றா தென்றும்;
வல் கலை கற்றுப் பட்டம்
வாங்கிய இளைஞர் வேலை
இல்லை என் றுண்ணா நோன்பில்
இருந்து, பின் 'இல்லை' ஆவார்;
தொல் தமிழ்க் குரிமை என்ற
கோஷம் ஓர் வேஷம் ஆகும்!

இத் தகு, தமிழினத்தின்
இலட்சியம் யாவும், கோலாற்
செத்த பாம்படிக்கும் வீர
தீரரைத் தலைவர் என்று
நத்தினால், நத்தாது, எங்கள்
நாட்டிலே; செத்தோன் கையில்
'வெத்திலை' பாக்கு வைத்து
விருந்தினுக் கழைத்தலுண்டோ?

நந் தமிழினம் சா காமல்
நாளையும் நிமிர்ந்த வாழ்வை
முந் துறப் பெற்றிந் நாட்டில்
முகிழ்ப்பதற் கின்று வாழும்
செந்தமிழ் இளைஞர் ஒன்று
சேருக ! நாட்டின் மீது
பந்தமும் கொள்க, சூழும்
பாகுபாடகற்றிக் கொண்டே !

வேற்றினச் சமயச் சாதி
வீங்கிளந் தோளரோடே
வேற்றுமை இன்றிச் சேர்ந்து
விரி மனத்தோடு கூடி
நாற்றிசை உலகும் இன்று
நடந்திடும் ஒருமைப் பாதைக்கு
ஊற்றெனும் பொதுமைக் கொள்கை
உவந் ததற் குழைப்பு நல்க!

★★★

# அங்கதம்

# கொம்பிளிமென்ற்
# ஒண்டு குடு !

*(அ. ந. கந்தசாமியின் 'மதமாற்றம்' மூன்றாம் முறையாகக் கொழும்பில் அரங்கேறிய அன்றைய தினத் தினகரனில் வெளிவந்த கவிதை)*

என்னடா மச்சான், நிசம் தானோ ? இண்டைக்குப்
பின்னேரம் ஏதோ பெரிசாக நாடகம் ஒண்

டாடப் போறியள் எண் டறிஞ்சன் ; அடி சக்கை !
கேடப்ப உங்களுக்கும் கிட்டி விட்டு தெண்டு சொல்லு !

ஏன்ராப்பா சும்மா இருக்கப் பொறுக்காமல்
வேண்டாத தொல்லையளை விலைகுடுத்து வாங்கிறியள் ?

நீதானாம் எல்லாப் பொறுப்பும் எண்டு கேள்வி – மெய்யோ ?
தோதாய்க் கதை தேடித் தூரத்தித் திரிஞ்சியாம்

எழுத்தாளக் குஞ்சுகளை ! உன்னைப் போல் ரெண்டொருத்தர்
கழுத்தறுத்தார் தங்களட்டைக் கதை வாங்கிப் போட்டெண்டு

சொல்லி, அவை மறுத்துச் சூடாகப் பேச, நீ
துள்ளி அடிச் சவையைத் 'தூ' எண்டொதுக்கி விட்டு,

நீயே கதைஒண் டெழுதினியாம்; ஓமோம் – நீ
ஓயாமற் கல்கி, விகடன், குமுதம் எண்டு

வாசிக் கிறனி தானே ! வசனம் எழுதத் தான்
யோசிச்சு யோசிச்சுப், பிறகு நடிக்கிறவை

பேசிக் கொள்ளட்டும் அதைச் சொந்தத்தில் எண்டு வலும்
'ஈசி' யாய் அந்தப் பிரச்சினையைத் தீர்த்தாயாம் !

நடிகர்களுக் கெங்களின்ரை நாட்டிலையோ பஞ்சமில்லை;
வடிவான பெட்டையள்தான் வரமறுக்கும் மேடைக்கு;

நீ ஆள் சுழியனல்லே ? நினைச்சால் அவைக்குன்ரை
வாயாலை வலை வீசி வளைச்சுப் பிடிச்சிடுவாய் !

எப்பிடி மச்சான் உன்ரை 'ஹீரோயின்?' ஆள் வடிவோ ?
தப்பாய் நினையாதை – தமாசுக்குக் கேட்டனான் !

எல்லாம் சரியப்பா – இதுக்கிடையில் உங்கினிக்கை
சில்லறைப் பேச் சொண்டிரண்டு லாவுகுது; மெய்தானோ ?

மண்டபத்துக் காசின்னும் கட்டேல்லை எண்டதால்
இண்டைக்கு நாடகம் இருக்குமோ சந்தேகம்

எண்டொருத்தர் சொன்னார் : 'இலயிற்' றுக்கும் 'செட்' டுக்கும்
'கொண்ட்ராக்ட்' எடுத்த ஆள் குடுக்கேல்லை 'அட்வான்ஸ்' எண்

டேதோ மனத் தாங்கல் எழுப்பிக் குழப்பமாம்;
போதாக் குறைக்கு 'டைரக்ஷன்' நீ எண்டு

பேப்பரிலை போட்ட பெருமையை நீ காட்டப் போய்த்
தாய்ப் பாகம் ஏற்ற பழுத்த நடிகையைப் பார்த்

'திப்பிடி நடியுங்கள்' எண்டு சொல்ல, அந்தம்மாள்
'அப்ப நீர் தாயாக நடியும்' எண்டு கோவிச்சுப்

பாதியிலைபோக, அந்தப் பாத்திரமே 'கன்செல்' எண்டும்
சேதி ஒண்டு; பேச்சோடை பேச்சு – நடிக்க வந்த

பெட்டை ஒண்டும் 'ஹீரோப்' பொடியனும் 'லவ்' உண்டாகி
ஒட்டாம்; அடுத்த கிழமை கலியாணம்

கைப்பிடியாம் எண்டோர் கதையும் அறிஞ்சன்; ஏன்
அப்பிடியோ ? தலைமை வகித் துன்ரை நாடகத்தை

ஒப்பேற்றக் காசு பணம் உள்ள பெரியாள் ஒண்
டெப் போதும் தேவைதான், எண்டால் நீ மீறிப் போய்

ஒண்டுக்குப் பதிலாக ஒன்பது பேர் வீடுகளில்
தொண்டெண்டுன் நாடகத் தொழிலுக்குப் பூச்சடிக்சு,

'நீங்கள் தான் தலைமையாய் நிண் டென்ரை நாடகத்தைத்
தாங்குங்கள்' எண் டத்தனை பெரிய புள்ளிகளின்

நன்கொடையும் வாங்கினியாம்; நாடகத்தில் வந்தந்த
ஒன்பதும் இண்டைக் கென்ன ஒக்கலிப்போ? உப்பிடி நீ

கலைத் தொண்டு செய்யிறதாய்க் கதையடிச்சுக் காசடிச்சு
உலைத் தண்டற் காரியமும் ஒப்பேற்றிப் போட்டாயாம் !

நானும் அதை உண்மை எண்டு நம்பித்தான் போயிருப்பன்;
போன கிழமை உன்ரை பெண்சாதியைக் கோயிற்

'கொம்பவுண்டிற்' கண்டன்; கொடியும் கழுத்தானும்
கம்பிக் காப் பாறும் இரு காதானும் மூக்கானும்

இல்லாமல் மொட்டையாய் இளைச்சிருந்தா; ஆரும் ஒண்டும்
சொல்லாமல் எனக்குன்ரை தொண்டு வெளிச்சுதடா !

தமிழை வளர்க்க எண்டால்தாலியையும்ஆமான
தமிழன் அடகு வைக்கத் தாமதியான் எண்டு மச்சான்

காட்டிற்றாய்; நீ நிசமாய்க் கலைத் தொண்டன்; தியாகியடா !
நாட்டுக்கு வாய்ச்ச ஒரு நல்ல தமிழ்ச் செல்வமடா !

எண்டாலும் பாற்றாப்பா, எங்கடை ஊர் ஆட்களுக்குத்
துண்டாய் அபிமானம் சொந்த ஊர் மட்டில் இல்லை;

"அஞ்சு றுவா 'டிக்கெற்'றாம் – அநியாயக் கா சதுக்குப்
'பஞ்ச வர்ணக் கிளி'யைப் போய் 'பல்கனி' 'டிக்கெற்' எடுத்துப்

பார்த்தாலும் உண்டு பயன்" எண்டே ஒடுவினம்;
மாத்த முடியாத மடைத்தனத்தை மாத்த எண்டு

பேய்த்தனமாய் நாடகத்தில் பித்துப் பிடிச் சிறங்கி
வாய்த் தவிடும் அடுப்பு நெருப்பும் பறி குடுத்துத்

திண்டாடப் போறாய்; நீதேற வழி இல்லை இனிக்
கொண்டு நடத்தி முடி ! 'குட்பை'; நான் போய் வாறன் !

அடடே, மறந்திட்டன்; 'அவ' வும் உன்ரை நாடகத்தை
விடலாமோ பார்க்காமல் எண்டு விரும்பினவ;

கூடவே நானும் வரத் தானே வேணும்; நீ
நாடகம் போடேக்கை, உன்ரை நல்ல நண்பன் நான் வந்து,

வாசலிலை தூங்கி வழிஞ்சு நிண்டு 'டிக்கெற்' றைக்
காசுக்கு வாங்கி வரக் கண்டாற் பிறத்தியார்

பகிடி பண்ண மாட்டினமே ? பல நாட் சிநேகிதத்தை
நெகிழ விடலாமோ ? நேரமாய்ப் போச்சு ! மச்சான்,

தம்பதிகளாய் வருவம்; 'டபிள் சீட்' குறி போட்ட
'கொம்பிளிமென்ற்' ஒண்டு குடு !

# ஐம்பெருங் கண்டங்கள்

மாதரார் பருவம் ஐந்தை
மகிதலக் கண்டம் ஐந்தோ
டோதலாம் சமனாய் ! எவ்வா
றொக்கும் என் றுசாவுவீரேல்,
போதரும் பதின்மூன் றாண்டுப்
பூவையாள் பதினெட் டாண்டாள்
ஆதலாம் வரையும் ஆவாள்
ஆபிரிக் காவைப் போலே ! –

காரணம், ஆராயாத
கன்னிமைக் காடக் கண்டம் !
நேரிழை, முப்ப தாண்டு
நிலை வரை ஆசியாப் போல்
பூரித வெம்மை பொங்கிப்
பொலிகுவள் ! நாற்பத் தைந்தைச்
சாரும் அந் நாள் மட் டன்னாள்
சமன் அமரிக்கா வுக்கே !

மருமம் ஆய்ந் தறிந்து கண்டு
வளமெலாம் வாருமாறாம்
தருமமே செய்கும் ஈகைத்
தன்மைய தமரிக்கா ! மற்
றொரு சில சிறப்பாங் காங்கே
உள்ள தைரோப்பா பூரிப்
பருகினும், ஐம்பத் தைந்தாள்
ஆம் வரை அதனுக் கொப்பாள் !

ஆத்திரே லியாவென் றொன்றங்
கடியிலே உண்டென் றோர்ந்தும்
மாத்திரை மதிப்பும் காட்டார் –
மாதவள் ஐம்பத் தைந்தின்
மூத்ததும் அவளுக் கொப்பம்
முதை நிலம் ! கண்டம் ஐந்தும்
நேர்த் தகும், பருவந் தோறும்,
நேரிழையார்க்கே அன்றோ ?

அரிவையர் பருவம் ஐந்தும்
ஐம் பெரும் "கண்டமா" கும் !
சொரியல் அன் றிரு கருத்துச்
சொல்லுமாம் "கண்டம்" ! உள்ளே
விரி பொருள் கண்டாற் கொள்ளும்;
வெறும் கவி விளையாட்டாயும்
தெரியுமேற் சிரியும், போதும் !
தெரிந்தவர் தெரிவார் தானே !

*09-02-1967*

★★★

## புது வருஷ சங்கற்பம்

பாழும் மனமே ! நீ
பழைய வருஷ, முதல்
நாளில், உறுதி
நலம் பூண்டு, அன்று முதல்,
வாழும் வழி கண்டு,
வளமெல்லாம் நம்மை நிதம்
சூழும்படி அமையச்
சூளுரைத்தாய்; ஆனதெது ?

வாரம் சில செல்ல,
வாடினாய்; சங்கற்பம்
சோரம் போய் மெல்லச்
சுவடழிய, மீண்டும் அதே
சாரமிலா வாழ்க்கைச்
சகதி தனில் வீழ்ந்தாய் !
நேரம் கடத்தாதே;
நெஞ்சே, துயில் நீங்கு !

ஏவிளம்பி வாடி விழ,
ஈதோ விகாரி எனும்
பூ விரிதல் பாராய் ! இப்
புத்தாண்டில், நம்முடைய
ஆவி, உடல், பொருளுக்
கான வழி சமைத்துச்
சீவிக்க, மீண்டும் நாம்
செய்வோம் பிரதிக்ஞை !

ஆங்கிலமும் செந்தமிழும்
ஆயிரமாய்க் கற்றாலும்
ஈங்கெமக்கு உற்ற பயன்
ஏதுளது ? ஆதலினால்
சிங்களத்தை இன்று முதல்
சீராகக் கற்றறிந்து
சங்கையுடன் வாழ்ந்திட நாம்
சங்கற்பம் செய்திடுவோம் !

ஆதி சிவ னென்றும்,
ஆதாமின் ஈசனென்றும்,
நீதி வழுவாத
நெறிகள் கடைப்பிடித்துச்
சாதித்ததென்ன ?
சமயத்தை மாற்றி, இனிப்
'போதி'மதம் தொழவே
புது வருஷ சங்கற்பம் !

வேட்டி, அரைச் சால்வை
மேலங்கி, ஆபாரம்
போட்டு, எமக்குப்
பொருந்தி வரு பண்பாட்டின்
மேட்டிமையைப் பேசி, இனி
மேன்மையெது ? சாரம், மேற்
'கோட்' அணிய இன்றோடு
கொள்வோம் ஒரு விரதம் !

செல்வா, மாணிக்கம், நற்
சிங்கம், தான்தோன்றி எனும்
ஒவ்வாத் தமிழ்ப் பெயர்கள்
ஒழிக ! இனி நாமம்
சில்வா, மெனிக்கா, நற்
சிங்கா, நந்தன்சிறி எனச்
சொல்வோம் எனவே நாம்
சூளுரைப் போம் இன்றோடு !

எல்லாம் சரி ! ஆனால்
இன்னும் ஒரு சிக்கல்,
பொல்லாங்கில் எம்மைப்
புகுத்தும் ! அதற்கும் ஒரு
நல்ல வழி கண்டால்,
நமக்கிந்த நாட்டினிலே
வெல்லம் தான் வாழ்க்கை !
வினையேதா ? கேள் மனமே !

சின்ன வயதில் எமைச்
சீராட்டி, பெற்றோர்கள்,
'மின்னி' அணியவென
மென் காது குத்தியதால்
என்ன விளையுமென
எண்ணாது போனார் ! இச்
சின்னத்தை, எங்ஙன்
சிதைக்க வழி காண்போம் ?

★★★

*தினகரன் 14.04.59*
*- புத்தாண்டு மலர்-*

*எட்டுணையும் இலக்கியம் அறியாத ஏழைத் தருமியின் பரம்பரையில் வந்தவனென்று தன்னைத் தானே கற்பித்துக் கொள்ளும் தான்தோன்றிக் கவிராயர், தருமிக்குப் போலத் தனக்கும் துணை செய்யுமாறு மதிசூடும் சிவனிடம் 'பரிசு கேட்டு', அம்மானை பாடுகிறார். வாசகர்கள் எம்முறையில் பொருள் கொள்ளினும் பொறுப்பு எங்களுடையதல்ல. – தினகரன் 05.10.63.*

## பரிசு கேட்டம்மானை !

அம்மானை ! அம்மானை ! ஆரணியாம் அம்மானை,
இம்மானி லத்தவர்கள் ஏத்துகின்ற பார்வதியைத்,

தன் இடத்தில் வைத்துத் தழுவும் சதாசிவனே !
சென்னி குனிந் தடியேன் சேவித்தேன் அம்மானை !

மண்டலத்து நாயகனே ! மாசிவனே ! உன்னடியைத்
தண்டனிட்டு வேண்டிநின்ற தருமிக்கு முன்னொருநாள்

பாட்டெழுதிக் கையளித்துப் பரிசில் பெற வழியைக்
காட்டி வைத்த மேலோனே ! கடைக்கண்வை; அம்மானை

தருமி பெயர் சொல்லத் தற்சமயம் நான் இருக்கக்
கருமித் தனம் எதற்கோ ? கை கொடுத்து, மீண்டொருகால்

அன்றைப் பணியை இன்றும் ஆற்றுதற்கு வாராயோ ?
"என்றுஞ்" சிவமே ! எளியன் எனைக் காராயோ ?

சொந்தத்தில் ஏதேனும் சுவையாய் எழுதிடுமோர்
விந்தைத் திறமை விளையாக் களர் நிலமாய்க்

குந்தி யிருந் துனது கோயிலடி மூலையிலே
மந்திரங்கள் சொல்லி மணி கிலுக்கிப் பூசை செய்து,

பிச்சைப் பிழைப்புப் பிழைத்த தருமி மனத்
திச்சைக் கிரங்கி, அந்நாள் ஏந்தல் அவையினிலே

கட்டி வைத்த ஆயிரம் பொற் காசைப் பரிசு பெற
நெற்றி விழி நெருப்பால் நிட்டூரம் பண்ணிடவும்

கூசா தவனே ! குற வள்ளிக் கம்மானே !
காசாயிரம் ரூபாய் காத்திருக்கப் பார்த்திருந்து,

பொச்சடித்துப் பொச்சடித்துப் புலமையின்றிப் பொச்சடித்து
புச்சடித்துச் செல்லரித்துப் பூட்டனது கோற் காலிக்

குப்பை மடுவத்துக் கொப்பர்ப் பெட்டிக் கடியிற்
தப்பிக் கிடந்த தமிழ்ச் சுவடிக் கட்டொன்றைத்

தட்டி யெடுத்துத் தடவித் தடவி யொரு
மட்டில் விளங்கியதை மட்டிட் டெழுதி யெடுத்

தச்சிட்டு, மட்டையிலே அடியேன் பெயர் பொறித்து
வைச்சிருக்கும் ஆராய்ச்சி மான்மியத்தை நீ யறிவாய் !

பேரா சிரியப் பெரியார் ஒருவரும், ஓர்
ஆராய்ச்சி நூல் செய் தளித்துள்ளார்; ஆனாலும்,

உன்னை மதிக்காத உதவாக்கரைக் குழுவின்
சின்னத் தனங்களிலே சிக்கிச் சில சமயம்

உன் கொள்கைக் கொவ்வாத உண்மைக் கருத்துகளைச்
சொன்னதையும் நீயறிவாய் ! சூடு கொடுத் தவரின்

தப்பை உணர்த்துதற்குத் தருணம், இது போலே
எப்பொழுது கிட்டும் ? எனக்கே பரிசளி யாய் !

போட்டி நடுவர்களைப் பொருட்படுத்தா துன்கரத்தை
நீட்டியடக்கி என்றன் நெஞ்சு குளிர வைப்பாய் !

என் போற் தருமிகளோ இரண்டொருவர் மேலும் உளோம்;
உன்பாற் பெருமன் புடையோம் காண்; அம்மானை !

என்றுமுள தென்தமிழுக் கிறைவா ! சதாசிவனே !
தொன்று மரபு வழித் தூய்மைக்குக் காவலனே !

யாப்பு வழுவாமல், யதார்த்தம் தழுவாமல்
பாப் புனைதல் மாத்திரமே பழைய தமிழ் மரபென்

றார்ப்பரித் துன் சேவகர் யாம் அடித்துரைத்து வந்தாலும்
சீர்ப் பிழையும் உண் டெங்கள் செய்யுளிலே; என் செயலாம் ?

தருமி வழிவந்தவொரு தம்பி, தளைப் பிழைத்த
தரும விதிப் பா நூல் தந்துள்ளார்; அன்னார்க்கும்

கொள்கைப் பிடியைக் குழியிற் புதைத்து விட்டு
நல்கிப் பரிசை, நமைப் புரப்பாய்; அம்மானை !

போட்டிக்குத் தீர்ப்புரைத்தோர், புனை கதைகள் யாவினிலும்
மேட்டிமைகள் சார்ந்ததென வேறொருவர் நூலுக்கே

பாராட்டுரைத் துள்ளார்; "பரிசவர்க்கே சேரும்" என,
ஓராமல் நீ வழங்கின், உள்ளதற்கும் கொள்ளிவைத்த

காரியமாய்ப் போம்; எங்கள் கன்னையிலே இன்னொருவர்,
யாரெனினும் அப்பரிசை அடையச் செய்; அம்மானை !

பரிசு நிதியினிலே பாக்கி இன்னும் உண்டாமேல்,
தரிசு மதி படைத்த தருமிகட்கா பஞ்சம் எம்முள் ?

நாடகமா ? பொது நூலா? நல்லோர் சரிதைகளா?
லாடம் கழன்றாலும் லாயத்தில் ஓயாமல்,

குறுக்கு வழியிற் "குதிரை ரேஸ்" ஓட வல்லார்
இருக்கின்றார் எம்மிடையே ! என்னபட்டும், நேர்வழியிலே

நல்ல தமிழின் நயங்கள் முழுதுணர்த்த
வல்லோர்கள் – உன் எதிர்ப்பு வட்டத்தைச் சேர்ந்தோர்கள்

புனைகின்ற நூல் அனைத்தும் புறக்கணித்துன் நாமத்தை
நினைகின்ற தல்லால் இந் நீணிலத்தில் வேறு பணி

ஏதும் அறியேமை, ஏழைத்தருமிகளை,
மாதையொரு பாகத்தில் வைத்தோனே ! கைதூக்கு !

பாதி மதியுடையோய் ! பாம்பைச் சிரசணிந்தோய் !
ஆதி சிவனே ! உன் அம்மானை ! கை தூக்கு !

# ஆங்கிலத்தைப் பாவில் நீர் ஏனோ கலந்தீர் ?

நுண்மைக் கவிநுவலும் நூல்வல்லோய் ! நும்முடைய
உண்மைப் பெயரென்னென் றுரையும் – தெண்மையுறத்
தான்தோன்றி யென்புனைபேர் தாங்கிக், கவிராய !
ஏன்தோன்றி யொளிக்கிறீ ரீங்கு ?

எண்ணற்ற இன்சொற்க ளெந்தமிழ் மிக்கிருக்கப்
பண்ணற்ற வாங்கிலத்தைப் பாவில்நீர் – கண்ணியமாய்
ஏனோ கலந்துகலந் தெப்பொழுதுஞ் செப்புகிறீர் ?
தேனோர் தமிழ்ப் பொருளைத் தேர்.

மு. க. சூரியன்.
14.08.1955

*குறிப்பு : மு. க. சூரியன் எழுதிய இந்தக் கவிதைக்குப் பதிலாக எழுதப்பட்டது பின்வரும் கவிதை.*

# வழக்காறொழிந்த வார்த்தை வராதெனக்கு !

உண்மைப் பெயரை ஒளிக்காமற் சொல்கிற
திண்மை எனக்கில்லை; தேசமெலாம், – என்னைத்
தேடி வெடிவைக்கத் தீயருளர்; தப்பிடுவேன்,
தாடிக்குள் தானொளிப்ப தால் !

"பொய்யா, புனைசுருட்டா, பொச்சாப்பா, செய்த பிழை ?
மெய்யாய் உரையும்" என வேவினவும் – ஐயா !
நல்லார்கதி இந்தநாளில் இதுதான்; ஆம் !
பொல்லாத திந்தப் புவி !

அதுபோக, நீர் ஏதோ ஆங்கிலத்தைப் பாவில்நான்
மெதுவாய், நுழைப்பதனை, 'மிகவும் – பொதுவாய்
உள்ளசெயல்' என்று ஓராமல் கண்டித்தீர்;
விள்ளுகிறேன் கேளும் விடை !

பண்டிதனாய் நானிருந்தாற் பல்லுடைக்கும் பாஷையிலே,
விண்டிடுவேன் பாட்டும் விருப்பம் போல் ! – கண்டீரா,
தூய தமிழின்று தொல்லுலகில் ? ஏதுக்கு
வாயடைத்தீர் ? கூறும் 'வதில்' !

வேற்றான் மொழியிங்கு வேரூன்றி, எம்மொழியின்
மாற்றுக் குறைந்து மறைந்ததெலாம், – சாற்றி
அழுதென்ன ஆகும் ? அர்த்தம் புரியாமல்
எழுதும் கவி இங்கு ஏன் ?

வடக்கே இருந்து வார்த்தை கடன் வாங்கி
மடக்கித் தமிழென்று மாரடிப்பீர் ! – துடக்கோ
பட்டுவிடும் வெள்ளையனின் பாஷை கலந்தால் ? தமிழும்
கெட்டு விடுமோ ? வெட்கக் கேடு !

திசைச் சொல், வடசொல், மேற் தேசத்துச் சொல், தமிழை
அசைத்தா விடுமென்று அஞ்சுகிறீர் ? – அசைத்தால்
தனித்தமிழென்றொன்றிந்தத் தாரணியில் வாழ்கிறதே !
இனித்தானோ சாகும் இது ?
தனித் தமிழைப் போற்றித் தாபரிக்கும் கட்சியிலே,
எனைத்தான் தலைவரென ஏற்றாலும் – அனைத்தும்
என்பொறுப்பில் விட்டாலும், ஏற்கேன் நான்; வாசகரின்
அன்புண்டு; போதும் அது !

'சிம்பிள்' ரசிகருக்குச் சீரான பாட்டெழுதி,
அன்புள்ள அன்னார் அகத்தினிலே, – தம்பி !
வாழ்ந்தால் அது போதும்; வழக்கிலுளவார்த்தைகளில்
ஆழ்ந்தால், தவறோ அது ?

வழக்காறொழிந்த வார்த்தை வராதெனக்கு !
பழக்கத்திலுள்ள பதம் என்றால், – விளக்கம்
தரத்தக்கதென்றால் தமிழல்ல என்றிடினும்
உரித்தாக்கிக் கொள்வேன்; உணர் !

★★★

# கவிஞனின் தத்துவம்

# உண்மை

### பல்லவி

உண்மைக்கு அழிவில்லை என்பவரே ! – அந்த
உண்மையின் சூட்சுமத்தை யார் அறிவீர் ?
உண்மையும் சில வேளை பொய் ஆகலாம் !
பொய்மையும் ஒரு வேளை மெய் ஆகலாம் !

### அனுபல்லவி

சத்தியம் தவறாத உத்தமர் வாய்ச் சொற்கள்
அர்த்தம் தவறுபட்டு அழிவூட்டலாம்
திட்டமிட்டே உலகைத் திருத்தக் கருதிச் சிலர்
செப்பிடும் பொய்கள் உண்மைச் செறிவூட்டலாம்

### சரணம்

"சத்தியமேவ ஜயதே" என்று மந்திரங்கள்
சாற்றித் தவமிருந்த ஒரு முனிவன்
சத்திய விரதத்தினைக் காப்பதற்காய்த் தன்னைச்
சரண் அடைந் தவனைக் கொலை காரரிடம்
ஒப்புவித்தான் ! நரக உலகடைந்தான் ! உண்மைக்கு
உயிர்ப்பலி இட்டுத் தவப் பயன் இழந்தான் !
முப்புரம் எரித்தவன், ராட்சதனைக் கொன்று
மானிட உயிர் காத்த வேடனுக்கு

சொர்க்கப் பயன் அளித்தான் ! வாய்மைக்கும் பொய்மைக்கும்
சூட்சும அர்த்தங்களை யார் அறிவார் ?
உண்மைக்கு அழிவில்லை என்பவரே ! அந்த
உண்மையின் சூட்சுமத்தைச் சித்தர் அறிவார் !

### அனு சரணம்

"பொய்யுடையோன் ஒருவன் சொல் வலி மையினாலே
மெய்போலும் ஆகும் ! மெய் போலும் !
மெய்யுடையோன் ஒருவன் சொல் வலி யின்மையினால்
பொய் போலும்" என்ற ஔவை மொழி.

"பொய்மையும் வாய்மையே உலகினில் புரைதீர்ந்த
நன்மை பயப்பின்" என்ற வள்ளுவன் சொல்;
ஆயிரம் பொன் பெறும் அருமந்த உண்மைகள் !
ஆய்ந்தறிந்தே நிசத்தைத் தேர்ந்திடலாம் !

★★★

# மார்க்க சீலன்

## கண்ணிகள்

பாரமிதைகள் என்னும் பண்பாடுகள் பத்தும்
பகர்வாய் என் தோழா !
தானம், சீலம், பொறை, தளரா வீரமுடன்
தியானம், உணர்ச்சி, அருள், தீர்க்க உபாயம், வன்மை,
ஞானம், இவைகள் பத்தும் ஞாலக் கடல் கடந்து
வானம் எனும்பரி நிர்வாணம் அடையும் வழி
அறிவாய் என் தோழா !

வாய்மைகள் எனும் நான்கு வாழ்க்கை முறைகள் எவை
வழுத்துவாய் என் தோழா !

துக்கம் நிலைத்திருத்தல், துக்கம் உருவம் பெறல்,
துக்கம் நீக்கம், அந்தத் துயரின் நிவர்த்தி வழி !
சிக்கல் அறுத்துலகின் சிறுமைகளைப் பொசுக்கத்
தக்க சிறந்த வாய்மைச் சாதனங்கள் இவைகள்
அறிவாய் என் தோழா !

சீலங்கள் எட்டுடன் நிதானங்கள் பன்னிரண்டும்
செப்பியதார் தோழா !

அட்டாங்க சீலங்களும் ஆறிரு சார்புகளும்
எட்டும் அறிவுக்கப்பால் இசைவுறும் ஞானங்களும்
கட்டுகளைத் தகர்த்துக் காசினியைக் கடந்து
விட்டு விடுதலையாய் விளங்கிடும் மார்க்கங்களும்

புத்தன் கொடை தோழா – கௌதம
புத்தன் கொடை தோழா !

# ஒரு நாட்டுப் புறத்தானின் வெற்றிலைத் தத்துவம்

பச்சை வெற்றிலை வெள்ளைச் சுண்ணாம்பு
பழுப்புப் பாக்குக் கரும் புகையிலை
மென்று தின்றே உமிழ்ந்தால் சிவப்பாய்
ஒன்று படுகிதடா !

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை
அத்தனைக்கும் வித்தியாசம் நிறம்; எனில்
இரத்தம் சிவப்படடா – அடடா !
சித்தம் தெளிந்ததடா !
சத்துச் செறிந்ததடா ! – சமத்துவச்
சாரம் புரிந்ததடா !

செவ்விந்தியர், வெள்ளைக்காரர் – கறுப்பர்கள்
சீனர், ஈ ராக்கியர், யூதர் – இரானியர்
இவ்விதமாய்ப் பிளவேன் – உலகில்
ஈரறிவுப் பொருளின் செவ்விரத்தப் பொதுமை – தனை நாம்
சிந்திக்க வேண்டுமடா !

ஒற்றுமையாக மனிதர் ஒருமித்து
வெற்றிகள் கண்டிந்த மேதினி மேம்பட
வெற்றிலைத் தத்துவத்தை – வழியாய்ப்
பற்றிடல் வேணுமடா !
கற்றிடப் பாடமொன்று – தாம்பூலக்
கதையில் இருக்குதடா !

★★★

# வரப்புயர்ந்த பின்னாலே ...

வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோன் உயரும்

அருமந்த பொன்மொழிகள் !
ஔவை சொன்ன நாலுவரி
அருமை அது வரைக்கும் !
வரப்புயர நீருயர்த்தி
நீருயர்த்தி நெல்லுயர்த்தி
நெல்லுயர நெஞ்சுயர்த்தி
நெஞ்சுயர்த்திப் பாடுபடும்
குடிமக்கள் தம் உழைப்பே
கோனுயரக் காலாகும் ...

கோனுயர்ந்த பின்னர் ? கோனுயர்ந்த பின்னர் என்ன ?
கோனுயர்ந்த பின்னர் குடியுயர வேண்டுமன்றோ ?

கோனுயர்ந்த பின்னர் தான்
குழறுபடி ஆரம்பம் !

கோனுயர்ந்த பின்னர்
குடியுயர வேண்டுமன்றோ ?

கோனுயர்ந்த பின்னும்
குடிமக்கள் தம்முடைய
ஊனுயிருக்கான உணவின் விலை உயரக்
கண்டதல்லால் குடியுயரக்
காணோமே ! காணோமே !

ஏழை விவசாயி இரு கையடித்துழைக்கும்
தோழர் குடிமனைகள் தோறும் பசிஉயரக்
கண்டதல்லால் நெல்லுயரக்
காணோமே ! காணோமே !

பஞ்சத்தால் வாடுகிற பஞ்சைகளின் வாழ்விற் கண்
நீருயரக் கண்டதல்லால் நீருயரக் காணோமே !
இல்லையென்ற குடிமக்கள்
இருகை விரித்தேந்தும்
இரப்புயரக் கண்டதல்லால்
வரப்புயரக் காணோமே !

கோனுயர்ந்த பின்னரும் அக்
கோனுயரக் காலானோர்
வாழ்வுயரக் காணோம் !கோன்
வர்க்கம் உயர்கிறது !

கோனுயரக் கோனின்
கொடியுயரக் குலமுயரும் !
கொடி குலத்தார் 'குடி' யுயரும் !
குதங்களிலே நெல்லுயரும் !
நீருயரும் நீருயரும்
என்று தமக்குள்ளே
சேருகிற சேர்வுயரும் !
சேர்ந்து நிலவுடைமை
சேர்த்துப் பெருக்கித் தம்
சேமத்தைப் பேணு நிலப்
பரப்புயரும், பரப்புகளைப்
பாலிக்கக் கட்டுகிற
வரப்புயரும், தங்கள் உயர்
வர்க்க நலம் காப்பதற்குக்
கோனும் குலத்தவரும்
கூட்டாளிப் பேர்களுமாய்ப்
பேணுகிற சட்டப் பிடிப்புயரும்; வரி, வாழ்க்கைச்
செலவு, கெடுபிடிகள்
சேட்டை இவ்வாறாய் நமக்குப்
பலவுயரும்; உயராது
பாட்டாளி வாழ்க்கை மட்டும் !
பாடுபடும் பாட்டாளிப்
பாமரரின் வாழ்வுயர,
வீடுயர, நாடுயர
வேண்டுமெனில் என்ன வழி?

தடி உயர வேண்டும் ! மேற்
தட்டு வர்க்கம் வீழ்த்துகிற
அடி உயர வேண்டும் ! பின்
ஆட்சியின் மீதேழை மக்கள்

பிடி யுயர வேண்டும்; ஒரு
　　　　பேதமிலாப் பொதுவுடைமைக்
கொடியுயர வேண்டும்; மண்
　　　　குடியுயர மார்க்கம் அதே !
கோனை முறித் தாட்சி பற்றக்
　　　　குடி மக்கள் தம் கரத்துக்
கோலுயர வேண்டும்
　　　　குடியுயர மார்க்கம் அதே !

★★★

# இரு சம கோடுகள் இணையும்

புகைவண்டிப் பயணம் புதியதோர் அனுபவம்
தண்ட வாளங்கள் சந்திப்பதில்லையா ?
முன்னே பார்த்தால் முடியாது போலத்
தெரிந்தது; ஆனாலோ திரும்பிப் பார்த்தால்
ஒடுங்கி ஒடுங்கி நெருங்கி நெருங்கி
எங்கோ ஓர் முனையில் இரண்டும் ஒருமித்தோர்
புள்ளியில் சங்கமம் புரிதல் தெரிந்தது
மனித இனங்களே மறுபடி இணையப்
பாதையைத் திரும்பியே பாரீர் !
கடந்தகா லத்தை நிகழ்காலத்துடன்
கலந்தெதிர் காலத்தை இருகோட்டிணைவாய்ப்
புனைந்திடலாகும் புதிதாய் !
பேதம் அகற்றிடும் போதம் புலர்கவே !
இருசம கோடுகள் இணையும் !

★★★

# பெண்மை

*(குறிப்பு: வீரகேசரியின் ஞாயிறு(04.07.1954) ஆசிரிய பீடத்தில் இருந்த போது 'சுசீலா' என்ற பெயரில் "மாதருக்கு மட்டும்" என்ற மாதர் பகுதியைச் சில்லையூர் நடத்தினார். 'பெண்ணுக்கு இல்லத்து ஆட்சியே' என்று மஹாகவி எழுதிய கவிதைக்கு மாற்றாக 'மஹாலக்ஷ்மி' என்ற பெயரில் சில்லையூரே எழுதிய கவிதை)*

# ஐயா, 'மஹாகவி' !

ஐயா, மஹாகவி ! உங்கள் கவிதையின்
அழகுக்கு நான் அடிமை ; ஆயினும் பெண்கள்
கையாலா காதவர்கள் என்று சொன்னதைக்
கண்டும னம்குளிர்ந்த தில்லைஎனக்கே !
உய்யாதுங் கள்கருத்தி னால் இவ்வுலகே;
ஊதிஅ டுப்பெரித்துச் சோறுசமைத்து
நெய்யோடு நாங்கள் இட, நீங்கள் உண்ணுதல்
நேற்றைப்ப ழையகதை; நாளைபுதிதே !

மூளை குழம்பவில்லை மக்கள் எவர்க்கும்;
முன்னேறு கின்றனர்கள்; நம் கடமையை,
நாளைபு துமைஇங்கு காணஎழுங்கால்,
நாங்கள்ம றப்பதில்லை ! நீங்கள் திரும்பும்
வேளைசி ரித்தபடி நிற்பதைவிட்டால்,
வேறேதும் இல்லைநமக் கேற்றதென்கிறீர் !
ஆளைம யக்குவதும், பூசிமினுக்கி
அழகாயி ருப்பதுவும் எங்கள் தொழிலா ?

வீட்டைச்சி றையெனநாம் கூறுவதில்லை;
வீடேந மக்கெனும் அக் கேடுநிறைந்த
ஒட்டைப்ப ழையகொள்கை இனிஎமக்கே
ஒவ்வாதென் றோர்குரலி லேஅறைகிறோம்.
மாட்டைக்க றக்க, மனை யைப் பெருக்க, நும்
மகவை வளர்க்கவும்முன் வருதல்விட்டே,
"பேட்டுச்சி றுகுயிலி! வீட்டில்இரடி!
பேறேது வே(று)? " எனும்அப் பேச்சை வெறுப்போம்.

ஊரைஅ ரசு செய்ய நாங்கள் வருவோம் !
உலையில்அ ரிசியிட நீங்கள் வரலாம்;

ஏரைஎடுத்துழவு மோதயங்குவோம் ?
எழுதிப்பி ழைக்கமுயல் வோம் ! விழிகளில்
நீரைவ டித்துநின்று கெஞ்சுதல் விட்டே,
நெற்றிவி யர்வைசிந்தி நாமும் உழைப்போம்;
யாரைஒ டுக்கிவைக்க முனைந்து விட்டீர் ?
யாம்எவ்வி தத்தில் இங்கு குறைந்துவிட்டோம் ?
நீங்கள்ந மதினத்தைத் தாங்குவதெனில்
நிலையற்ற வாழ்வுநமக்(கு); இந்தநிலைமைக்(கு)
ஏங்கிக்கி டக்கவில்லைப் புதுப்பெண்களே !
எதுவும்ப ணத்தில்இன்று சுழல்வதனால்,
நீங்கா(து)அ தில்லையெனில் அடிமை நிலை;
நிகராவ தில்லைமக்கள் என்றும்; அதனால்
நாங்கள்பொ ருளியற்ற நினைந்துவிட்டோம் !
"நன்றாய்இ தில்லை" எனல் நல்லதல்லவே !

★★★

## அணுவின் இரகசியம்

கட்டை விரல் மடித்து,
கை மடக்கி, சட்டென்று
நெட்டை விரல் சேர்த்து
நீட்டி, நொடிக்கின்ற

நேரத்துள், அம்புவியை
நீறாக்கும் மாசக்தி
ஓர் அணுவில்எவ்வாறு
ஒடுங்கும் ? பெரிய புதிர் !

கைப் புறத்தில் ஏந்தி, இரு
கனகமுலை தந்து,
செப்பமுறத் தாலாட்டி,
சீராட்டி, ஆளாக்கி

விட்டவளின் துன்பம்
        விரட்டி, அவளுடைய
பட்டினியின் தீ தணிக்க,
        பட்டாளக் காரருடன்

சேர்ந்து, பர தேசம்
        சென்ற தன தேகமகன்,
போர்முனையில் தன்னாவி
        போக்கியதாய்ச் சேதிவர,

பெற்ற வயிறெரிந்து,
        பேச்சிழந்து, 'போருக்கு
விற்றேனே என் கருவில்
        விளைந்த மணியை! " எனும்

ஊமை நினைவுத் தீ,
        உள்ளத்தில் வேல் பாய்ச்ச,
ஆமை போல் தன் துயரம்
        அத்தனையும் உள்ளடக்கி,

அன்படர்ந்த தாயுள்ளம்
        அலமந்து, அம்புவியின்
துன்பமெலாம் கண்ணீர்த்
        துளியொன்றில் காட்டுகையில்

கட்டை விரல் மடித்து,
        கை மடக்கி, சட்டென்று
நெட்டை விரல் சேர்த்து
        நீட்டி, நொடிக்கின்ற
நேரத்துள், அம்புவியை
        நீறாக்கும் மாசக்தி
ஓர் அணுவில் எவ்வாறு
        ஒடுங்குமென நான் அறிந்தேன் !

★★★

# அகலிகை சாபம்

(கவிதை நாடகம்)

பாத்திரங்கள் : கௌதமர், அகலிகை, இந்திரன், இராமர்.

*(வனம் ; பட்சிகளின் கலகலப்பான ஓசை.*
*தூரத்தே நீரருவி பாயும் ஒலி)*

கௌதமர்:– சேற்றினில் முகிழ்த்த செந் தாமரை யன்ன வாறிவ் வடர்
காட்டினிற் கடிமலர்க் கமழ்வு பொழியும் என் காதற்
தேட்டமே ! அகலிகைத் தேவியே ! ஈடிலாத் திருவே !
ஏட்டினிற் தீட்டிடா எழிற் கனிக் கவிதையே ! பாராய் !

மேற்கினைச் செங்குழம் பாலே மெழுகிக் கதிரவனும்
பாற்கடற் பஞ்சணை மீதிற் துயின்று, பகல் முழுதும்
ஆற்றிய வெவ்வினையாற் கொண்ட சோர்வை அகற்ற, இளைப்
பாற்றியைத் தேடிப் படுவானிற் சாய்கின்ற பான்மையென்னே!

அகலிகை:– காதலால் என் வலக் கைத்தலம் பற்றிய கௌதமரே !
சீதளம் தோய்ந் ததோ சேய்மையிற் பாய்கின்ற சிற்றருவி
மீதரை நாழி விழுந்தங் களைந்து, விளையாட்டயர்ந்தே
ஆதவனுக்கு முன்னால், அடியாள் குளிப்பாட அனுமதிப்பீர்!

கௌதமர்:– மாலை மயக்கிற் புனலில் நீராடி மனை புகுதல்
சாலவும் நன்று; சரி; செல்; அதோ, குடதிக்கினிலே,
ஞாலம் புரக்கின்ற ஞாயிறு தீட்டும் நற் சித்திரத்தின்
கோலம் ரசித்துச் சிறிது கழித் துனைக் கூடுகின்றேன் !

- அடுத்த காட்சி -

*(அகலிகை அருவிக்குச் செல்கிறாள், அருவியோடும்*
*ஓசை சமீபித்து வந்து, உயர்ந்து தொடர்கிறது.)*

அகலிகை:– சல சல வென்று சதிர் நடமாடும் சலம் ஓடி,
அலை யலையாகப் பாறைகள் தாவிடும் அழகென்னே !
மலையுள குளிர்மை வாரி வடித்து வருமிந்தப்
பொலிவுள புனலிற் புரண்டு குளித்துப் போவேனே !

இந்திரன்:– (சற்று எட்டநின்று)
ஆ ! அதோ, ஓடையில் ஆடைகளின்றி நீராடி, எழில்
மேவ நீச்சாடும் அம் மெல்லியள் யார் ? இந்த மேலுலகக்
காவலன் இந்திரன் எந்தனின் கண்கள் இது வரையும்
பாவம் ஏதெய்தின, பாவைமுன் என் கட் படாமலுக்கே ?

தேவ அரம்பையர், இவ் வெழிற் தேவிமுன், சீ ! சிற்றரக்கியராய்ப்
போவர் ! இப் பூவை முகர்ந்து புணர்ந்திடும் போகத்திற் புக்குதற்காய்,
ஆவலுற் றெந்தனின் ஆகம் முற்றும் துடித் தார்க்கின்ற தாதலினால்,
பாவையை நாடிப் பரிந்தெனைப் பாலிக்கு மாறுடன் கோருவனே!

அகலிகை:– யாரவன் ? யார் அந்த ஆடவன் ? சீ ! நான் நீராடுவதை,
ஓர நின்றங்கே ஒளிந்து பார்த் துள்ளக் கரவை, விழி
சேரச் செலுத்திச் சிரிப்பது போல நடிப்பியற்றி,
கோர நினைப்பை மறைக்க முயன்று, குழைந்தங் இதோ,

பாறைக்குப் பாறை நகர்ந் திந்தப் பக்கலை நாடுகிறான் !
யாரைத் துணையாய் அழைப்பன் இக் கானில் யான் ? சீக்கிரமாய்
நீரை விட்டேறி, உடைகள் புனைந் திவ்விடமிருந்து
தூர விலகி, இத் தூர்த்தனை நீக்கிக் குடில் அடைவேன் !

- அடுத்த காட்சி -

*(அகலிகை குடில் நோக்கி விரைய கௌதமர் எதிர்ப்படுகிறார்.)*

கௌதமர்:– அகலிகை ! தேவி ! நீ ஆய்த்துப் பறந்தே, அவசரமாய்ப்
புகலென்ன சேதி ? புகலாய் ! எதற்குப் புலம்புகிறாய் ?
அகலிகை:– திகழோடை தன்னில் நீராடுகையில், ஓர் ஆடவன், கா
முகனாகி, நோக்கி, நெருங்கினன்; தப்பி விரைந்தனன் யான்!

கௌதமர்:– நோக்கிற்கா அஞ்சி நுடங்கினை ? பேதாய் ! உன், நொய்மையினைத்
தேக்கும் மென்மேனித் திகழ்வின் அழகைப் பிறரெவரும்,
பார்க்காதிருக்கக் குருடரா ? சேச்சே ! பயம் தவிர்ப்பாய் !

அகலிகை:– தீக் கண்களால் எந்தன் தேகத்தைத் தீண்டித் திருட்டுச் சுகம்
மேற்கொண்ட செய்கைக்கே அஞ்சினன்; அல்லாமல் அந்த வெறும்
நோக்கொன்றுக்கல்ல; யான் நோவதிற் தப்பேதும் உள்ளதுவா?

கௌதமர்:– போக்கற்றான், போகட்டும் ! பொழுதங்கே சாய்ந்தது ! போய் உணவை
ஆக்கிப் படைத் துண்டு வாராய், இனி நாம் துயிலயர்வோம்!

*(பொழுது சாய்ந்து, இரவு படர்ந்து கழிவதைக் குறிக்கும் இசை)*

இந்திரன்:– கள்ளி, இன்று மாலையிலே கடுகி மறைந்து விட்டாள் !
நள்ளிரவு !சந்திரனும் நகர்ந்து மறைந்துவிட்டான் !

சின்னக் குடிசைக்குள், சிங்காரி, கௌதமனைப்
பின்னித் தழுவிப்பிணைந் தங்கே தூங்குகிறாள் !

கோழி குரல் கேட்டாற் குருதேவன், தன் கடமை
நாழி பிறந்த தென நதி நாடிச் சென்றிடுவான் !

காலைக் கடனை, அவன் கழித்துத் திரும்பிடுமுன்,
கோலம் அவன் போலக் கொண்டந்தக் கோகிலத்தைக்

கூடி மகிழ்ந்து, குலவி அகன்றிடலாம்!
பேடித்தனம்; எனினும் பித்தம் இனித் தாளேன் யான் !

*(இந்திரன் கோழிபோற் கூவும் ஒலி)*

கௌதமர்:– இன்றென்ன, சீக்கிரமாய் இரவி துயிலகன்றான் !
நன்று துயில்கின்றாள் நாயகியாள்; தூங்கட்டும் !
நின்று துயிலகற்றும் நீள்கடன் செய் சேவலைப் போற்
சென்றென் கடனைச் செலுத்தித் திரும்பிடலாம் !

*(கௌதமர் அகன்று செல்கிறார்)*

இந்திரன்:– அப்பாவி கௌதமனும் அகன்றான்; அவன் உருவுக்
கொப்பாக மாறி, இனி உட்சென்று துய்த்திடலாம் !

*(சற்றுத் தரித்து)*

பாதிக் கனவிலும், ஓர் பாதித் துயிலினிலும்,
பாதிக் கனவொன்று படுக்கை பயில்கிறது !

சீத மதி முகத்திற் செவ்வாய்க் கனி பிளந்து,
போதை அடங்கப் புசியென் றழைக்கிறது !

கட்டி அமுதம்போற் கழுத்து, விளக்கொளியிற்
பட்டுமினுங்கி, நகம் பதியென்று கூப்பிடுது !

விண்ணென் றெழுந்து விளங்கும் இரு பூங்கொம்பும்
உண்ணென் றழைத்தென் உயிரிற் தீ மூட்டுகுது !

நாரதரின் வீணை நரம்பிடையோ, வந்தென்னை
ஆரத் தழுவென் றழைத்துத் துவள்கிறது !

குன்று சொரியும் குளிர் அருவி போற் கால்கள்
இரண்டும் வழிந்து, "சவால்; ஏற்பாயோ ?" என்கிறது !

*(தாழ்ந்த குரலில்)*

கண்ணே ! அமுதத்தைக் கசப்பாக்கும் காரிகையே !
என்னை அணைவாய்; நாம் இன்பத்துள் மூழ்கிடுவோம் !

அகலிகை:– (தூக்கம் சற்றே கலைந்து)
கண்ணா... ! ஊ..ம்...! என்ன இது ? கௌதமர்க்கு இன்றின்ப
எண்ணச் சுருதி, சற்றே ஏறித் தொனிக்கிறது !

இந்திரன்:– வண்ண மடவாளே ! வாய்ச் சொற்கள், இவ்வேளை
என்ன பயனும் இல ! மௌனம் ! பேசாதே !

*(இசை ஏறித் தொனிக்கிறது)*
*- அடுத்த காட்சி -*

கௌதமர்:– வானம் வெளுத்து வரக் காணோம்! காலையென
நான் நம்புமாறு, நடுச் சாமக் கோழி குரல்
ஏமாற்றி விட்டதிதில் ஏதோ புதிருளது ! ஆம் !
ஆமாம் ! விரைந்து குடில் அடைந்து தெளிந்திடலாம் !

*(இசை மறுபடி ஏறித் தொனிக்க)*

ஆ ! இதேது ? என்ன ? யாரடா என் போல்,
அகலிகை தன்னை ஏமாற்ற,
மேவியே வேடம் புனைந் தவளருகின்
மிசை கிடக்கின்றவன் ? ஆகா !
பாவி ! இந்திரனா ? படுவினை புரிந்த
பாதகா ! உன்னுடல் முற்றும்,

தீ விளைந்தெரியும் கண்களால் நிறைந்து
திரிந் தலைந் திழிவடைந் தொழிவாய் !

அகலிகை ! பெண்ணே ! அவமதிப்புற்றிங்
அயர்ந்து நின்றரற்றுமோர் பாவாய் !
புகலுதற் கொண்ணாப் புன் செயல் புரிந்த
பூவையே ! இவன் உனை அணுக,
அகமது மரத்தால், கேவலம், உந்தன்
ஆகமும், உணர்ச்சி கொண்டறியும்
தகைமையை இழந்து தவித்ததோ ? கல்லாய்த்
தட்சணம் சமைந்து நீ தரிப்பாய் !

*(சாபம் நிறைவேறுவதைக் குறிக்கும் இசை எழுந்தொலித்து, அடங்குகிறது)*

இராமர்:– தசரத ராமன் எந்தனின் வரவிற்
தளிர்ப்பதற் கான நாள் பார்த்து,
விசனமே சிலையாய்ச் சமைந்ததோ என்ன
விளங்குகின்றாய் அக லிகையே !
வசமிழந்தறியாய்; இந்திரன் சூதின்
வலையிடை வீழ்ந்திடார்ப் பட்டாய் !
வசவகன் றெந்தன் பாத தூளியினால்
வடிவினை மறுபடி பெறுவாய் !

*(சிலை உயிர்ப்பதைக் குறிக்கும் இசை)*
*சிலை உயிர்த்தல்*

அகலிகை:– சாப விமோசனம் ! சாப விமோசனம் !
சற்குண ராம ! நும் தயவால்,
பாபமும் அகன்று, தண்ணியளானேன்;
பணிந்தனன் நும்மிரு பதமே !

இராமர்:– கோப மேலீட்டாற் குறை நிறை நோக்குக்
குன்றிய உந்தனின் கொழுநன்
தாபமுற்றாங்கே நிஷ்டையிற் துயின்றான்;
தவங் கலைந் தவன் விழித் தெழுக !

*(நிஷ்டை கலைதல்)*

கௌதமர்:– யாரது?ராமன் ! உயிர் குடி புகுந்த
அகலிகை ! – அடி பணிகின்றேன்,
சீரடி கொண்டென் சிந்தையின் இருளைச்
சிதைவுறுத்திய ரகு பதியே !

இராமர்:– சீறடி பெயர்த்துக் கற் சிறையகன்ற
செல்வியள், தன்னறிவறிய
ஓர வஞ்சனையாய் ஒழுகினளல்லள் !
ஓர்ந்திதை, அவளுடன் ஒழுகாய் !

கௌதமர்:– நாதன் ரகுராமன் நாமம் நிலை பெறுக !

அகலிகை:– சீதை கணவன் திருப்பேர் திகழ்ந்திடுக !

*(இராமர் மறைய, கௌதமர் அகலிகையை நோக்கல்)*

கௌதமர்:– திங்கள் வதனமுறும் செல்வியே ! சீத மதி
துங்க நடைபயிலத் தோன்றுகிறாள் வானத்தே !

அகலிகை:– என் போற் களங்க இழிவெண்ணிப் போலும் அவள்
தன் பால் வதனத்தைத் தாழ்த்தி மிக நாணுகிறாள் !
கௌதமர்:– சொல்லம்பை என் அகத்துச் சுடு புண்ணிற் பாய்ச்சாதே !
பொல்லான்; அறிவைப் புதைத்து மதியிழந்தோன்;
நல்லோய் ! நடந்தவினை நடுநின்று நோக்காது,
இல்லாக் குறை உன் மேல் ஏற்றிச் சபித்து, ஒன்றும்

கௌதமர்:– கல்லானிற் கீழான கயவன் யான்; மன்னிப்பாய் !
எல்லாம் மறந்தினி நாம் இல்லறத்தை ஓம்பிடுவோம் !

வெல்ல மதி ஒளியில் விளையாட்டயர்ந்து, நம
தில்லத்தைச் சேர்ந் தன்பில் இணைந்து மகிழ்வுறுவோம்!

*(இருவரும் குடில் சேர்ந்து, துயிலத் தயாராவதைக் குறிக்கும் இசை)*

கௌதமர்:– (தாழ்ந்த குரலில்)
கண்ணே ! அகலிகை ! நற் காவியமே ! எந்தனது
எண்ணக் கிழியின் எழுதாத ஓவியமே ......!

அகலிகை:– என்ன இது ? யாரிது? ஆ? இந்திரனா ? கௌதமரா?
என்னைத் தொடாதீர் ! சீ ! எட்டியிரும் ! ஐயையோ !

கௌதமர்:– தேவி ! விழியைத் திற ! ஏன் திகைக்கின்றாய் ?

அகலிகை:– பாவி ! மறுபடியும் பாசாங்கா ? போ, போ ! என்
ஆவி உறையும் அருங் கணவர் தோற்றத்தை
மேவி வரும் இந்திரனே ! மீளவுமா உன் சூழ்ச்சி ?

கௌதமர்:– அன்பே ! அவனல்ல ! அஞ்சேல் ! யான் உன் கணவன் !

அகலிகை:– முன் போற் பலிக்கா முயற்சி !நடிக்காதே !

கௌதமர்:– உண்மையிலே கௌதமன் யான்; உன் கணவன்; உண்மை இது!

அகலிகை:– பெண்மை கனன் றெழு முன், பேடியே ! ஓடி விடு !

கௌதமர்:– என்ன உரைத்தினி, நீ எனை நம்பச் செய்திடுவேன் !

அகலிகை:– பன்னி உறுதியுரை பலவாய்ப் பகர்ந்தாலும்,
ஐயம் அகலாது ! ஐயையோ ! யான் என் செய்வேன் !

*(தாழ்ந்த குரலிற் தனக்குள்)*

ஐயன், எனை மணந்த அன்பன், எனை நாடிடினும்,
அந்தக் கரிநாளின் அவ்வல நிழற்பட் டென்
சிந்தை, இருட் குகையிற் சிக்க, உடல் இறுகிக்
கல்லாகிப் போகும்; கணவர் இடு சாபப்
பொல்லாங்கு போய் அகலப் புதுச் சாபம்; கற்சிலை யான்!

கௌதமர்:– (தாழ்ந்த குரலிற் தனக்குள்)
தன் தன் வினை, என்றும் தன்னைத் தான் சூழும்; யான்,
முன்னை அகலிகை மேல் மூட்டிய தீ மூண்டெரிந்து,
பின்னைப் பொழுதில் எனைப் பின்னியது; யான் அவளை,
அந்நாட் சபித்தேன்; இன் றவள் சபித்தாள்; கல்லானேன்!

*-நிறைவு-*

# சிதை ஏறிய சீதையே பேசு !

சீதா ! உன் கட்சிச் சேதியை எடுத்துரை !
போதவே நாம் மறு புறக் கதை அறிவோம் !

"வில்லாய்க் கணவன் கை விரல்களில் வளை" எனச்
சொல்லித் தந்து, உனைத் துணைவியாய்க் கொடுக்க, உன்

தந்தை வில் ஒடித்த தசரதன் மகனிடம்,
விந்தை வில் ஒப்ப நீ விநயமாய்ப் பணிந்து, பின்
சென்றனை என்னும் செகம் !

வரித்தவனுடனே, வனத்தில் தனித்துத்
தரித்ததும், தவித்ததும் கடத்தப்பட் டதும், பின்

அக்கினிப் பரீட்சைக்கு ஆ ளானதுவும், ஓ !
திக்கற்றவளே ! சிறை உனக்கு இரு முறை !

மனம், வேகாமல், மலராய் மாறுமோ
அனலால் ? நீயோ் அப்படி ஆனதால்
கற்புக்கரசியாம், காசினி ! கொண்டவன்
சொற் தவறாத சுட ராம் !
அண்ணனுக்காய் உயிர் அனலாய்த் துடிக்கும் கார்
வண்ணனின் தம்பி, உன் மைத்துனன், கர்ப்பிணி

என்பதும் நோக்காது இருள் வனத்திடை உனை,
இன் சொல்லோ தேற்றமோ இயம்பிடாது, அண்ணலும்

சிற்சில மக்களும் செப்பிய கட்டளைக்கு
உட்பட்டு விடுத்ததும் ஒண்ணுமோ ? நீதியோ ?

ஆயினும் அன்புறும் அண்ணி நீ மௌனித்தாய்;
வாய்இலாள் ஆன மகள் !

இருட் கானகத்திடை இயற்கைச் செழிப்பில்
அருட் காதல் மிகுத்து அன்புடன் ஓம்பித்

தந்தையின் சேனைக்குச் சவால் விடும் தகைமையில்
விந்தையாய் வளர்த்த உன் விடலைப் புதல்வர்கள்

இருவரும், வெறும் ஓர் இன் சொல் கேட்டு
வருங் காலத்து மகிபராய் ஈர்க்கப்

பட்டனர் தந்தையின் பக்கம் ! நீ பின்பும்
பட்ட பூ ! கற்பினில் பங்கப் பட்டவள் !

இரும் பொறை அன்னையே ! இரு கரம் கூப்பித்
திரும்பவும் அக்கினிச் சிட்சைக்கு உள்ளாகிப்

பெரும் பூப்பிளவிற்கு அர்ப்பணம் !

காவியம், உன் கதை; "காரிகைமார் அதை
மேவிக் கேட்பதோ மிகப் பவம்" என்று அதை

எழுதியோர் தாமே இயற்றினர் விதி; எனின்
கழுதை போல் உரியள் பெண் கசையடிக்கென்று தான்

கருதினர்; மாதரின் காவிய மகிமைகள்,
பெருமைகள், உரிமைகள் பேசும் எம் பாரம்
பரியங்கள் எல்லாம் பதர் !

சிதையில் ஏறிய சீதையே பேசு !
கதாயுதம் போல் ஒரே கையால் மந்திர

வில்லையும் மடக்கிய வித்தகி ! ஒரே ஒரு
சொல்லால் உலகைச் சொடுக்கிய வல்லவி !

எப்படி வாய் இழந்தாயடி ? தயவாய்ச்
செப்படி இவ் வையத்தின் தேவி !

*–(பீனா அகர்வால், "எக்ஸ்பிரஸ் மகசீன்" என்னும் சஞ்சிகையில் எழுதிய கவிதையின் தமிழாக்கம். 12.03.86.)*

# கற்பு

கற்பெனும் பொருளைப் பற்றி
கவிதை ஒன்றெழுதும் நோக்கில்
பொற்புறும் எழுதுகோலைப்
புரவியாய்த் தாளில் விட்டு,
முற்பல்லாண்டாக எங்கள்
முதுதமிழ்க்குலத்தார் ஓம்பிக்
கற்பெனக் கருதிக் காத்துக்
கற்பித்த பொருளை ஆய்ந்தேன் !

ஆதிகாலத்துக் கற்பும்
அதன்பின்னர் மனிதர் கூட்டம்
போதித்துப் பிரிந்து நூறு
பிளவுகள் கொண்டு தம்முள்
சாதிகள் வகுத்த காலைச்
சரித்திரக்காலக் கற்பும்
பாதியில் முளைத்த மாற்றுப்
பண்புகள் விளைத்த கற்பும்

காவியகாலக் கற்பும்
கலை இலக்கிய நாட் கற்பும்
மேவி வந்திடைக் காலத்தில்
மேனாடு கீழ்நாடென்று
பூவியல் மாற்றங் கொள்ளப்
புதுமுறையாய் வகுத்துச்
சேவிதம் செய்த கற்பும்
திசைதொறும் புதுமை பூத்து

வையகம் விஞ்ஞானத்தின்
வளர்ச்சியால் மாற இன்று
செய்யதென் றெண்ணுகின்ற
சிந்தனை நிலைக்குட்பட்ட
துய்நிலைக் கற்பும் நோக்கில்
கொள்கையில் போக்கில் வாக்கில்
உய்முறைப் பாங்கில் சற்றும்
ஒத்திலாதிருத்தல் தேர்ந்தேன் !

காலத்தால், இனத்தால், சாதி,
கலையினால், மொழியால், பண்பால்,
சீலத்தில் கற்பென்கின்ற
சிந்தனைக் கருத்துக் கொள்கை
கீலமுற்றநேக அர்த்தக்
கிடைகளை அடக்கி இந்த
ஞாலத்தில் நூறு வேறு
நடைமுறைப் படுதல் கண்டேன் !

கண்ணகி கற்பும் அன்னாள்
கணவனைப் பறித்தெடுத்த
பெண்ணெனச் சிலம்பு நூலார்
பேசும் மாதவியின் கற்பும்
அண்ணன்மார் தம்பிமார்கள்
ஐவர்க்கும் மனைவியாக
நண்ணிய துரோபதைப் பேர்
நங்கையின் கற்பும், கொண்ட

கணவனைப் பரத்தை இல்லம்
காவிய நங்கை கற்பும்
மணந்தவனைக் கவர்ந்தோன்
மதிகெட வைத்த வீர
அணங்கு சாவித்திரி கற்பும்
ஆயிரங் காதை தோறும்
வணங்கி நாம் போற்றுமாறு
வரும் உயர் மாதர் கற்பும்,

நிகழ்ச்சிகள் இயலும் தன்மை
நேர்த்தியில் முரண்பாடுற்றும்,
தகைச் சிறப்பான கற்புத்
தன்மையில் ஒன்றே போலப்
புகழ்ச்சி செய்தெல்லோராலும்
போற்றுதல் உறுதல் ஏன் என்று
அகத்தினால் நோக்கி ஆய்ந்தேன்
அகப்பட்டதுண்மை அர்த்தம் !

அந்நியன் இல்லம் வந்தால்
அடுக்களைக்குள் அடங்கி
முன்னிலைப் படாதொதுங்கும்
மொய்குழல் மடவாள் கற்பின்
நன்முறையாளி என்றெம்
நாட்டினர் போற்றுகின்றோம்.,
துன்னிய எஸ்கிமோவத்
துருவரின் கதையோ வேறு !

தலைவனைக் காண வந்து
தரிக்கின்ற விருந்தாளிக்குத்
தலைவியே பணிகள் யாவும்
சரிப்படச் செய்துபின்னர்
குலவியும் உபசரித்தல்
குலமுறைக் கற்பாம் ஆங்கே !
விலகின் இவ்விதியைப் பர்த்தா
விலக்குவன் பெண்ணை என்பார் !

இருதுருவங்கள் போல
எதிர்நிலைச் செயல்களேனும்
பெருநிலைக் கற்பை இரண்டு
பெண்களும் பேணுகின்றார் !
ஒருமனப்பட்டுக் கொண்டோன்
உரைப்படி நடத்தல் ஒன்றே
கருவெனக் கண்டேன் உண்மைக்
கற்பெனும் கோட்பாட்டுக்கு !

கற்பெனப் படுவதென்ன ?
சொற்றிறம்பாமை என்று
பொற்புறச் சொன்னார் எங்கள்
புலவர்கள் ! அறிவுடை மணாளன்
சொற்றிறம்பாமல் அன்னோன்
கூற்றினைப் போற்றும் பெண்ணே
கற்புடைச் செல்வி ! இந்தக்
கருத்தொன்றே அளவு கோலாம் !

# இசைப் பாடல்கள்

# வாழ்க ! வாழ்க ! தொழிலாளி !

கல் உடைப்பவர்கள் புல் அறுப்பவர்கள்
கன்று மேய்ப்பவர்கள் என்று ஏய்ப்பவர்கள்
சொல் உடைத்திடுவர் ! பல் உடைத்திடுவர் !
தோழர்கள் ! ... தொழிலாளர்கள் !

பல்லவி

வாழ்க வாழ்க தொழிலாளி ! வாழ்க வாழ்க தொழிலாளி

சரணங்கள்

நாளை பாடுபடும் ஏழை மக்கள் வசம் !
கூழை உண்டவர்கள் ஊழை வென்றுயர்வர் !
கோழை என்றவர்கள் சூளை சென்றடைவர் !
வாடுவோர் ... பாடுவார்

(வாழ்க வாழ்க..)

காணியிற் செழுமை காணவும், தொழில்கள்
பேணிப் பூமி வளம் பூணவும், புனித
வாணி தந்த கலை வண்மையாளர்களை
வாழ்த்துவோம் .... ஏத்துவோம் ....

(வாழ்க வாழ்க....)

வையம் உய்ய வழி செய்ய வந்த மணிக்
கைகள் கோடி பல கோடி கோடி அவை
கூடி மாந்தரினம் ஈடில்லாத படி
பீடு கொள்க ! .... நீடு வெல்க

(வாழ்க வாழ்க...)

# நான் எதிர்பார்க்கின்ற நற்குண நாயகி

நற்குண நாயகியே ! வா உன்
பொற்குணம் அனைத்தையும் போற்றுகிறேன் !

பல்லவி

நான் எதிர்பார்க்கின்ற நற்குண நாயகி
நலங்களை நான் சொல்கிறேன்
நற்குண நாயகி அமைந்து விட்டால் இந்த
ஞாலத்தை நான் வெல்கிறேன்

சரணங்கள்

தாயினைப் போல் அன்னை தயை உடையாள் – ஒரு
தங்கையைப் போல் பாச நடை உடையாள்
சேயினைப் போல் அன்புப் பரிவு உடையாள் – பூமா
தேவியைப் போல் பொறுமைக் கொடை உடையாள்

(நான்...)

அச்சம் என்றால் என்ன ? அறியாதவள் ! – நாணம்
ஆருக்கு வேண்டும் என்று சிரியாதவள்
இச்சகப் பேச்சுகளை மதியாதவள் – கற்பை
இழிவென்று கருதி அதை மிதியாதவள்

(நான்...)

நோயுற்ற போதெனக்குத் தாதிஅவள் – புத்தி
நுடங்கிய போதெனக்கு நாதி அவள்
சேயுற்ற போதெனக்குப் பாதி அவள் – என்
செல்வங்கள் அனைத்துக்கும் ஆதி அவள்

(நான்....)

# போர்த் தேங்காய்ப் பாட்டு

பல்லவி

வசனம்: கைத் தேங்காய் சிதறாமல் களரியிற் சுழன்று வா !
பொய்த் தேங்காய் பொடிபடப் போர்த்தேங்காய் போய் அடி அடி

பல்லவி

சென்று வா என் காய் !
வென்று வா என் காய் !
இன்று புது வருஷம் – அடி
கொண்டு வா பரிசம் ..... (சென்று வா....)

வசனம்: கைத் தேங்காய் சிதறாமல் களரியிற் சுழன்று வா !
பொய்த் தேங்காய் பொடிபடப் போர்த்தேங்காய் போய் அடி அடி

சரணங்கள்

விடுகாய் உருட்டடா மேற்சேரியானே !
அடிகாய் திரட்டடா கீழ்ச் சேரியானே !
ஒரு காய் விரட்டில் உன் ஒரு நூறுகாயும்
குருகாய் விடும் ! எனது கைக்காய் பாயும் (சென்றுவா...)

வசனம்: கைத் தேங்காய் சிதறாமல் களரியிற் சுழன்று வா !
பொய்த் தேங்காய் பொடிபடப் போர்த்தேங்காய் போய் அடி அடி

மறுகாயை உருள விடு கீழ்ச் சேரியானே !
மறு தோல்வி காணவோ மேற் சேரியானே !
வெறு வார்த்தை பேசுவதனால் வெற்றி வருமோ ?
வீண் பேச்சை விடு !மேடு மடுவுக்கு சமமோ (சென்றுவா..)

வசனம்: கைத் தேங்காய் சிதறாமல் களரியிற் சுழன்று வா !
பொய்த் தேங்காய் பொடிபடப் போர்த்தேங்காய் போய் அடி அடி

கீழ்ச் சேரிப் போர்க் காய்க்கு மேற்சேரி தோல்வி
கிழக்கிலே செம்மையாய் எழுந்துவரும் இரவி
ஆள்க் காட்டிக் குருவியே ! ஆண்டு வரப் புதுமை
நாள்க் காட்டிக் கூவு ! வரும் நாளைக்குப் பொதுமை ! (சென்றுவா..)

# ஆசை என்னும் ஆமை

உள்ளம் என்னும் ஊமை – வளர்க்கும்
ஆசை என்னும் ஆமை !

வெல்ல முடியாத ஆசை வெள்ளத்திலே
கொள்ளை கொள்ளை எண்ணங்கள் உள்ளத்திலே

பெண்ணால் சொல்ல முடியாது
சொன்னால் வெள்ளி விடியாது

சொல்லி என்ன பயன் உள்ளக் கூட்டினுள்ளே – ஆணோ
போய்ப் பதுங்கும் ஆமையைப்போல்
– ஒட்டினுள்ளே !

கையில்லா ஊமை வெண்ணெய் காத்த கதை
கண்டவுடன் அன்பு மூண்ட காதற்கதை

ஊமை கையில் எடுக்காத – நெய்யை
வெய்யில் உருக்காதோ
உய்யும் ஓர் ஏற்பாடு இவ்வுலகத்திலே – பாவை
செய்ய வழி இருக்காதோ சுலபத்திலே !

★★★

# மனப்பொருத்தம்

பூபாளம் இரவுக்குப் பொருந்தாது –ஒரு
பொண்ணுக்கு ஆண் மனசு புரியாது !
ஆகாயம் தரையோடே இணையாது – பேர்
ஆசைக்கு நிறைவேற்றம் கிடையாது !

எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடுவது
ஏமாளித்தனமன்றோ ?
கிட்டாத ஒருவனைக் கட்டாயம் செய்வது
முட்டாளின் குணமன்றோ ?
ஒட்டாத சுருதிகள் மெட்டாக அமைவது
உலகினில் இலையன்றோ?
சிட்டாகத் திரிகிற கலைஞன் ஒருவனுக்குத்
திருமணம் சிறையன்றோ – பூபாளம்....

வீசும் தென்றல் தன்தாகும் என்று – வலை
வீசும் பேதை யாரோ ?
மூசும் கடலில் அலை ஓயும் என்று முழு
காத மேதை யாரோ ?
வாசம் வரும் ஒரு பலாவின் மலரில் என
மயங்குவார்கள் யாரோ ?
தேச உடைமை ஒரு வாசல் மணையிலே
தேய விடுதல் சீரோ ?

– பூபாளம்

★★★

# ஒரு வழிப் பாதை

பல்லவி

ஒரு வழிப் பாதையடா – காலம்
ஒரு வழிப் பாதையடா – மீளவும்
வரு வழி இல்லை அந்தத் தெருவழியே போனால் – ஒரு வழி

அனுபல்லவி

செரு வழி சென்ற தமிழ்ச் சேனையின் வழி போலும்
கரு வழி வரும் உதரக் கனிகளின் வழி போலும் – ஒரு வழி

சரணங்கள்

நெருநல் துயரை இன்னும் நினைந்து நினைந்து பின்னால்
வருநற் தினம் வழங்கும் வாய்ப்பிழந்தாய் மனிதா
தருணம் வரும் சமயம் தவற விடல் தகுமோ
வருடம் புதிது உன்றன் வாழ்க்கை புதிது செய்வாய் – ஒரு வழி

வருவது வரும் எனவும் வந்த வினைகள் உன்றன்
கரும விதி எனவும் கருத்திழந்தாய் மனிதா
உறு நலம் யாவும் உன்றன் உழைப்பில் விளைவதன்றோ
இருளை உவப்பதென்ன எழுதுயில் வழியுண்டு – ஒரு வழி

# வானத்து அமரன் வந்தான் காண் !

பல்லவி

மன்னன் உதித்தார் ! ஆடுவோம் ! வாரும் வணங்கிடக் கூடுவோம் !
அண்ணல் இயேசு நாதனாரின் அற்புத வாழ்வைப் பாடுவோம் !

சரணங்கள்

உத்தம தேவன் இத்தரை காக்கச் சித்தம் இசைந்தாரே !
நித்திய வாழ்வின் முத்திரையாகச் சுத்தன் பிறந்தாரே !
கர்த்தன் எளிமையை நாடினார் ! மெத்த வறுமையில் வாடினார்!
பக்தர்கள், வேத வித்தகரோடு நித்தம் குலவிடக் கூடினார் !

– மன்னன்

முற் பவம் நீங்கித் தற்பரனார் வந் துற்பவ மானாலும்
நற்றவன் சூசை அற்புத மேரி சொற்படி வாழ்ந்தாரே !
பெற்றவர் வார்த்தை போற்றினார் ! முற்றியதும் வழி மாற்றினார் !
மற்றவர்க்காக நற்பணி, பின்பே சற்குருநாதன் ஆற்றினார் !

– மன்னன்

முன்னர் தவத்தில் தன்னை இருத்திய பின்னர் எழுந்தாரே !
அன்னை உரைக்காய் முன்னைப் புதுமை தன்னைப் புரிந்தாரே !
பன்னரும் அற்புதம் காட்டினார் ! பொன்னிகர் போதனை ஊட்டினார்!
பன்னிரு பேரைத் தன்னவராக்கி உன்னத மார்க்கம் நாட்டினார் !

– மன்னன்

முந்தையர் கோவில் சந்தையுமான விந்தையைக் கண்டாரே !
சிந்தையிலே துயர் முந்துற யேசு நொந்து வெகுண்டாரே !
வெந்து கசை எடுத்தோடினார் ! சிந்திச் சிதறிடச் சாடினார் !
தந்தை மனை கள்வர் பொந்தெனச் செய்தவர் நிந்தை களைந்திட நாடினார்

– மன்னன்

வேண்டிய பேர்களைத் தீண்டிய நோய்களை மாண்டிடச் செய்தாரே !
மாண்டவரும் உயிர் மீண்டெழவே அருள் ஆண்டவர் பெய்தாரே !
மூண்ட துயரங்கள் போக்கினார் ! மீண்டிட நம்மைக் கை தூக்கினார் !
மூன்று குறுகிய ஆண்டுகளில் தான் பூண்ட பணி நிறைவாக்கினார் !

– மன்னன்

போதகர் பூதலத் தீதகலப் புதுப் பாதைகள் கண்டாரே !
யூதர்கள் யேசுவின் சாதனை கண் டுள வேதனை கொண்டாரே !
பாதகர் திட்டங்கள் தீட்டினார் ! ஓதரும் குற்றங்கள் சாட்டினார் !
நீதரை, மாதவ நாதரை, வேதரைச் சூதர் சிலுவையிற் பூட்டினார் !

– மன்னன்

யாவினுக்கும் உயிர் ஆவியுமானவர் சாவிற்கிரையானார் !
பூவிலிருக்கும் பாவிகளுக்காய் ஆவி பலியானார் !
தாவி அணைத்தெமைத் தேற்றினார் ! மேவிய சாபத்தை மாற்றினார் !
சீவியமே அருட் காவியம் ஆனவர் கூவி எமைக் கடைத்தேற்றினார் !

– மன்னன்

மாண்ட பராபரன் மூன்று தினங்களில் மீண்டும் எழுந்தாரே !
கூண்டுடனே எமதாண்டவர் வான் வெளி தாண்டிப் பறந்தாரே !
ஈண்டெமக்கும் உயிர் ஊட்டினார் !தூண்டி எமக்கொளி கூட்டினார் !
வேண்டுதலால் பவம் தாண்டிப் பிதாவிடம் மீண்டிடவே வழி காட்டினார்!

– மன்னன்

★★★

# நடன சிவ நவரச ஸ்லோகம்

ராகமாலிகை

ராகம்

ஆனந்த பைரவி எடுப்பு தொகுப்பு

நவரச நாயகன் நடராசனே ! – அண்டக்
குவலயக் கோள்களுக்கும் மகராசனே !

ராகம்

1. ஆனந்த பைரவி ஸ்லோகம் பாவம்: ஸ்ருங்காரம்

மதுரை மீனாட்சியை ஜெயித்து அவள் பாலே
மையல் கொண்ட சொக்க நாதா !
மதுர பாவ ஸ்ருங்காரா !

ராகம்

2. அடாணா ஸ்லோகம் பாவம்: வீரம்

திரிபுரம் எரித்து மூ அசுரரையும் ஒழித்த
சிவபுரனே ! வீர தேவா !

ராகம்

3. சகானா ஸ்லோகம் பாவம்: கருணை

பாற்கடல் நஞ்சுண்டு தேவர்கள் உயிர்காத்த
பார்த்திபனே ! கருணை ஊற்றே !

ராகம்

4. சாரங்கா ஸ்லோகம் பாவம்: அற்புதம்

கனக சபை தனிலே அற்புத ஆனந்தக்
களி நடனம் புரிந்த வேதா !

ராகம்

5. கமாஸ் ஸ்லோகம் பாவம்: ஹாஸ்யம்

பிட்டு ண்டு மண் சுமந்து சிரிப்புச் சுவையை நல்கும்
பெம்மானே ! நகைப்புத் தா தா !

ராகம்

6. சாவேரி ஸ்லோகம் பாவம்: பயானகம்

சாம்பர் தடவி ஊழித் தாண்டவம் ஆடிப் பயம்
காட்டும் ஊர்த் துவக் கணநாதா !

ராகம்

7. ஆபோகி ஸ்லோகம் பாவம்: பீபத்ஸம்

கரிய கிரியைகளைப் புரியும் நரிச் செயல்கள்
காணின் பீபத்ஸம் உறும் சீலா !

ராகம்

8. பியாகடை ஸ்லோகம் பாவம்: ரௌத்திரம்

முன்னைத் தவம் குலைத்த மன்மதனைச் சினத் தீ
ரௌத்திரம் கொண்டெரித்த நிர்மூலா !

ராகம்

9. மத்தியமாவதி ஸ்லோகம் பாவம்: சாந்தம்

தந்தையை மீறி உமை வந்திட, இடம் சேர்த்துச்
சாந்தம் அடைந்திட்ட குணவாளா !

மீண்டும் : இராகம்:

ஆனந்த பைரவி எடுப்பு தொகுப்பு

நவரச நாயகன் நடராசனே ! – அண்டக்
குவலயக் கோள்களுக்கும் மகராசனே !

★★★

# சாந்த சொரூபன் !

புத்தர் பெருமானே ! போதி மாதவனே !
புத்தர் பெருமானே ! போதி மாதவனே !

பல்லவி

எத்தனை இடர் வரினும் இதயம் கலங்கிடாத
சித்தம் எனக்கு நித்தம் சித்திக்க அருள் புரிவாய் !

புத்தர் பெருமானே ! போதி மாதவனே !
சாது சாது சாது ! சாது சாது சாது !

சரணங்கள்

மத்தகம் மதுவுண்டு மதம்கொண்டு கொம்பிரண்டால்
குத்த முனைந்த போதும் குலையாது நிலை நின்று
முத்திரைக் கரம் கொண்டு பித்தம் அடக்கித், தேவ
தத்தனின் சூதை வென்ற சித் தார்த்தனே ! இன்று....

எத்தனை இடர் வரினும் இதயம் கலங்கிடாத
சித்தம் எனக்கு நித்தம் சித்திக்க அருள் புரிவாய் !
புத்தர் பெருமானே ! போதி மாதவனே !
சாது சாது சாது ! சாது சாது சாது !

அங்குலி மாலனுக்குன் அருட்பாலனம் அளித்தாய் !
ஆலவிகன் மனத்தின் அசுர குணம் அழித்தாய் !
மங்கை மகவிழந்த மரணத் துயர் ஒழித்தாய் !
மாரன் மகளிர் நெய்த மாயத்திரை கிழித்தாய் !

எத்தனை இடர் வரினும் இதயம் கலங்கிடாத
சித்தம் எனக்கு நித்தம் சித்திக்க அருள் புரிவாய் !
புத்தர் பெருமானே ! போதி மாதவனே !
சாது சாது சாது ! சாது சாது சாது !

# தாலாட்டு

உயிர்ச் சின்னஞ் சிறுசே, என் செல்லக்கரும்பே
பசும்தேன் சொட்டும் பஞ்சுப் பொதியே !
பொழிலே ! பூம்புகாரே ! தமிழே ! – தனிக்கனாக்கோலமே
அமிழ்தே என் ஆவியின் சுடர்விளக்கே !
அன்பே என் ஆருயிர் கண்ணுறங்காய் !
அன்பே என் ஆருயிர் ஆனவனே ! நீ கண்ணுறங்காய் !

(உயிர்)

என் – அதிசயனே ! முருகானந்தனே ! – உண்மை
அழகினுக்கு இலக்கணம் ஆனவனே !
விதிகள் எல்லாம் வெல்லப் பிறந்தவனே ! – பண்பின்
மேன்மைகள் யாவுமே நிறைந்தவனே !
அன்பே என் ஆருயிரே நீ கண்ணுறங்காய் .
அன்பே என் ஆருயிரே நீ கண்ணுறங்காய்.
ஆரிரோ ஆராரோ .........
ஆரிரோ கண்ணே ஆராரோ .

விடிகின்ற உலகு உய்ய விழித்தெழு ந்தே – பல
வேலைகள் செய்யவேண்டும் கண்ணுறங்காய்
படிகின்ற இருள் உன்னால் நீங்க வேண்டும்
இப்போ பாலகனே நீ கண்ணுறங்காய்.

★★★

# பரிவும்
# பிரிவும்

# கந்தனுடன் உள்ளம் கலந்த சுவைக் கணங்கள் !

நேற்றுத்தான் போல் என் நினைவில் தெரிகிறது ...
சோற்றுக் கவலை, துணிக்கவலை, அன்றாட

வீட்டுக் கவலை, கல்விவித்தை தொடர வழி
காட்டித்துணை செய்துகை கொடுக்க யாரேனும்

இல்லாக் கவலை, இவற்றைச் சுமந்த சிறு
பிள்ளையாய், இந்தப் பெரிய கொழும்பு நகர்க்

கோட்டையிலே வந்திறங்கிக் குறுகி மனம் பேதலித்து,
வேட்டி சட்டையோடு வெளிக்கிட்டுத், தட்டார

வீதியில் என்றன்று விலாசம் இடப்பட்ட
சேதித்தாள்க் கந்தோரைச் சென்றடைந்த அந்தநாள்

நேற்றுத் தான் போல் என் நினைவில் தெரிகிறது ...
மாற்றில் உயர்ந்து மதிப்புக்குரித்தான

நல்ல சிறுகதையை நான் எழுதிப் போட்டியிலே
வெல்ல முதற்பரிசை விடலைப் பருவத்திற்

சித்தித்த வெற்றிக்கென் சிந்தை பலியாக
தித்திப்பை ஊட்டிய அத் திக்கில் தொடர்ந்து மனம்

போக்கி, எழுத்தே என் போக்கிடமாய் கொள்வதெனும்
ஊக்கம் மிகுதுறவே, ஒரு கோடி கற்பனைகள்

பேதைக் கனாக்கள் பிடித்தாட்டும் மொய்வெறிபோற்
போதையுடனே புறப்பட்டு மூ பத்து ஐ

வருடங்களின் முன்னால் வந்து, கொழும்பில் இளம்
பருவத்திற் போய் அந்தப் பத்திரிகைக் கந்தோரின்

'கேற்' றைத் திறக்கக் கிடைத்த வரவேற்பு,
நேற்றுத் தான் போல் என் நினைவில் தெரிகிறது....

'நீங்களா ?' என்று நிமிர்ந் தென்றன் சிற்றுருவம்,
தாங்கா வியப்பைத் தனக்களித்த சங்கதியைச்

சொன்னான் ஒருவன்; அந்தச் சொல் ஒன்றினை குழைவாய்,
கண்ணியமாய், கச்சிதமாய், கனமாய், நிதானமுமாய்

வெட்டியளந்து விறுத்தமாய், கனிவூற,
ஒட்டுறவாய், பிறரை உருவு கண்டு எள்ளாத

பண்போடு மரியாதைப் பன்மை விகுதியிட்டுச்
சொன்னவிதத்தில், அதைச் சொன்னவனின் ஆளுமை என்

சின்ன மனதிற் செறிந்து பதிந்துறையப்,
பின்னர் அவனுடனே பின்னிப் பிணைந்தெனது

வாழ்வின் செம்பாதி வனைந்து நடக்கின்ற
சூழ்வுற்ற தென்று நான் சுதாரித்த அந்த நொடி,

நேற்றுத்தான் போல் என் நினைவில் தெரிகிறது...
கூற்றுப் பிரித்து அவனைக் கொண்டோடிப்போய்விட்டாலும்

ஈற்று வருடம் வரை பின் நிகழ்ந்ததெல்லாம்
நேற்றுத்தான் போல் என் நினைவில் தெரிகிறது...

'சப் எடிட்டர்' ப் பட்டம், தமிழ் செய்தலே தொழில் என்று
அப்போ தொடங்கி, அனுபவங்கள் தந்த தழும்பு

ஏறித் தழும்பேறி எழுதுகோல் கொண்டு மனத்து
ஊறிக் குதிர்ந்த உணர்வு அறிவு மாக்கடலை

மத்துக் கடைந்து, மதுரக் கலை அமுதைப்
பொத்தி எடுத்துப் புதுமை விருந்துபடைத்து,

'ஆ'னா வரிசை அடைந்து எழுத்தர் முன்னணியிற்
பேனா நிமிர்த்திப் பிடிக்கின்ற வல்லமையைத்

தானும் பெறுகின்ற தருணத்தில், தன்னோடு
நானும் பெறுமாறு நல்வழிகள் காட்டியவன்

'கந்தன்' எனச் செல்லக்கனிவுப் பெயர் கொண்டு
பந்தமுடன் நான்அழைத்த பரிவு மனமுடையான் !

எந்தக் கணமும் இலக்கியத்துக்கே உயிரைச்
சொந்தம் கொடுத்துச்சுகம் அழித்துக் கொண்டமகன் !

வாழ்வு முழுவதையும் வைத்தான் கலைக்கென்றே !
தாழ்வென்று மற்றோர்கள் தள்ளும் பழக்கங்கள்

ஒழுக்க வழக்கங்கள், உயர்வென்று இதரர் சொலும்
விழுப்பங்கள் என்கின்ற வேறுபாடான நெறித்

தடங்கள் அவன் சிந்தனைக்குத் தடங்கல் புரிந்ததில்லை !
சடங்கு முறையான சம்பிரதாயங்கள் எல்லாம்

தூக்கி எறிந்து, துணிந்து, புது வேக
நோக்கும், நடப்பும், நுணுகிப் பொருள் ஆய்ந்து

பார்த்துச் 'சரி இந்தப் பார் உயர' என்றுணர்ந்த
நேர்த்திக் கருத்தை, நின்று நெற்றிக்கு நேராக

ஓங்கி எறிந்து அடித்தே உறைப்பாகச் சொல்திறனும்
ஆங்காரம் இன்றி உண்மை அறிவு நெறிமாணவனாய்

எந்தக் கணமும் இருக்கின்ற தன்னிறையும்,
நிந்தை கலவாமல் நேர்மையுடன் கண்டிப்புச்

செய்கின்ற போதும் திகழ்கின்ற கண்ணியமும்
வைகின்ற பேர்களையும் வாசாலகமாக

வாதாடி நா மடங்க வைக்கின்ற வல்லமையும்,
தீதாடிச் சமூகத்தில் திரியும் பிற்போக்குகளைக்

கண்டால், உளம் உயிர் மெய்க் கரணங்கள் அத்தனையும்
விண்டு ஆடிப்போனது போல் வெந்துவெந்து போராடும்

உண்மை உளக்கலப்பும் ஒருங்கே திரண்ட பெரும்
திண்மை, அவன் 'நடத்தை' – கலைச் சிருஷ்டி இரண்டினிலும்

தோய்ந்திருக்கக் காணக்கொடுத்து வைத்த பாக்கியன் நான் !
ஓய்ந்திருக்கான் ! வாடி, உடல் நோயில் ஆழ்ந்திருந்த

வேளையிலும் நோய்க்கட்டில் மீதிருந்து கால் மீது
தாளை வைத்து நூலெழுதித், தாழாதுளம் நாட்டெழுத்து

மேன்மை விளங்க விடாமல் உழைத்தவன் ! செந்
தேன் போற் கருத்துத் தெறிக்கும் அவன் படைப்பில் !

"ஸோலா" வின் "நானா" சுவைத் தமிழில் தந்தநாள் !
மேலானதென்று ஈ. வே. ரா. பெரியார் பாராட்டி,

'விடுதலை' யிலே தொடராய் வெளியிட்ட ஆய்வு சுடர்
விடும் சிலம்புக் கட்டுரைகள் விநோதப் புனைநாமம்

பண்டிதர் திருமலைராயர் என்று பூண்டெழுதிக்
கண்டாய் அளித்திட்ட காலம்; திருச்சியிலே

வானொலியில் இலக்கண வரம்பு முறை பற்றித்
தேனொலிகள் செய்த தினம்; என்றிவ்வாறாக

"எதிர் காலச் சித்தன்" எனும் பாடல்; சிந்தனைகள்

முதிரக், கடவுளையே முந்த முந்தத் தன்னுடைய
'சோர நாயகன்' என்று சொல்கின்ற தீம்பனுவல்;

வேறதிக மேதகைமை மிளிரும் படைப்புகளும்,
'மனக்கண்' 'களனி வெள்ளம்' மற்றும் வெளியாகாப்

புனைப்புக்கள் பற்பலவும் புத்தறிவு போதிக்கும்
"வெற்றியின் இரகசியங்கள்" விளக்கும் நூல் 'மதமாற்றம்'

முற்றிலும் நாடகத்துறை முதிர்விக்கக் கூர்த்தமிழில்
செய்தளித்துச் சென்ற திருக்கலைஞன் கந்தனது

மெய்யாம் திறமைகளை மிகவும் தெரிந்தவன் நான் !
பந்தமுடன் ஒன்றாய்ப் பணியாற்றிப் பல்லாண்டு

சிந்தைகலந்து ஒரே வீட்டிற்சேர்ந்திருந்தும் வந்ததனால்
கந்தன் எழுதாத காவியங்கள் நானறிவேன் !

சிந்தையுடன் கொண்டு சென்ற செய்திகளும் நானறிவேன்
முற்போக்கா, பிற்போக்கா, முதுதமிழா, ஊர்வழக்குத்

தற்காலப் பேச்சு நடைதானா தகுந்ததென்றும்
கலை கலைக்கா, மக்களுக்கா, கதைமுன்பிருந்ததுண்டா,

தொலைநாட்டுப் பண்புகளும் தொல் தமிழுக்கேற்றதுவா
உருவமா உள்ளடக்கம் தானா உயர்ந்ததென்றும்

'அரிவரி' மாணாக்கர்களுக்கான வெறும் ஆரம்பச்
சில்லறைவாதங்களிலே சிக்கித் தடுமாறி

நெல்லரிசி விட்டு வெறும் நெற்பதரைச் சோறாக்கிக்
கொண்டிருக்கும் எங்கள் குறுமதி சூழ் கூட்டத்தார்க்கு

எண்டிசையும் போற்றவல்ல எண்ணங்கள் ஏற்காதென்று
எண்ணிச் சிறிதளவே எடுத்துப் படைத்துத், தன்

எண்ணக் கலத்துள்ளே எத்தனையோ அற்புதங்கள்
கொண்டு சென்றான் கந்தன் ! அவன் கூடக் கலந்து அறிவு

மண்டும் அரிய மதி விருந்து சாப்பிட்ட
நூற்றுக் கணக்கான நொடிகள் – சுவைக்கணங்கள்

நேற்றுத்தான் போல் என் நினைவில் தெரிகிறது.....

★★★

# மணியத்துக்கு எந்தன் மாக்சீய வந்தனங்கள் !

மணியம் எனும் ஒரு மா மனிதன் நினைவு களை,
துணிவான வாழ்க்கையினை, பணிவான போக்குகளை,
பணியே கருத்தான பரந்தபொது நோக்குகளை,
அணியாய் அடுக்கி, அவ் வமரனை அஞ்சலிக்கக்
கூடியிருக்கின்ற தோழர்களே ! என் அவனைப்
பாடி, இருக்க ஒரு பத்து நிமிடங்கள்
தாருங்கள் ! ஆமாம் ! தருக்காக 'என் அவன்' என்று
ஏன் சொன்னேன் என்றால், எனக்கும் அவனுக்கும்
உள்ளாந்தரங்க உறவிருந்த காரணத்தின்
உணர்வால், 'என் அவன்' என்று உரிமையுடனே உரைத்தேன் !
தவறென்றால் மன்னியுங்கள் ! தாரமும், பிள்ளைகளும்,
கூடிப் போராடிக் கொள்கைகளில் ஒன்று பட்ட
தோழர்களும் போன்றே, குளிர்காய்ந்து அவன் நிழலில்
நண்பர்களாய் வாழ்ந்தவரில் நானும் ஒருவன் என்ற
காரணத்தால் சொன்னேன் ! தவறென்றால் மன்னியுங்கள் !
தோழர் மணியம் தொடர்பு முகிழ்த்தது என்றன்
பள்ளிப் படிப்புப் பராயத்தில் ! அப்போது
துள்ளித் திரிந்தோம் ! தொடர்பிற் புரட்சிகர
வீச்சைப் புரியாத விடலைப் பருவம், பின்
ஓச்சப் போகின்ற உரிமைப் போராட்டங்கள்,
தாழ்த்தப்பட்டோர்க்கான தருக்கங்கள், தொழிலாளர்
வர்க்கச் சமர்கள், வழி வந்து அரசியலின்
அக்கப் போர், கலாசார அறிவுச் சிந்தனை யுத்தம்
சன்னதங்களில் மீண்டும் சங்கமமாய் நாம்இருவர்
சந்திப்போம் என்று சற்றேனுமே கருதிச்
சிந்திக்காதிருந்த சிறுவர்; பிரிந்து விட்டோம் !
சந்தித்தோம் பின்னர் களங்களிலே, ஓரணியில் !
இளவாலை ஊரில் என்றிஸ் கல்லூரியிலே
வள வளாப் பேச்சின்றி மௌனம் அதிகம் காத்துக்
கருமமே கண்ணாகக் காத்தோம் பிக் கற்றவனை
மரும மனிதனாய், மறைந்தும் வாழ்கின்ற தலை

மறைவுப் போராளியாய், மௌனம் சாதிக்காமல்
மக்களணி முன் நிற்கும் மகத்தான தலைவனாய்,
பேசி விட்டும் பாடி விட்டும் பேசாமல் பணிகின்ற
தாசித் தனமின்றித் தலை நிமிர்ந்து காரியங்கள்
சாதிக்கும் வீரனாய்ச் சந்தித்தேன் மணியத்தை !

பாதிக்குகிறது அப் பரவசத்தை வர்ணிக்க !
மணியத்துக்கு மௌனாஞ்சலியா ? ஓ !
மௌனம் சாதிக்காமல் மக்களுடன் குரல் கொடுத்துப்
போராடியவனுக்கு போர்க்குரல் எழுப்பாமல்
மௌனாஞ்சலியா ? என்னை மன்னியுங்கள் ! மாட்டேன் நான் ?
மாக்சீய, லெனினீஸ வழியில், பொதுவுடைமை
மார்க்கத்தில், இடையில் வசப்பட்டு விட்டோம் நாம் !
கண்டோம் ! கதைத்தோம் ! களத்தில் இரு துறையில்
இரண்டு பேரும் தழுவி இயங்கி இணைந்து கொண்டோம் !
கலை, இலக்கியம் சார்ந்த களத்தில் நான் ! செயல் ஓம்பும்
உலையா நேர்ப் போராட்ட உறுபடைக் களத்தில் அவன் !
சீமெந்து ஆலைக் களத்தில் திரண்டெழுந்த முதல் அமுதன்,
நஞ்சைத் தான் உண்டு நரர்க்கதனை வாயூட்டிப்
பழகித், தொடர்ந்து ஹர்த்தாற் பலிக் களத்தில் போராடி,
படிப்பைப் பொதுமைப் படுத்த நடந்த சமர்
ஊர்வலங்களில் முன் நின்று உழைக்கின்ற வர்க்கத்தார்
யுத்தங்களில் உழைப்பைத் தத்தம் செய்தான், சாதிச்
சண்டைகளில் தாழ்ந்த சமூகங்களுக்காகத்
தோள் கொடுத்து, நலியும் தொழிலாளருக்கான
சங்கங்களின் உட் தத்துவப் பிரிவினைகள்
தோன்றிய போதெல்லாம் சுடராய் வழி நடத்தி,
இனக் கலவரங்களிலே இதயத்தால் பிசகாமல்,
அறிவாற் பிரச்சினைகள் அனைத்தும் இனங்கண்டு,
கரியாய் இயங்கி, கடைசி வரை போராட்டப்
பண்பு, குன்றாமல், பரித்தியாகன் என்ற
சொல்லுக்கு இலக்கணனாய்ச் சுடர்ந்த என் அவனான்
தோழமையின் உரு கே. ஏ. சுப்பிரமணியன் என்ற
ஆளுமை மிகும் பொதுமை அரசனுக்கு நண்பன் நான் !
பா திக்குகிறது அப் பரவசத்தை வர்ணிக்க !

கலை, இலக்கியத் துறையில் கசடுகளும் ஊடுருவி
நிலை பெறாவாறு, நியதிகளைக் கண்டாய்ந்தே,
என் போன்றவரும் எடுபட்ட வேளைகளில்
பின் நின்று "செல்வா ! டேய் பேதலியாதே ! " என்று
வழிகாட்டிச் சென்ற மணியத்தை நினைக்கின்றேன் !
பாதிக்குகிறது அப் பரவசத்தை வர்ணிக்க !
உள்ளாந்தரங்க உறவு கொண்ட வேளைகளும்
நெஞ்சில் நிழல்காட்டி நினைவை நனைப்பதனால்,
பா திக்குகிறது அப் பரவசத்தை வர்ணிக்க !
தனியாய் மணியம், நான் சம்பாஷணை புரிந்த
வேளைகளும், கூடி விருந்து அருந்திச் சத்திய
மனையில் மனம் களித்த மணித்துளிகள், மணியத்தின்
அன்பு மனைவியின் அரும் பண்புஉபசரிப்பும்,
தண்புனல் போல் 'மாமா' எனக் குளிர்ந்தெனை அழைக்கும்
சத்திய ராஜன், சத்திய மலர், சத்திய
கீர்த்தி எனும் மூன்று கிள்ளைமொழிச் செல்வப்
புத்திரப் பாக்கியங்கள் பொழியும் கனிவும், இவை,
அனைத்தும் நான் பாடுதல் ஆனாற், சொல் போதாது !
பாதிக்குகிறது என் பரவசத்தை வர்ணிக்க !
பர வசமாய் ஆகி விட்டாய் பராரிகளின் தோழா !
மணியம் ! உனக்கு எந்தன் மாக்சீய வந்தனங்கள் !
போய் வாடா மணியம் ! உன்னோடே களித்திருந்த
பொன்னான கணங்கள் ! புது உலகைத் தோற்றுவிக்க
வேண்டும் என்ற மிடுக்கு முறுக்குடனும் தேறற்
பானங்களோடும் பருகிக் களித்திருந்த
பொன்னான கணங்கள் ! அவை போகவில்லை ஐயா ! உன்
சின்னவன்கள் ! சின்னவள் ! உன் சீரார் மருமகன் என்று
எத்தனை பேரை எழுச்சி பெறச் செய்து சென்றாய் !
பொன்னான கணங்கள் அந்தப் பொன்னான மென் கணங்கள் !
போய் வாடா மணியம் ! நீ போய்த் திரும்பும் அந்த
வேளையிலே உன்னுடைய வேலை பலித்திருக்கும் !
நீ நினைத்த சிந்தனைகள், நீ கண்ட நீள் கனவுக்
காட்சிகள் எல்லாம் கதித்துப் பலித்திருக்கும் !
போய் வா இளவரசே ! பொதுமைத் தினவுடனே
நீ திரும்பும் வேளையில் இந் நீ ளுலகிலே பொதுமை

பூத்திருக்கும் ராசா ! அப் புது உலகைக் காண்பதற்கு,
நீத்திருக்கும் உன்னை, நாம் நெஞ்சுருகிக் காத்திருப்போம் !
மணியம் ! உனக்கு எந்தன் மாக்சீய வந்தனங்கள் !

★★★

*(குறிப்பு:- பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோர் உயர்பள்ளி மாணவர்களாக இருந்தபோது, சில்லையூர் செல்வராசன் பத்திரிகையாளராய் எழுத்தாளராய்ப் பிரபலமாகியிருந்தவர். சமவயதாக இருந்ததால் சக நண்பர்களாக இருந்தவர்கள். பேராதனையில் இருவரும் பட்டப் படிப்புக்காகப் போன பின்பும் இந்த நட்புத் தொடர்ந்தது. பின்பு, கைலாசபதி அவர்கள் பத்திரிகையாசிரியரான போது அவருக்கு உற்ற ஆலோசகர்களாக இருந்தவர்கள் சில்லையூரும் – சக நண்பர் காவலூர் ராசதுரையும். ஆய்வுத் துறையில் ஈடுபட்டதன் பின் முன்பு போல் கைலாசபதி சில்லையூராரிடம் நட்புப் பாராட்டாமல் ஒதுங்கியபோது, அந்த உளப் பிரிவினால் மனம் தாங்காமல் பாடிய பரிவுப்பாடல் இது.)*

# பிரிவு

அன்புள்ள கைலாஸ் ! என்
அருமைச் சிநேகிதனே
என்னுதரந் தன்னிலுதித்
தெழுகின்ற பொன் கவிதைக்

கேற்ற கருப் பொருளாய்
இடம் பெற்றெவர் எவரோ
மாற்றில் உயர்ந்ததுண்டு
மாசுபட்டும் போனதுண்டு !

என் கவிதைப் பின்னலிலே
இயலும் இழைக் கருக்கள்
எண்ணிலவே யானாலும்
இவற்றுள் ஒரு கருவாய்

உன்னை நான் தேர்ந் தெடுக்க
ஒரு நாள் வருமென்றோ
உன் மாற்று, மாசுறவோ
ஓங்கிடவோ என் கருவாய்

நீ வருவாய் என்றோ – நான்
நினைத்திருந்த தில்லையடா !
நீ யும் அதே வாறாக
நினைத்திருக்க மாட்டாய் தான்

ஆனாலும் எப்படியோ
அந்நாளும் இன்றைக்குத்
தானாக வந் தென்னைத்
தடுமாற வைத்ததடா !

உணர்ச்சி கவிதைக்கு
ஊற்றென்று ரைத்திடுவார் –
உணர்ச்சி வசப்பட்டு
உன்னால், உனைப்பற்றி

நானோர் கவியாக்க
நடந்த வினையே தேது ?
ஊனோடுயிர் உருக்கும்
உணர்ச்சி மிகு சம்பவம் தான்

ஏதேது ? இங்கிருந்து
எங்கே நீ போயிருந்த
போதேனும் என் உணர்வில்
புலன் காட்டா மென் துயரம்

இன்றென் மனக்கிளையில்
இறக்கை மடித் தமர்ந்து
தின்றென் அமைதிக் காம்
தீனியெல்லாம் போக்கிய தேன் ?

பிரிவு கொடியதென்பார் –
பிரிவுத் துயர் இதுவோ ?
பரிவைத் தொடர் நிழலாம்
பிரிவுத் துயர் இதுவோ ?

பிரிவென்ப தேது ?
கால, இட, சூழல்
விரிவால் விளைகின்ற
வினைதானோ ? வேறெதுமோ ?

கால, இடச் சூழற்
காரணத்தால் நீ பிரிந்த
காலையிலே தோன்றாக்
கவலை இன்று தோன்றுவதேன் ?

உள்ளப் பிரிவிதெனும்
உணர்வு எனை மீறி
மெள்ள மன வானத்தை
மேகமாய் மூடுவதேன் ?

பத்து வருடங்கள்
பத்தா பதினொன்றா
எத்தனையாய் இருந்தாலும்
இத்தனை ஆண்டு ன்னோடு

ஒட்டி உறவாடி
உளங் கலந்து உரையாடி
எட்டி யிருந்தாலும்
இணை பிரியா ஏதோ ஓர்

மந்திரத்தால் கட்டுண்டு
வாழ்ந்த ஒரு பத்தாண்டுச்
சிந்தனைகள் வந்தழுத்தச்
சிலிர்த்து, கனிந்துருகி

ஒரோர் சமயம்
உனை நினைக்கும் போதினில், என்
ஈர நெஞ்சில் அன்புத் தீ
எழுந்து கொழுந்து விடும் !

அந்தச் சுடர்க் கொழுந்து
அணைவது போற் தோன்றுவதும்
முந்தியிருந்த தொடர்பு
முடிவுற்றுப் போனது போல்

காணுவதும் ஏன் ? ஏன் ?
கசிந்தென் இடது விலாக்
கோணத் திருந் திந்தக்
குருதி வடிவதும் ஏன் ?

எட்டி யிருந்தாலும்
இணைபிரியா வாறாக
ஒட்டி மனந் திறந்து
உள் விழுந்த நட்புப் போய்,

உன்னுள்ளே நீயே
ஒடுங்கி ஒளிந் தொழிந்து
தன்னுள்ளே தானாய்த்
தலை மறைவாய்ப் போனதினால்

பக்கத் திருந்தாலும்
பல காத தூரத்தே
எக்கப் போய் விட்டவன்போல்
எனக்குப் படுகிறதோ ?

ஊர் உலகோ டொட்டி
உறவாடும் பத்திரிகைச்
சீர் தொழிலை விட் டொதுங்கிச்
சிந்தனையில் போயொடுங்கித்

தன்னுலகும் தானுமாய்த்

தாச்சி மறித்தாடுகின்ற

பின்னல் மிகும் ஆராய்ச்சிப்

பிழைப் பினையே தக்கதெனத்

தேடி நீ செல்கின்ற

செயலும், உனக்குள் நீ

ஓடிக் கரந் துறைதற்

குற்ற புறச் சான்றோ ?

ஒரோர் சமயம் இப்போ

துனை நினைக்கும் போதினிலே

சார மற்றென் உள்ளத்தில்

சலிப் புச் சலன மிடக்

காணுவதும் ஏன் ? ஏன் ?

கசிந் தென் இடது விலாக்

கோணத்திருந்து கவிக்

குருதி வடிவதும் ஏன் ?

30.07.1961.

★★★

# ஆய்வறிவின் தலைமகனுக்கு அஞ்சலி

அன்புள்ள கைலாஸ் ! உன் அறிவு சுடரும் முகத்தைக்
கண்டின்னும் மாதம் ஒன்று கழியவில்லை !
சந்திக்க மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிட்டடியில்
வந்து வாய்க்காது; எனவே வரையும் கடிதத்தை
ஏற்றுக் கொள் நண்பனே ! இன்றைக்குன் ஆய்வறிவின்
ஆற்றலினைப் போற்றி உவந்து அஞ்சலிக்க யாழ்நகரில்
வீரசிங்கம் மண்டபத்தில் விழா ! இங்கு பா அரங்கில்
நீரசித்த நல்ல கவி நெஞ்சர் சிலர் கூடி
என்னைத் தலைமை கொண்டுன் ஏற்றங்களைப் பாட
முன்னுகிறார் ! இந்த முகூர்த்தத்தில் உன்னோடு
சின்ன வயது முதல் சேர்ந்து பழகிய நாள்
எண்ணங்கள் நெஞ்சில் எழுகின்றன ! நேசக்
கைலாஸ் ! உன்னோடுள்ளம் கலந்த பல கணங்கள்,
சர்ச்சை, புரிந்த சமயங்கள் பற்பலவும்
அச்சடித்த சித்திரம் போல் அகத்திரையிலே தோன்ற
நெஞ்சம் நெகிழ்கிறது ! நினைவிலிருக்கிறதா ?
சஞ்சலங்கள் நெஞ்சத்தில் சாராத வாலிபத்தில்,
பத்திரிகை ஆசிரியப் பணி நான் புரிகையிலே
அத்தருணம் ஏலஎனக் கறிமுகமாய் ஆகிவிட்ட
சிவத்தம்பி தன்னுடைய சிநேகிதன் என்றே எனக்கோர்
சிவத்த, மெலிந்த, சிறுவனைப் 'பேர் கைலாச
பதி' என்றறிமுகங்கள் பண்ணி வைக்கப் பார்த்தேன் நான் !
அதி கூர்ந்த கண்கள், அடர்ந்த புருவங்கள்,
கூர்விழுந்த மூக்கின் மேல் கொழுத்த ஒரு கண்ணாடி,
சீரொழுக வாராத சிகையில் ஒரு மிடுக்கு,
கடைவாய் முனையில் ஒரு கள்ளக் குறுஞ்சிரிப்பு – ஆம் !
பார்த்த அன்று றோயலில் நீ பள்ளி மாணாக்கன் ! அரைக்
காற்சட்டையோடு, கடற்கரையில் போயமர்ந்து
பேசப் பிடித்தோம் ! பிறகல்லோ உன்னுடைய
வாசகங்கள் எல்லாம் வடிவாய் விளங்கியது !
நீ சமர்த்தன் என்ற நிசத்தை அன்றே பாரதி
தாசனைப் பற்றி நாம் தர்க்கித்த நெடும் போதே

கண்டு கொண்டேன் ! அந்த இளங் காளைப் பருவத்தும்
விண்டு விண்டு கவிதை விழுமங்கள் ஓர்ந்துரைக்க,
ஆய்வறிவின் தலைமகனாய் ஆவாய், கலைக் கடலில்
தோய்வாய், சுடர்வாய், துறை போகக் கற்றெழுந்து
மலைபோல் நிமிர்வாய், மகிமை பல பெறுவாய்,
விலையிலா இலக்கிய விருந்து பல படைப்பாய்,
கொண்டாடும் ஓர் நாள் குவலயமே உன்னை எனக்
கண்டு கொண்டேன் அன்றைக்கே ! கைலாஸ் ! அதன்பிறகு
ஞாபகமா? சர்வகலா சாலையிலே நிறையக் கடிதங்கள்
வரைவாய் அவையெல்லாம் வாரந் தவறாமல்
நிறைசெய்தென் பத்திரிகை நேர்சீர் குறைசீர் நிறைகள்
பற்றி விமர்சிக்கும் ! பழைய இலக்கியங்கள்,
சற்று முன்தான் வந்த கதை நூல்கள், எல்லாமே
அத்துபடி உனக்கு ! அவை பற்றியும் பொடிகள்
வைத்துக் கடிதங்கள் வரும் உன்னிடமிருந்து !
மாதம் ஒருக்காவேனும் வந்தால் கொழும்புக்கு
நீ தவறவே மாட்டாய் நேரிலே சந்திக்க !
காலலூர், சிவத்தம்பி, கைலாசன், சில்லை என்ற
நால்வர் கொட்டாஞ்சேனையிலே நம் அறையில் கூடிவிட்டால்
விடிய விடிய விழாத்தான், கலைவிழா !
பொடியன் சறத்தோடு போட்ட மிதியடிக்
கட்டை சொடுக்கக் கலரியில் போய் 'செக்கன்ட் ஷோ'
கிட்ட இருந்து சிகரெட்பிடித்த படி
பார்த்து விட்டுச் சாமத்தில் படத்தை விமர்சிக்க
நூர்த்திரா இராக் கடையில் நுழைவோம் ! பிளெயின்டீயும்
வந்த படியிருக்கும், வாய்ச் சமா ஓயாது !
எந்தப் பொருளெனினும் எங்களுக்கு வாய்ச்ச மா !
போட்டரைப்போம்; போதும் இனிப் போங்கள் என அன்று தர்பார்
ஹோட்டல் முதலாளி சொல்லார்; கடையைத்தான்
பூட்ட முடியாதே ! கதவே கிடையாதே !
கேட்டலுக்க வைத்துக் கிளம்புவோம் காலைக்
கடனென்றும் ஒன்றுள்ள காரணத்தால், எங்கள் கலை
மடமன்று விடிய மடங்கும் மறுதேதி
குறித்து ! அந்தச் சந்திப்புக் கூட்டங்கள் அன்று

பொறித்த மனப்பதிவுப் பொக்கிஷங்களே பின்னர்
வளர்ந்த கலை மாளிகைக்கு வைத்த அடிக்கற்கள் என
விளம்பலாம் ! இல்லையா? சொல்லையா கைலாஸ் ! நம்
ஈழத் தமிழின் இலக்கியப் பேர் மாளிகையில்
ஆளப் பிறந்தே அரசோச்சி, உலகத்தில்
எங்கு தமிழ் உளதோ அங்கெல்லாம் உன் திறனால்
மங்காப் புகழ்பரப்பி வந்தவனே ! சொல்லையா ?
கண்களில் நீர்; நெஞ்சில் தீ என்று கணேச
லிங்கன் எழுதிய இரங்கலின் வாசகத்தை
மெய்ப்பித்த காட்சி விளைந்த மயானத்தில், தீ
வைப்பதற்கு முன் உன்னை வழியனுப்பி வைப்பதற்காய்ப்
பிரியா விடையாய்ப் பிறந்த என் ஆணையை நீ
புரியா விடின் எங்கள் புலம்பல் தரியாது !
போய் வருக இனிய கலைப்பூபதியே ! அழகுப்
பூந்தமிழால் இலக்கியத்தைப் புரந்த பெருவழுதி !
ஆய்வறிவின் தலைமகனே ! இங்கிதனே ! சித்தம்
அழகியனே ! நாவலனுக் கடுத்தபடி ஈழத்
தாயகத்தின் பெருமையெலாம் தமிழ் கூறும் வையத்
தலமனைத்தும் பரப்பிய செந்தமிழ்க்குமர ! உன் பெரும் பேர்
மாய்வதற்கு விடுவோமோ? மறுபடியும் வருக !
மணி மகுடத் தமிழ்ப் பீட மகிமையினைப் பெறுக !
பைந்தமிழைக் கைலாசபதியில் நிலைபண்ணிப்
பரவெளியில் தேவர்களைப் படிப்பித்து வருக !
செந்தமிழின் வளர்ச்சிநிலை செப்பிடுக ! சிவனைச்
சந்தித்துன் தோழர்கள் இச்சகதலத்தில் நவமாய்த்
தமிழுக்குப் புதுவாழ்வு தருவதனைச் சொலுக !
சிந்திப்பின் மகுடபதி ! சென்று மறுபடியும்
திரும்பிடுக, உன் பணியால் தமிழ் அழகு பலுக !
நீண்டதாய் இந்த முறை நிருபம் எழுதிவிட்டேன் !
மீண்டும் சந்திப்போம் விடை தருக ! இப்படிக்குன்
அன்பு மறவாத சில்லையூர் செல்வரா
சன் என்ற தான் தோன்றிக் கவிராயனின் வணக்கம் !!

★★★

# பண் இசைபயிட்ட பாநடைச் சித்திரம்

# காசப்பர் காதை

## (பண்இடையிட்ட பா நடைச் சித்திரம்)

பாவலன் : ஈழத்தில் வாழ்கின்ற தமிழினம் சார்
ஏழைகளே ! பொறுப்புணர்ச்சி இதயத்தீரே !
"வாழத்தான் வேண்டும் ! எனில் நாட்டை ஏய்க்கும்
வஞ்சகத்தால் வாழ்வதிலும் மேல் சாவென்"றுள்
ஆழத்து மனத்தினிலே எண்ணி வாழும்
அருமந்த சிந்தையரே! பண்ணும் பாவும்
சூழத் தந்துங்கள் மதிகளிக்கும் வண்ணம்
சுவைக்காதை ஒன்றுரைக்க விரும்புகின்றோம் !

காசப்பர் என்பவரின் காதை ஈது; அக்
காசப்பர் தமை அறிந்தும்அறியீர் நீவிர் !
நேரப்பர் ஏழையப்பர்க் கென்பார் போல
நேர்மையப்பர் வேஷத்தில் நெடுநாள் வாழும்
நாசப்பர் ! பன்னூறாண்டுலகை ஏய்த்து
காசப்பர் பிழைப்புகளை நடத்தி வந்தார் !
காசப்பர் உண்மையிற் காசினியை வாட்டும்
காசப்பர் – பிணியப்பர் – கருமியப்பர் !

ஆதியிலே ஒரு நாள் ! இப் பரந்த பூமி
அனைத்துமே அனைவர்க்கும் சொந்தமாக,
மேதினியே பொதுவுடைமையாக, மாந்தர்
மேல் என்றும் கீழ் என்றும் இல்லையாக,
காதிருத்திப் பயிர் செய்து வளரும் காலை
காசப்பர் மெல்ல மெல்ல எல்லை கட்டிப்
பாதி நிலம் தனக்கென்று பறித்துக் கொண்டார்;
படிப்படியாய் மீதியையும் தனக்கே யாக்கி..

பாடகர் : மண்ணை அடிமை செய்தார் – அவர்
மண்ணை அடிமை செய்தார் – முதல்
மண்ணை அடிமை செய்தார் !
தன்மனப் படி சுதந்திரக் கொடி

தரித்துலாவு மனிதர் குலத்தில் இவ்
வன் மனத்தர் பண வன்மையாற் தனிமை
வாதம் என்னும் ஒரு பேத வித்தை இட – மண்ணை

பாவலன் : தன்னுரிமை இழந்த நிலம் என்னும் நல்லாள்
காசப்பர் தமை அணுகி ஒரு நாட் கேட்டாள்:–

மண்மகள் : காசப்பா ! உனக்கேனப்பா இந்த ஓர வஞ்சனைப் புத்தி?

காசப்பர் : உம் ? என்ன சொல்கிறாய் நீ ?

மண்மகள் : உனக்கும் பயன்படாமல், பிறர்க்கும் பயன்
படாமல் என்னை இப்படிச் சிறைப்படுத்தி
வைத்திருக்கிறாயே ! இது தகுமா ?

காசப்பர் : எல்லை போட்டுச் சொந்தம் கொண்டாட
மற்ற ஏமாளிகளுக்குத் தெரியவில்லை. எனக்குப்
புத்தி இருந்தது. வலிமை இருந்தது. வசதி இருந்து.
உன்னை வலிந்து பிடித்து வைத்துக் கொண்டு
அனுபவிக்கிறேன்.

மண்மகள் : அனுபவிக்கிறாயா ? அட பைத்தியக்காரா !
என்னை வெறுமனே பதுக்கி வைத்திருக்கிறாய்!
என் சின்னஞ்சி று சகோதரிகளை எட்டிப் பார்.
பயிர் பச்சைகள் பூத்துக் குலுங்கிப் பூரிக்கத்,
தாய்மைக் குதூகலத்தில் தளிர்த்து நிற்கிறார்கள்.
ஏழை எளியவர்களாக, ஏதுமற்றவர்களாக,
உன் உலகத்துக்கு வெளியே நிற்கும் ஏராளமான
மக்களுக்குத் தங்களால் இயன்ற உணவை வழங்கி
உள்ளம் மகிழ்கிறார்கள். நீயோ, என் தாய்மை
ஏக்கத்தை உணராதவனாக, நான் பயன் பெறவோ,
பிறர்க்குப் பயன் படவோ இடமளியாதவனாக,
என்னை எல்லை கட்டிப் பதுக்கி வைத்திருக்கிறாய்...

காசப்பர் : உம் – போ போ ! உன் புலம்பல் ஒன்றும் என்னிடம்
செல்லுபடியாகாது !

பாவலன் : மண் மகளின் மனவுரை காசப்பர் தம்மின்
மர மண்டைக்குட் செறிய மறுத்ததன்று !
சின்னாட்கள் சென்றன; சிற்சிலராய்க் கூடிச்
சிந்தித்தார் கமக்கார இளைஞர்; சென்று

"மண் தருக காசப்பா பயிர் விளைக்க
மறுக்காமல்" எனக் கேட்டார்; மசிந்தார்; ஆனால்
"பண்ணை எனக்கு; உங்களுக்குக் கூலி" என்றார்;
பழி செய்தார்; படிப்படியாய் உழவர் தம்மை ...

பாடகர் : பண்ணை அடிமை செய்தார் – அவர்
பண்ணை அடிமை செய்தார் – பிறகு
பண்ணை அடிமை செய்தார்

உண்ண, ஆடைகள் உடுக்க, ஓர் புறம்
ஒதுங்கவே வழிகள் ஒன்றும் அற்றவரைக்
கண்ணி வைத்தவரின் காணி பூமிகளிற்
கட்டி வைத்து வெறும் பட்டி மந்தை எனப் – பண்ணை

பாவலன் : நிலம் பதுக்கி, அதற்கெய்தும் எதிர்ப்புக் கண்டு
நீசப்பராகிய காசப்பர், வந்து
புலம் கேட்ட மனிதர்களை அடிமையாக்கி,
புது விதமாய் மனித உழைப்பென்னும் செல்வ
வளம் பதுக்கி மறுபடியும் தலையெடுத்தார் !
மண் கொத்திப் பிழைத்தவர்கள் ஒரு நாட் பண்ணை
நிலம் புதுக்கும் வேளை நிலத்தடியிற் தங்கம்
நிறைந்து விளைந் திருப்பதனைக் கண்டு கூற....

பாடகர் : பொன்னை அடிமை செய்தார் – அவர்
பொன்னை அடிமை செய்தார் – பிறகு
பொன்னை அடிமை செய்தார்

பண்ணையாளர் அவர் மண்ணையே கிளற
நண்ணுகின்ற சீர் நன்மை அத்தனையும்
தன்னை வந்தடைதல் சாலும் என்று விதி
பண்ணி அன்னவர்கள் பாடுபட்டகழும் – பொன்னை

பாவலன் : பண்ணையிலே அடிமைகளாய்ப் பாடுபட்டோர்
பகுத்தறியும் திறன் பெற்றார்; உழைப்பை நல்கப்
பின் நின்றார்; காசப்பர் நிலைமைக் கேற்கப்
பிடி நழுவ விட்டுப் பின் புதிதாய்ப் பெற்ற

பொன் பதுக்கும் காரியத்தில் இறங்கி விட்டார்;
பொது மக்கட் குறுபயனை அளிக்க வல்ல
நன்னிதியம் தேக்கமுறும் காலை, பொன்னி
நாவசைத்துக் காசப்பர் தம்மைக் கேட்டாள்: –

பொன்னி : ஐயா காசப்பரே ! நங்கையரோடு உறவாடிக்
கிடக்கவும், நாட்டுக்குப் பொருள் ஈட்டி
அளிக்கவும், தங்கமாகப் பிறந்த என் தன்னை நீர்
தடுத்து வைத்து முடக்குதல் ஞாயமோ ?

காசப்பர் : நங்கைமாரொடு கூடிக் களிப்பதை
நானும் செய்வது ஞாயம் ! பசியபொன்
தங்கமே ! நன்றி சாற்றினன்; காசினாற்
தாசிமாரைக் கணக்கின்றி வாங்குவேன் !

பாவலன் : மண்ணென்ன, பண்ணையிலே வேலை செய்யும்
மாந்தர்கள் தாமென்ன, மண் விளைத்த
பொன்னென்ன, பொருளென்ன அவைகளன்று
பொருட்டெங்கள் காசப்பர் புத்திக்கு !ஆயின்
"என்னென்ன பொருளாக இருந்த போதும்,
என்னிடமே குவிந்திருக்க வேண்டும்" என்னும்
சின்ன மதிப் பதுக்கீட்டுப் பேராவேசக்
கீழ்மை மனம் ! எனவே அந்தப் புரத்தில்..

பாடகர் : பெண்ணை அடிமை செய்தார் – அவர்
பெண்ணை அடிமை செய்தார் – பிறகு
பெண்ணை அடிமை செய்தார்

மண்ணை, மண்கிளறு பண்ணையாளை, ஒளிர்
பொன்னை வென்று பயன் என்ன ? வாழ்வு, சுதி
பண்ண வாய்த்த தெனும் எண்ணமாகி, இள
வண்ண மாதர் சுகம் உண்ணவே கருதிப் – பெண்ணை

மண்ணை அடிமை செய்தார் – அவர்
மன்ணை அடிமை செய்தார் – முதல்
மண்ணை அடிமை செய்தார்

தன்மனப்படி சுதந்திரக் கொடி
தரித்துலாவு மனிதர் குலத்தில் இவ்
வன்மனத்தார் பண வன்மையால் தனிமை
வாதம் என்னும் ஒரு பேத வித்தை இட

– மண்ணை

பண்ணை அடிமை செய்தார் – அவர்
பண்ணை அடிமை செய்தார் – பிறகு
பண்ணை அடிமை செய்தார்

உண்ண, ஆடைகள் உடுக்க ஓர்புற
மொதுங்கவே வழிகள் ஒன்று மற்றவரைக்
கண்ணி வைத்தரின் காணி பூமிகளிற்
கட்டிவைத்து வெறும் பட்டி மந்தையெனப்

– பண்ணை

பொன்னை அடிமை செய்தார் – அவர்
பொன்னை அடிமை செய்தார் – பிறகு
பொன்னை அடிமை செய்தார்

பண்ணையாளர் அவர் மண்ணையே
நண்ணு கின்ற சீர் நன்மை அத்தனையும்
தன்னை வந்தடைதல் கூடு மென்று விதி
பண்ணியன்னவர்கள் பாடுபட்டகழும்

– பொன்னை

பெண்ணை அடிமை செய்தார் – அவர்
பெண்ணை அடிமை செய்தார் – பிறகு
பெண்ணை அடிமை செய்தார்

மண்ணை மண் கிளறு பண்ணையாளை ஒளிர்
பொன்னை வென்று பயன் என்ன ? வாழ்வு சுதி
பண்ண வாய்த்ததெனும் எண்ணமாகி இள
வண்ண மாதர் சுகம் உண்ணவே கருதிப்
– பெண்ணை

மண்ணை அடிமை செய்தார் – முதல்
மண்ணை அடிமை செய்தார் – பிறகு
பண்ணை அடிமை செய்தார் – பிறகு
பொன்னை அடிமை செய்தார் – பிறகு
பெண்ணை அடிமை செய்தார் – பணம்
தன்னை அடிமை செய்தார் – பிறகு பணம்
தன்னை அடிமை செய்தார்

பாவலன் : காசப்பரின் அந்தப் புரத்தில் வந்து
கன்னியர்கள் அடைபட்டார் ; திணறிப்போனார்;
ஆசைப் பட்டுலகினிலே உலவிச் சுற்றி
ஆடவர்களோடு விளையாடிக் கூடித்
தேசத்தில் மக்கள் வளம் பெருக்கத்தக்க
திருமிக்க கட்டழகிமாரைப் பூட்டி
நாசப்பட்டழிவதற்குப் பதுக்கிக் கொண்டார் ;
நலமேதும் தனக்கேனும் நாடிக்காணார் !

நூறம்மா, ஐம்பதம்மா என்று பல்பேர்
நுண்ணழகுப் பாவையர்கள் நுடங்கி இந்த
வாறம் மா நீசருக்கு வாழ்க்கைப்பட்டும்
வாழாமல் மூலையிலே முடங்கி விட்டார்;
நூறம்மா காசப்பர் தம்மிடத்தில்
நுவன்றாள் தன் ஆசையெலாம் ஓர் நாள் ! "என்ன ?
கூறம்மா !" என்றிருந்து கேட்கலானார்;
கூறலுற்றாள் நூறம்மா குறிப்பாய்க் குற்றம் :–

நூறம்மா : என்னைப் போல் நூறம்மா பல பேர் தம்மை,
இளைய பல ஐம்பதம்மா மாரை நீங்கள்
தன்னலத்தாற் சிறை செய்து கட்டிக் காத்துத்
தடுப்புக்குள் வைத்திருத்தல் என்ன ஞாயம் ?

இந் நாட்டில் வலம் வந்து நாங்களெல்லாம்
எத்தனையோ பணி செய்ய விருப்புக் கொண்டோம்;
நன்மனமாய் விடுவித்தால் நல்லது; இன்றேல்
நாட்டரசர் கற்பிப்பார் நல்ல பாடம் !

காசப்பர் : போடி போ ! மிரட்டாதே ! நெடுநாளாகப்
பொன் பதுக்கும் பொருள் பதுக்கும்
வாடிக்கைத் தொழில் செய்து தேர்ச்சி பெற்ற
வல்லவன் நான்; எனை மடக்க வல்லாரில்லை !
வேடிக்கைப் பேச்சை விடு ! போ ! போய் உன்னை
விட்டு வைத்த கூட்டுக்குள் பதுங்கிக் கொள்வாய் !
கூடிக் கொண்டாருடனும் ஓடிப் போகக்
குறி வைத்தால் உனைச் சுட்டுக் கொலையும் செய்வேன்!

பாவலன் : இவ்வாறு காசப்பர் மிரட்டல் செய்தார்;
இவருக்குத் தெரியாமல் அரசைச் சேர்ந்த
செவ்வாணர் சில பேர்கள் திட்டமிட்டார்.
சிறை மீட்டு நூறு, ஐம்பதம்மாமாரை
பவ்வியமாய் நாடெங்கும் அனுப்பி மக்கள்
பசி தீர்க்கும் பிணி தீர்க்கும் வறுமை தீர்க்கும்
உய்வினைகள் செய்விக்க உள்ளங்கொண்டே
ஒரு நாளிற் சட்டென்று சட்டமிட்டார் !

ஆமாம் ! ஆம் ! சரியாக ஊகித்தீர்கள் !
அரசாங்க வரவு செலவாணைச் சட்டம்,
சீமானை, காசப்பர் தம்மை – முன்னர்
திருமண்ணை, மனிதர்களை, பொன்னை,பெண்ணைத்
தாமாளப் பதுக்கியவர் வாரிசாய் எம்
தாய் நாட்டில் வந்துதித்து பணம் பதுக்கும்
ஏமாற்றுக்காரர் தமை வளைத்துக் கொண்ட
இன்செயலைக் காசப்பர் கதையாய்ச் சொன்னோம்.

காசப்பர் வகையாக மாட்டிக் கொண்டார்.
கதறுகிறார் தலை மேலே கையை வைத்து:–

கட்டுக் கட்டாய்ப் பணப்
பெட்டிக்குள்ளே வைத்துக்
காத்த பணம்போச்சே – பொத்திப் பொத்திச்
சேர்த்தது வீணாச்சே

கள்ளக் கடத்தலிற் சேர்த்ததொரு கட்டு
கைலஞ்சம் வாங்கிக் குவித்ததொரு கட்டு
கொள்ளை விலை விற்றுக் கொண்டதொரு கட்டு
குதிரைச் சவாரியிற்குதிர்ந்ததொரு கட்டு
– கட்டு

கலப்படச் சந்தையிற் கைக் கொண்டதோர் கட்டு
கசிப்புக் குடிவிற்றுப் பொசிப்புற்றதோர் கட்டு
நிலப்பறி, வட்டி நிதிகளில் ஓர் கட்டு
நேர் வருமான வரி ஒளித்தோர் கட்டு
– கட்டு

மோசடியால் வந்த நூறிற் பல கட்டு
முத்தெனக் கல்விற்ற நூறிற் பல கட்டு
தேசச் சுரண்டலிற் சேர்த்த பல கட்டு
தேட்டமெலாம் பழம் நோட்டானதே கட்டு
– கட்டு

பாவலன் : பலர் வாடச் சிலர் மாடம் கட்டிக்
கொண்டு பவி செல்லாம் சுகிக்கின்ற பழைய போக்கை
இலதாகச் செய்தாலே உலகம் வாழும்;
இது செய்வதெளிதல்ல; எனினும் மார்க்கம்
சிலதேனும் இது காலை செய்ய முன்னிச்
செயற்பட நாம் தொடங்குகிறோம்; ஏழைமக்கள்
நிலைபேறு வருவதற்காம் குறிகள் கண்டு
நிமிர்கின்றார் எக்களிப்பிற் பாடுகின்றார்:–

செல்லாதையா – இனிச்
செல்லாதையா – காசைக்
கல்லாப் பெட்டிக்குள் வைத்துக்
காத்தவரின் ஜம்பம் ஒன்றும்
– செல்

நில்லாதையா – இனி
நில்லாதையா – காசு
நிற்குமென்றடுக்கி வைத்துச்
சொக்கினோர் பதுக்கல் வேட்டை
– நில்

வெல்லாதையா – இனி
வெல்லாதையா – ஏழை
வீட்டைக் கொள்ளை வேட்டையாடி
நாட்டையே சுரண்டும் சூழ்ச்சி
– வெல்

வில்லாதையா – இனி
வில்லாதையா – வெளி
வேஷமிட்டு மோசம் பண்ணும்
வெத்து வேட்டெம் மத்தியிலே
– வில்

★★★

# உருவகக்
# கவிதை

# பஸ்மாஸ்திரம்

- உருவகக் கவிதை -

*குறிப்பு:- புராணக்கதையை நவீன போர்ச் சோதனையோடு ஒப்பிட்டுப் பாடும் கவிதை. உலகம், பண அசுரர் வீம்புப் போர்ச் சோதனைக்கு விலையாகித் தீய்ந்திடுமோ ?*

அந்நாளில் ஓர் அசுரன் அரனை மனதிருத்தித்,
தன்னுள்ளே தானாகித், தாரணியின் சிந்தையெலாம்

நெற்றி விழியானின் நினைவிற் குடி போக்கி,
முற்றும் துறந்த முனி போல் தவமிருந்தான்.

கார் முகிலில் ஏறிக் கன உலாப் போந்த
பார்வதியின் பர்த்தா, பக்தன் குரல் கேட்டு,

அந்தர்த் தியானம் ஆகி, நில மிசையில்
வந்து, தனது பதம் வந்திந் திருந்தவனின்
கண்முன் பிரசன்னம் காட்டி, "உபாசகனே !
எண்ணத் தெனை இருத்தி என்ன வரம் விழைந்தாய் ?"

என்று வினவியதும் இடும்பன் மொழிகின்றான்:
"மன்றுள் நடனா ! நான் மன்றாடிக் கேட்பதெலாம்

சங்கார வல்லமையே ! சங்கரனே ! என்னுடைய
அங்கை தனை உயர்த்தி அவனிடப் பொருள் எதனைத்

தொட்டாலும் நீறாகித் தூசாகி, அப்பொருளே
பட்டென் றொரு நொடியிற் பஸ்பமாய் மாறிவிடும்

சக்தி எனக் கருளாய் ! சங்கக் குழை சிலுப்பி
அத்தியய வெங்கூத்தை ஆடும் அழலாடி! " என,

வல்லசுரன் இந்த வாறாய் வரம் கேட்க,
நல்ல சிவனார், நம் நாதனார், கைலாசர்

உள்ளங் கனிந்துருகி, உடனே கரம் தூக்கி,
"பிள்ளாய் ! வரத்தைப் பிடி! " என்று கையளித்தார் !

பாவி அசுர மகன், பரம சிவன் தந்த
சாவின் நெருப்பில் உள சக்தி தனைச் சோதிக்க

ஆசை மிகக் கொண்டான்; அரனின் தலை மீதே,
நீசன், தனது கரம் நீட்டினான்; நீட்டியதும்

அம்பலத்தான் மெய் விதிர்த்தார்; அஞ்சித் துடிதுடித்தார்;
எம்பிரான் வேணுபதம் எண்ணித் தியானித்தார் !

ஆலால சுந்தரனை ஆதரிக்க, எங்கள் திரு
மால் வந்தார்; மோகினியாய் மாய உருவெடுத்தார் !

மோகினியின் பேரெழிலில் மூர்க்கன் வசமிழந்தான்;
போகம் விழைந்தான்; தன் புத்தி மிகப் பேதலித்தான் !

பஸ்மாசுரன், தனது பாங்கில் வர, பெண்ணுருவ
விசுவம்பரன், உடனே விதிகள் சில விதித்தார் !

"அசுரர் குலக் கொழுந்தே ! ஆரணங்கு நான், உனது
அசுசிக் களமான அசுத்தக் கரு மேனி

ஆரத் தழுவிடுதல் ஆகுமோ ? ஆதலின், உன்
வீரக் கருவுடலை வெண்டாமரைக் குளத்தில்

நீராட்டி, மாசுகளை நீக்கி வரின், நீ உருவில்
மாரன் எனக் கருதி, மாலையிடச் சம்மதிப்பேன்"

என்றுரைக்க மோகினியாள், இடும்பன் மனமொப்பிச்
சென்று, குளநீரிற் சேர்ந்தான் ! அவனுடைய

பொல்லாக் கரம் பட்டு பொய்கை கருகி விட,
மல்லாந்தான் சேற்றினில் அம் மாபாவி ! பிற்பாடு,

மெல்ல எழுந்தான் ! " உன் மேனியிலும் சென்னியிலும்
உள்ளனவே ஏதேதோ ! ஓகோ ! களி மண்ணும்

சேறும், சகதியுமா ? சேச்சே ! துடை அந்த
நாறும் அழுக்கை" என, நாசூக்காய் மோகினியாள்

சொன்னாள் ! மறதியினால், சுட்டெரிக்கும் தன் கரத்தைச்
சென்னியிலே வைத்த சுரன் சேறு சகதியெலாம்

நீக்க முயன்று, பொடி நீறானான்; தன் வினையால்,
போக்கிரி, அம் மாபாவி, போக்கினனே தன் ஆவி !

பஸ்பமாய், தூசான பாவி அசுரன் தன்
அஸ்தி, மெதுவாக, அம்புவியின் திக்கெல்லாம்

காற்றிற் கலந் தின்று காணுகிற போர் முகிலாய்த்
தோற்ற, நிர்மூல சக்திச் சோதனைகள் மேதினியில்

ஓம்புகிறார் வல்லரசார் ! உலகம் பண அசுரர்
வீம்புப் போர்ச் சோதனைக்கு விலையாகித் தீய்ந்திடுமோ ?

★★★

# நெடும் பா

# சிலுவையில் அறையுண்ட முழுநிலா !

*(குறிப்பு : 1983 ஆடிக்கலவரம் தொடங்கியநாள் 'போயா' எனும் நோன்மதி நாள். அந்த நாள் தந்த மனக்கிளர்ச்சியில் சிந்திக்கும் பொகீமியன் நெறிசார்ந்த 'சந்தர்' இந்தக் கவிதையில் நாயகன். சிறந்த ஆராய்ச்சியாளரான மறைந்த ஜேம்ஸ் ரி. இரத்தினம் அவர்களின் புதல்வரான சந்திரன் இரட்ணம் அவர்களை உருவகிக்கும் பாத்திரம் இது. ஜேம்ஸ் ரி. இரத்தினம் 'எவிலின்' என்ற சிங்களப் பெண்மணியை மணந்திருந்தவர். அவர்களின் புதல்வன் சந்திரன் இரட்ணம் சிங்கள – தமிழ் இனப் பிரச்சினை பற்றி சில்லையூரோடு உரையாடுவதுண்டு. சந்திரனின் ஒரு வீடு கனத்தை மயானத்துக்கு எதிர்ப்புறம் அமைந்திருந்தது. அதைக் களமாயும் எதிர்ப்புறக் கனத்தை மயானத்தில் கனன்றெழுந்த கலவரத்தைக் கருப் பொருளாயும் கொண்ட கவிதை).*

1. கனத்தை மயானத்துக்குக்
   கண்ணெதிர்த் தெருவில் உள்ள
   பணத்தவர் வரிசை வீட்டுப்
   பட்டியற் தொகையில், சந்தர்
   இனத்தவர்க்கு அநேக காலம்
   இருந்த தோர் மாடி வீடு;
   தனத்தர், துர்ச் சகுனம் பார்த்த
   சரித்திரம் இல்லைத் தானே ?

2. சந்தரும் அதனால் அச் 'சா' ச்
   சாலையில் இருந்த வீட்டில்
   வந்திருப்பதற்குச் சற்றும்
   மனத் தடை கொண்டதில்லை !
   சுந்தர வாழ்க்கை; கல்விச்
   சொகுசுடன் சுதந்திரங்கள்;
   தந்த கோபுரம் போல் இல்லம்;
   தனி மகன்; உறைந்தான் அங்கே !

3. சீமையிற் படித்த பின் 'பொ
கீமியன்' நெறியைச் சார்ந்த
சீர்மையால் 'வதுவை' என்ற
சிறையினில் அகப் படாமல்,
கூர்மை சிந்தனையில், ஓர்மை
கொள்கையில், நடப்பு வாழ்வில்
நேர்மை, என்றுயர்ந்து நின்று
நிமிர்ந்த தத்துவன்; ஆனாலும்,

4. அவன் தமிழ்க் கவிஞன்; பாரின்
அழகெலாம் ரசிக்கும் நெஞ்சன் !
நவமுறு கற்பனைக் கண்
ணாற் தரிசனங்கள் காண்போன் !
சிவன்முடி, மரியாள் பாதம்,
தீன் மறை, பௌத்தம் எங்கும்
கவின் பெறும் நிலவைக் கண்டால்
கை தொழும் எழிலின் பக்தன் !

5. முழுநிலா, இரவு முற்றும்
முழித்திருந்து அழகு பார்க்கும்
விழுமிய இதயன்; அன்றும்
விழித்துக் காத்திருந்தான் ! ஆடி
எழு மதித் தினம், பத்தொன்பான்
எண்பத்து மூன்றாம் ஆண்டின்
அழு தினம் ஆகும் என்று ஓர்
அறிகுறி தேர்ந்திலாதான் !

6. ஆடி வேல்; புனித நன்னாள்
அவனுக்கு மட்டுமன்று;
கூடி வாழ் பௌத்தருக்கும்
கும்பிடும் புனித நோன் நாள் !
ஓடினான் பகலோன் மேற்கே !
உதய சந்திரனைக் காத்து
மாடியில் இருந்தான் சந்தர்;
மணி ஐந்து, விநாடி பத்து !

7. அந்தி வான் வனப்பை வாரி
அள்ளித் தின்று அவன் இருக்கச்
சந்தியில் 'ஓகோ' என்று
சந்தடி; ஆரவாரம் !
முந்திய தினத்தின் முன் நாள்
முற்றுகை உற்று மாண்டோர்
அந்திமக் கிரியைக்கான
ஆயத்தம் என்பது ஓர்ந்தான் !

8. சிந்தனைத் துயரில் ஆழ்ந்தான் !
"சிச்சிச்சீ ! என்ன வாழ்க்கை ?
மந்தைகள் போலாய் விட்டார்
மானிடர் ! மனித ஆயுள்
பந்தயக் களத்தில் வைக்கும்
பலிப் பொருளாயிற்றே ! போய்ச்
சந்தையில் விலைப்படுத்தும்
சரக்கைப் போல் 'உயிர்' ஆயிற்றே !

9. "ஆம் ! படை வீரர் தங்கள்
ஆவியை முன்னீடாக்கிச்
சாம் வரை மாதம் தோறும்
சம்பளம் வாங்கும் செய்கை,
தாம் தமதுயிரை விற்றே
தரித்திரம் தீர்ப்பதற்காய்
ஓம் படும்பரிதாபத்தின்
உட்கிடை; உண்மையன்றோ ?

10. "விற்றுத் தம் குடும்பம் காக்க
வேறெதும் இல்லார் ! நாட்டுப்
பற்றுக் கன்று; இல்லாள், மக்கள்
பட்டினி கிடக்காமற்கு,
நெற்றுக்கு விதை விட்டாற் போல்,
நெஞ்சம் கல்லாக்கி, நாகப்
புற்றுள் கை வைக்கும் வாழ்க்கைப்
போர், படைப் போர் வீரர்க்கே !

11. "மடக்கலாம் எதிரி; வென்று
வருதலும் கூடும்; என்ற
இடக் கருக்கு இடையில், நாளைக்கு
இன்றைக்கு என்று ஊசலாடும்
முடக்கத்துக் கோட்டைக்குள்ளே
மூச்சினை அடகு வைத்தோர்,
அடக்கத்துக்காய்க் கனத்தை
ஆயத்தம்!" என்று தேர்ந்தான் !

12. சாவதற்காக மாதச்
சம்பளம் வாங்கினோர்கள்
பாவம்; பத்தோடு மூன்று
படைஞர்; துர் அதிர்ஷ்ட எண்ணர் !
காவவும் புதைப்பதற்கும்
கனத்தையிற் கூடினோரோ
ஏவலர் ஆவார் வஞ்சன்
இயமனுக் கென்று தேரான் !

13. "பத்தொடு மூன்று பேரைப்
பதறடித்து உயிரை மாய்த்தோர்
பித்தர்" என்றெண்ணி உள்ளம்
பிழிந்திருந்து அயர்ந்த பாவின்
வித்தகன், சற்றுப் பின்னர்
விழித்தனன் அறி கனாவால்;
சத்தங்கள், கலவரங்கள்,
சரங்களாய்ச் செவியைச் சாட !

14. "ஈழமே வேண்டும்" என்னும்
இளைஞரின் வெடிக்காளான
வேழத்தின் கட்சி ஆட்சி
வீரர் பத்தோடு மூவர்
வீழ, அன்னாரின் சாதி
வெகுண்டெழ, கொழும்பு அன்றோர் தீக்
கோளமாய் மாறும் என்னும்
குறிப்பினை உணர்ந்தான் அல்லன் !

15. மாடியில் நின்று பார்த்தான்;
மாக்களோ சேர்கின்றார்கள்;
ஆடி வேற் கூட்டத்தாரோ
அலமந்தோடுகின்றார்; போதைக்
காடி ஈந்தருந்த, பேதக்
கனலுக்கு நெய்யை வார்த்த
பேடிகள் சூழ, சூளர்
பித்தமுற்று அலைகின்றார்கள் !

16. காவலர் சூழ்ந்தும், சாதிக்
காடையர் எதிர்க்கின்றார்கள் !
ஏவலர், இன பேதத்தின்
இருடிகள் தூண்டி விட்ட
தீ வலர் ஊர்வலங்கள்
தெருவெலாம்; பொரளைச் சந்தை
சா வலம் தொடங்குதற்குச்
'சரி' அடையாளம் ஆச்சு !

17. சந்தையில் தொடக்கமான
சாக் களம் விரிய, காலன்
மந்தைகள், நடந்தன்று; ஓடி
'மள மள' என்று கூடிப்
பந்தயம் வைத்தாற் போலப்
பலிக் களம் செய்யச் சென்றார்
'அந்தர்சன்' மனைகட்கு; ஆங்கே,
ஆ ! தமிழ்க் குடிகள் நாசம் !

18. மாடியில் நின்று, ஆம், பார்த்தான்;
மலை, எரி மலை வெடிப்பின்
கோடித் தீ நாக்காய்க் கக்கும்
கொடும் சின நெருப்பைக் கண்டான் !
மாடிகள் எரிந்தால், தாய் மார்
மடிகள் தான் எரிந்தால் என்ன ?
நாடிலார் இனி என்றிங் கோர்
நா அசையாது என்றோர்ந்தான் !

19. வெள்ளவத்தையும் சீர் தெய்யோ
விட்டையும், தமிழர் வம்சம்
உள்ளதாய் நெடுநாள் உற்ற
உடரட்டை, நுவரை, அட்டன்,
எள்ளளவேனும் பண்பாடு
இல்லவர் கையால் வெந்து
சொல்லளவே ஆம் என்று
சோர்ந்தனன் கவி; திகைத்தான் !

20. திகைப்புகள் திடீர் ! "திடீர் தான்
தீர்மானம், துணிவும் என்றால்,
நகைப்புகள் பிறர் செய்வாரே
நாட்பல பின்னர், நாங்கள்
தகைப்புகள் ஓர்ந்து தேர்ந்து
சரிப்பட இனத்தை ஓம்பும்
வகைப்பினைச் செயேல்" என்று என்று
வலுவாக யோசிக்கின்றான் !

21. யோசித்த கணத்தில் வந்த
ரோஷத்தில் குருதி பொங்க,
"யாசித்து நாடு பெற்றார்
யாங்குளர் ? குண்டு மாரி
வீசித் தான் தாழ்த்தப் பட்டோர்
விடுதலை பெற்றார்" என்று
வாசித்த வரலாறெல்லாம்
மனத்தெழக் கொதிப்புக் கொண்டான் !

22. பிறகு தான் புரிந்து கொண்டான்,
பெரு நெருப் பொன்றை மூட்டி
விறகினில், இனக் குரோத
வெந்தழல் எரியச் செய்தோர் –
சிறகுகள் விரித்துப் பேதச்
சினத்தினை விசிறினோர்கள் –
புறவினை புரிந்தோர் – உள்ளும்
புறமுமே உள்ளார் என்று !

23. உள்ளொன்று புறமொன்றாக
உலவிடும் கீழ்மைப் புத்திக்
கள்ளர்கள், மொழி, மதத்தை,
சாதியை, இனத்தைச் சுட்டிக்
குள்ளமாய்த் தங்கள் வர்க்கக்
கோன்மையைப் பேணத் தோண்டும்
பள்ளத்தில் வீழும் பேதைப்
பரம்பரைத் தொடர் ஈதென்று !

24. உள்ளத்தால் மட்டுமன்று; உள்
உணர்வினால் மட்டுமன்று;
வெள்ளத்தில் துரும்பாகின்ற
வெற்றுணர்ச்சியினால் அன்று;
தெள்ளவே தெளிந்த ஆழச்
சிந்தனை அறிவால் ஆய்ந்து
கொள்ளத்தான் விளங்கும் வர்க்கச்
சூட்சுமம் என்று கூர்ந்தான் !

25. சிந்தித்தான் ! இருந்திருந்து
சிந்தனை விரிவாய்ச் செய்தான் !
உந்தித்த போது இயற்கை
உற்பவச் சக்தியெல்லாம்
வந்தித்து வணங்கி மண்ணில்
மானிடன் வாழ்ந்த செய்தி–
சிந்தித்தான் ! இருந்திருந்து
சிந்தனை விரிவாய்ச் செய்தான் !

26. கதிர் மறைவு இருளுக்கு அச்சம்;
காட்டுத் தீக்கு அச்சம்; வானில்
மதி வரா இரவுக்கு அச்சம்;
மரணம், நோய், பேய்கட்கு அச்சம்;
துதிமுறை தீக்கும் பேய்க்கும்
சூரிய சந்திரர்க்கும்
விதித்துப், பின் இயல்பு ஓர்ந்து, அச்சம்
வென்றதே மனிதச் சாதி !

27. வென்று வென்றியற்கைச் சக்தி
வீரத்தை அடக்கி ஆண்டு
கொண்டின்று வரை வளர்ந்து,
கோள்களை நாளை வெல்லச்
சண்ட மாருதம் செய் சாதி,
சக மனிதருக்கோ அஞ்சிப்
பொன்றுதல் மறைக்கப் போலிப்
போர்க்கொடி உயர்த்தல் உய்த்தான் !

28. உள்ளொளி போலச் சந்தர்க்கு
உண்மை ஒன்றுதயமாச்சு !
வெள்ளையும், கறுப்பும், வர்ண
வேறுபாடுகளும், பாரைப்
பள்ளம் மேடாய்ப் பிளக்கும்
பாகுபாடனைத்தும், செல்வம்
உள்ளவர், இல்லார் வர்க்கத்து
உள்ளூறும் பயம் என்று எய்த்தான் !

29. "மயன் படைப்பெனச் செருக்கும்
மானிடச் சாதிக்கு, இங்கே
பயம் படைத்தளித்த கெட்ட
பாவி யார் ? பயத்தால் இன்றும்
புயம் புடைத்தெழுந்து சாதி,
புலம், குலம், இனம், நாடென்றும்,
சுயம் பலம் என்றும் யோசித்
தூர்ந்து சென்றழிகின்றாரே !

30. "பயத்தினால் வீரம் பேசி
பரிதவிக் கின்றாரே, இச்
சுயத் திறம் அறியார்" என்று
சுதந்திரச் சித்தனாகத்
துயர்த்தனன் கவிஞன் மாடித்
தொங்கலில் ! முழு நிலவோ
உயர்த்தது மெள்ள மெள்ள,
ஒளிர் சிலுவைக்குப் பின்னால் !

31. சிலுவையா ? ஆமாம் ! அந்தச்
சேமக்காலைக் குள், நட்ட
நிலுவைகள் இடையே ஓங்கி
நிற்கின்ற யேசு மார்க்கத்
தொழுகை ஆலயத்தின் உச்சிக்
கோபுரக் குருசும், ஏனோ
அழுவது போலச் சோகித்து
அவனையும் அருட்டிற்று அன்று !

32. அருட்சியால், கிட்டத்தட்ட
அகப்பட்ட தத்துவத்தின்
விருட்ச வேர் மனத்து ஊன்றாமல்
விலகிற்று; மெய்ம்மையான
பொருட் சமத்துவக் கோட்பாட்டுப்
போதம், உள் மனதில் சற்றே
கருக்கலாய்த் தோன்றும் வேளை,
கரு உருச் சிதைபலாச்சு !

33. பாவம் ! ஓர் நடுப் பாங்கான
பாவலன் தானே சந்தர் !
ஆவலுண்டு அறிய ! ஆயின்
அரை குறைக் கலைஞன் தானே !
தேவ நேயப் பாவாணர்ச்
சிந்திப்பு, தெளிவு கொள்ள
ஏவல்கள் சித்திக்காமல்
இனும் உளார் கவிஞர் அன்றோ ?

34. ஆதலால், அவர்கள் போன்றே,
அக வயப்பட்ட பார்வைப்
பேதலிப்பாலே, யேசு
பெருமகன் சிலுவைக்குப் பின்,
சீதளச் சோதி மின்னிச்
சிந்த,மெல்லெனக் கிளம்பும்
நூதன மதியைப் பார்த்து
நொய்ந்துளம் நெகிழ்ந்து நின்றான் !

35. முழு நிலா, அடடா, கோவில்
முகட்டிலே, யேசு மாண்ட
கழுவினை – சிலுவை மையச்
சந்திப்பின் நடுவை – மெல்லத்
தழுவிய படி ! ஈதென்ன
தாங்கொணாக்காட்சி ? ஐயோ !
சிலுவையில் முழு நிலாவைச்
சேர்த்து அறைந்தா விட்டார்கள் ?

36. சிவன் முடி, மரியாள் பாதம்,
தீன் மறை, பௌத்தம் எங்கும்
கவின் பெறும் நிலவை, சாந்தக்
கதிர்களைப் பொழியும் நோன்புத்
தவநிலைக் குறியை, அன்பின்
சாட்சியை, சிலுவை மீதில்,
அவ மதி படைத்தோர், ஆணி
அடித்து அறைந்தா விட்டார்கள் ?

37. திகைத் துளம், மேனி, ஆவி
சிலிர்த்துப் போய் நின்றான் சந்தர் !
பகைத்துப் போய் விட்ட நெஞ்சுப்
பாவிகள் வைத்த தீயின்
புகைத் 'துப்பட்டா' கொணர்ந்து
போர்த்தது நிலா மேல் தென்றல் !
திகைப்பினை உதறிச் சந்தர்
தீர்க்கமாய்ச் சிந்திக்கின்றான் !

★★★

# மொழி பெயர்ப்புப் பாடல்கள்

# பண்ட மாற்று !

என் வசம் காதலர் இதயம் –
என்னுளம் என்னுயிர்க் காதலர் வசமே !

மாறி நேர்ப் பண்ட மாற்றாய் என்னுள்
உறையும் அவரின் உளத்தை நான் செல்வமாய்ப்
பேண, என்னுளத்துப் பிடி இழக்கார் அவர் !
இதனின் விஞ்சிய இதய மாற்றிலதே !

என் வசம் காதலர் இதயம் –
என்னுளம் என்னுயிர்க் காதலர் வசமே !

எமை இணைப் பதெனுள் இருக்கும் அவருளம்;
என்ன துள்ளிருந்த தவர் எண்ணம், புலன் எலாம்
நடத்தும்; தன தென்ப துணர்ந்தென துளம் அவர்
போற்ற, நான் அதேவிதம் போற்றுவன் அவருளம்!

என் வசம் காதலர் இதயம் –
என்னுளம் என்னுயிர்க் காதலர் வசமே !

*(சர் பிலிப் சிட்னி எழுதிய ஆங்கிலப் பாடலின் தழுவல்)*

★★★

# சாதனையில் தோய்கின்ற தைரியத்தைக் கற்போமே !

வாழ்க்கை வெறும் கனவென்று வறிதே அழுது வடித்
தூழ்க் கதைகள் என்னிடத்தே உளறாதே ! துயில்கின்ற

உள்ளம் தான் செத்த பிணம்; உள்ளே, புறத் தோற்றத்
துள்ளது போல் வாழ்வில் எதும் ஒருபோதும் அமையாது !

இவ்வுலக வாழ்வு நிசம்; என்றும் முனைப்பார்வச்
செவ்வி உடையது; அதன் சேர் இலக்குச் சாவன்று !

"மண்ணால் உருவானாய்; மண்ணாவாய் மனிதா!" என்
றந்நாள் எழுந்த மொழி ஆன்மாவைச் சுட்டியன்று !

கலையோ நெடிது; இங்கே காலம் பறக்கிறது !
வலியதே ஆனாலும் மனித இதயம், தன்

ஒலி தளர்ந்து கொட்டு முரசொக்கப் புதை குழிக்கு
வழி காட்டும் சா மேள வண்ணத்தில் ஆர்க்கிறது !

ஆதலினால் வையம் எனும் அகன்ற சமர்க் களத்தி
லே தங்கிடமாய் இசைகின்ற வாழ்க்கையிலே

பட்டி மந்தை போலே பணிந் தொடுங்கிச் சோராமல்
வெற்றி பெறப் போராடும் வீர மகன் ஆவாயே !

கால மணல் மீதெம் காலடியை நாமும் தான்
சாலப் பதித்திடலாம்; சால்புயர்ந்து வாழ்ந்திடலாம்;

முன்னைப் பெரும் மனித மூத்த பெரியோரின்
பொன்னொத்த வாழ்வு புகட்டுகின்ற பாடம் இதே !

ஈதுணர்ந்தோம்; ஆதலினால் எழுந்து, வருவிதி, ஊழ்
தீதெனினும் நன்றெனினும் திகையா தேற்கின்ற மனம்

போதரவே, நலம் நாடிப் பொன்றா துழைத் தமைந்து
சாதனையில் தோய்கின்ற தைரியத்தைக் கற்போமே !

*(ஹென்றி வேட்ஸ்வேத் லோங்ஃபெலோ என்னும் ஆங்கிலக் கவிஞன் எழுதிய உலகப் பிரசித்தமான ஒரு பாடலின் உயிர்ப் பகுதி இங்கே தமிழுருவம் பெற்றிருக்கிறது.)*

(Tell me not in mournful numbers Life is but an empty dream)

# உதரப் பொந்தில் உயிர்க்கும் என் மகவுக்கு

*காலஞ் சென்ற அமெரிக்கப் படைத் தளகர்த்தர் ஜெனரல் டக்ளஸ் மக் ஆர்தர், போர் வெறி கொண்ட குரூர மனம் படைத்தவர் என்று பலராலும் கருதப்பட்டவர்; பிரசித்தம் செய்யப்பட்டவர். அவர் மறையும்போது, தம் மகனுக்கு விலாசமிடப்பட்ட "பிரார்த்தனைக் கடிதம்" ஒன்றை, உயிலாக விட்டுச் சென்றார். அவருடைய குண வடிவத்தின் மற்றொரு பக்கத்தை அதிற் காணலாம். ஒரு தந்தையின் கனிவுள்ளம், தன் மகனுக்குச் சித்திக்க வேண்டும் என்று அவாவும் பண்புகளை, நிரைப் படக் கூறும் "பிரார்த்தனைக் கடிதம்" அது.*

*அதை வாசித்தபோது, மகப் பேறடையக் காத்திருக்கும் ஒரு தந்தையின் மனதில் ஏற்பட்ட அருட்சியிற் பிறந்தது, இக் கவிதை.*

சர்வ வல்லப சக்தி மா தேவி !
யான் உன்னைக் கேட்கும் ஓர் யாசகம் ! தாயே !
மைந்தன் – என் மனையாள் மணிப் பொன் உதரப்
பொந்தினில் உயிர்க்கும் புதல்வன் – மீ துன்
கண் வைத் தீங்கு, யான் காமுறும் வன்மைகள்
அனைத்தும் அடைந் தவன் ஆண்மையன் ஆகு மா
றாக்கெனக் கேட்கிறேன் ! அன்னாய் கேட்பாய் !

தன் பலம் குன்றும் காலையில், உடன் அதை
உன்னி உய்த் துணரும் உறு பலம் உளனாய்;
அச்சம் என் றொரு பேய்க் காட்படும் காலையும்,
தனைத் தான் முகம்கொளும் தைரிய வாணனாய்;
நேரிய முறைமையில் நேரிடும் தோல்விக்கு
வெம்பா மனத்து வீர மிடுக்கனாய்;
வெற்றியிற் பணிவும் மென்மையும் ஓம்பும்
பெற்றிய னாய், மகப் பே றெனக், கருள், அனாய் !

காரிய சித்தியிற் காணத் தருவதாம்
பூரிப் பதனைப், பூர்த்தி யுறா வெறும்
ஆசைக் கனாக்களில் அடைந் துள நிறைவில்
வைகா மனத்தனாய்; வலிமையின் உறையுளாம்
உனை உணர்வோனாய்; அறிவின் உயிர் நிலை,
தனைத் தான் அறியும் தகைமை என் றோரும்
வினைத் திறனாளனாய், விளக் கிடென் மகனை !

வசதியும் சொகுசும் வாய்ந்த சீர்ப் பாதையில்
வழி நடத்தா தவன் வல்லிடர் மல்கிடும்
சோதனைப் பாதையின் துன்பம், தூண்டுதல்,
ஆனவை யிடைப் பட அழைத் தாங் கிட்டு,
புயலிடைத் துணிவுடன் புயம் நிமிர்ந் திருக்கும்
வித்தையில் தேறவும், வென்றிலர் என்றுள
வாழ்க்கைத் தோல்வியர் மாட்டும் கருணை
காட்டும் பண்பினைக் கற்கவும் செய்குவை !

கள்ளமில் இதயமும், கருத்தினில் இலக்கென
உள்ளுவ துயர்ந்ததாய் உள்ளும் சித்தமும்,
கொள்ளுமா றென் அரும் குழவியை வனைகுவை !
கட்டி யாளப் பிறரைக் கருது முன்
தனைத் தான் ஆளத் தக்கனாய்த் திகழவும்,
வரும் எதிர் யுகத்தை வரிக்கும் அதே பொழு
திறந்த காலப் பழைமையை மறக்கிலான்
ஆகவும், அவனை நீ ஆக்குவை அன்னாய் !

இவை எலாம் அவன் பிடிக் கெய்திய பின்னரும்,
கணிப்புற எதனையும் கருதியும் – ஆயினும்,
தனையோ அதீதக் கணிப்புச் செயாமலும் –
ஒழுகு மாறாம் ஒப்புர வான தோர்
களிப்பியற் சுவை அவன் கைப் பட ஒப்புவை !
தாழ்மை அவனிடம் ததும்பப் பொழிகுவை !
உண்மைப் பெரு மனத் துறுவதாம் எளிமை,
உண்மை அறிவினுக் குரிய விரிவுளம்,
உண்மை வீராண்மைக் குயிர் நிகர் பணி வெனும்
யாவும் நிரம்பியோன் ஆக்குவை செல்வனை !

செல்வனுக் கிவற்றை நல்கினை யாயின், ஓர்
வல்ல மானிட மகன் தந்தையே யான் எனும்
தேற்றா வூட்டும் தினைத் துணைத் தெம்பில், "யான்
வாழ நேர்ந்தமை பாழலவே" எனத்
தாழ வேனும் சொலத் தலைப் படுவனே !

★★★

*குறிப்பு:- (Rudyard Kipling) - ருட்யார்ட் கிப்ளிங் என்ற கவிஞனின் "IF" என்ற கவிதையினால் தூண்டப்பட்டு எழுதிய கவிதை.*

# வந்திக்கத் தக்க ஒரு மானிடன்

பக்கத்திருப்போர் பதறி நிலை குலைந்துன்
பக்கம் பழியைப் பராதீனம் செய்கையிலும்

நீயுன் நிதான நிலையில் வழுவாதா –
னாயுய்த்திருப்பாயேல்; அயலார் அனைவரும் உன்

மீதிலே சந்தேகம் மீதூர்ந் தொதுங்குகிற
போதில் உனக்குள் புரையில் உறுதியுடன்

அன்னார் செயல்பற்றி அரற்றாதிருப்பாயேல்;
பன்னாள் பொறுத்துப் பொறுமையுடன் காத்திருக்கும்

வன்மை பெறுவாயேல், வார்த்தையில் நீ பொய்யின்றி
உன்னைப் பிறர் எவரும் உண்மைக்கு மாறாக

மாட்டுவது பற்றி மயங்காதிருப்பாயேல்,
மாற்றார் வெறுப்பில் மசியாது, நீ மட்டும்

குரோத மனத்தனாய்க் குமையாதிருப் பாயேல்;
விரோதமிலா நல்லவனாய் வல்லவனாய்க் கூடுதலாய்த்

தோற்றமளியாது சுமுகம் உறுவாயேல்
தேற்றக் கனவில் திளைத்த தற்குக், கொத்தடிமை

ஆகாமலே அளவாய் ஆசைக் கனவுகளும்
நீ காணுவாயேல், நினைப்பே, முழு முடிவாய்க்,

கொள்ளாமற் சிந்தித்தும் கொள்ளத் தெரிவாயேல்,
தொல்லையையும் வெற்றியையும் தோதாய்க் கருதிஇரு

கள்ளங்களையும் சமனாய் மதிப்பாயேல்,
விள்ளும் உனதுரையை வேறாய்த் திரித்துரைப்பார்

செய்கையினைத் தாங்குகிற சிந்தை பெறுவாயேல்,
உய்யும் படிக்குன் உயிர் கொடுத்துப் பாடுபட்ட

நல்லவைகள் நாசமுறல் கண்டும், நலியாது
மெல்லத் துணிந்தவையை மீண்டும் உயிர்ப்பிக்க

நாடுவையேல், உன்னுடைய நாள் வரையாம் சாதனைகள்
மேடுறுத்தி ஓர் கணத்தில் விட்டெறிந்து சூதிலவை

தோற்றுத் திரும்பத் தொடங்கத் துணிவடைந்து
தோற்றவையைப் பற்றி ஒரு சொல்லும் உரையாத

தேற்றரவு கொள்வாயேல், தேடி வரும் சந்தர்ப்பப்
பாட்டையில் உன் உள்ளம் படிய நெருக்கிடுமோர்

ஆற்றல் உடையாயேல், "அசையாதே கைப் பற்" றென்
றூற்றெடுத் துன்னுள்ளே ஒலிக்கும் குரலன்றி

வேறேதும் இல்லாத வேளையிலும் நம்பிக்கை
மாறாதிருப்பாயேல், மனிதக் குழுக்களுடன்

பேசிப் பழகிடினும் பிறழாதிருப்பாயேல்
ராசருடன் சேர்ந்தாலும் சாதாரணங்களுடன்

பற்று விட்டுப் போகாப் பழக்கமுடையாயேல்
உற்ற பகை, நட்பிரண்டும் உன்னை வருத்தாத

நெஞ்சம் பெறுவாயேல், நீணிலத்தார் தம்மில் உனை
விஞ்சாதளவோ டோர் விகுதியாய்க் கொள்மாறு

நீயிருக்க வல்லாயேல், நிமிடத்திலே செறிந்து
போயிருக்கும் வினாடிப் பொழுதாம் அறுபதிலும்

ஓடி உழைத்தே உறுபயனைக் கொள்வாயேல்
கேடில் உலகும் அதில் கிடைக்கும் சிறப்பனைத்தும்

உந்தனுக்கே சொந்தமென உணராய் மகனே ! நீ
வந்திக்கத்தக்க வொரு மானிடனுமாவாயே !

## வாழ்க்கைக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | சூசைப்பிள்ளை மரியதாசன் செல்வராசன். |
| பிறந்ததேதி | : | 25 – 01 – 1933. |
| தந்தை | : | சூசைப்பிள்ளை. |
| தாய் | : | அன்னம்மா. |
| சொந்தஊர் | : | சில்லாலை. |
| பாட்டனார் | : | மதுரகவி சுபவாக்கியம் பிள்ளை. |
| படித்த பாடசாலைகள் | : | இளவாலை சென். ஹென்ரீஸ்,<br>காலலூர் சென். அந்தனிஸ்,<br>யாழ். சென். பற்றிக்ஸ். |
| கௌரவ விருதுகள் | : | ◆ பல்கலை வேந்தர் *(யாழ் – சில்லாலை மக்கள்)*<br>*(புலவர் சிவன் கருணாலய பாண்டியனார் சூட்டியது)*<br>◆ இலக்கியச் செம்மல் *(இந்து கலாசார அமைச்சு).*<br>◆ பளிங்குச் சொற்பாவலர்.*(கொழும்பு)*<br>Bunka Award – *(யப்பானிய விருது).)* |
| கவிதைப் புனைபெயர்கள் | : | தான்தோன்றிக்கவிராயர், மௌனா. |
| ஏனைய புனை பெயர்கள் | : | சேகரன், செல்வராஜ், 'சேனா', மரியதாஸ், சி.செ., சுசீலா, புத்தகப்பிரியன், அரசியல் மாணவன் வான்மதி, நீலவேணி. |
| பங்காற்றிய துறைகள் | : | கவிதை, இசைப்பாடல், நாட்டுக்கூத்து, பத்திரிகைத்துறை, விமர்சனம், புனைகதை, |

ஒலிபரப்பாளர், மேடை – வானொலி – திரைப்பட தொலைக்காட்சி எழுத்தாளர், நடிகர், பாடகர், தொடர்புசாதன ஆலோசகர், விளம்பரத் துறையாளர் *(தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில்).*

| | | |
|---|---|---|
| தெரிந்த மொழிகள் | : | இலத்தீன், ஆங்கிலம், தமிழ், சிங்களம். |
| கூத்துகள் (மேடையில்) | : | ஞானசவுந்தரி, சங்கிலியன், பண்டாரவன்னியன். |
| மேடை நாடகங்கள் | : | மதியூகமங்கை *(போஷியா)*, மதமாற்றம், திறந்தகல்லறை, Bye Bye Raju, Never Mind Silva |
| திரைப்படங்கள் | : | கோமாளிகள் – *(தமிழ்),*<br>ஆதர கதாவ – *(சிங்களம்/தமிழ்)*<br>*(அமெரி)* தி அட்வென்சேர்ஸ் ஒஃப் டெனசி பஃக் *(பிரிட்டன்)* த லாஸ்ட் வைஸ் றோய் லோர்ட் மவுண்ட் பேவர்ட்டன். *(அவுஸ்)* த ஷடோ ஒஃ த கோப்ரா *(கனடா)* கணேஷ் |
| குறுந்திரைப்படம் | : | பிரதி எழுதித் தயாரித்தவை : ஷெல்நிறுவனத்தில் 27 உக்குமதிகமான விளம்பரப்பிரதியும் குறுந்–திரைப்படமும், மகாராணி விஜயம் – *(முழுக் கவிதையில்)* கமம் – *(அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் சார்பில் யாழ் – விவசாயம் பற்றியது.)*<br>பேர்லின் படவிழாவில் பாராட்டுப் பத்திரம் பெற்றது. |
| திரைப்படச் சுவடி | : | "தணியாத தாகம்" உலகமொழிகளில் 3 ஆவதாகவும் தமிழில் முதலாவதாகவும் எழுதப்பட்ட திரைப்படச்சுவடி. |

பதவி வகித்த சங்கங்கள் :

(1) OCIC, FCJAC - நடுவர் சபைகளில் அங்கம் வகித்தமை.

(2) இலங்ககையில் முதலாவது அமைக்கப்பட்ட திரைப்படச் சங்கத்தைச் சிங்களக் கலைஞரோடு இணைந்து தாபித்து அங்கம் வகித்த முதற் தமிழர்.

(3) விமர்சன/ பத்திரிகையாளர் சங்கத்தில் அங்கத்துவம்

50 இன் பிற்பகுதியில் பம்பாய்த் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொண்டார். 1 9 8 8 ல் : இந்தியா – போபால் நகரில் "ஆசியக்கவிதை விழா"வில் தமிழ் கூறும் நல்லுலகின் ஒரே தமிழ்ப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டமை.

பொதுசன தொடர்புத்துறை – கவிதை போன்ற துறைகளில் அவை சார்ந்த நிறுவனங்களில் விரிவுரையாளராகப் பங்குபற்றியமை. 1994இல் சென்னையில் நடைபெற்ற B.B.C. கவிதைப் போட்டி நடுவராகக் கலந்துகொண்டமை.

வெளிவந்த நூல்கள் :

1. ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி.
2. தணியாத தாகம் – திரைப்படச் சுவடி.
3. ஞானசவுந்தரி (கூத்துப் பிரதித்தொகுப்பு).
4. ஊரடங்கப் பாடல்கள் (கவிதை).
5. ரோமியோ & ஜுலியற்.
6. தலைவர்கள் வாழ்க மாதோ (கவிதை).

படவிளக்கம்



பெற்றோர் : சூசைப்பிள்ளை – அன்னம்மா



பள்ளிப்பருவ – விளையும்பயிர்.


ஷேக்ஸ்பியரின் மேர்சன்ட் ஒப் வெனிஸ் நாடகத்தைத் தமிழில் பதின் ஐந்தாம் வயதிலேயே மொழிபெயர்த்து (மதியூக மங்கை) என்ற பெயருடன் கல்லூரியில் மேடையேற்றியபோது 'போஷியா' வேடத்தில்.



1950 களில் சில்லையூர் தினகரனிலும் அ. ந. கந்தசாமி சுதந்திரனிலும் பணியாற்றிய காலத்தில்.



வானொலிக் காலத்துறைச் சகபாடிகள் இ.வ: சில்லையூர், கே.எஸ். நடராஜன்,கா. சிவத்தம்பி, 'சானா' சண்முகநாதன் ஆகியோர்.



பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள் பொ.ராமநாதன், எம்.எஸ்.எம். இக்பால் ஆகியோருடன்.



பனைநாடகம் என்ற பா நாடகத்தில் சிவபெருமான் வேடத்தில் சில்லையூர், செல்வி. பரிமளம்.



அ. ந. க. வின் 'மதமாற்றம்' நாடகத்தில் ஆனந்தி சூரியப்பிரகாசம், எஸ். பத்மநாதன் ஆகியோருடன்.



'பல்கலை வேந்தர்' என்ற பட்டமும் கௌரவமும், புலவர் பாண்டியனாரின் கையால் பெறுகிறார். இ. முருகையன் நடுவில் நிற்கிறார்.




இலக்கிய கலை நண்பர்களுடன் இ.வ. : எஸ். பரராஜ சிங்கம், சில்லையூர், ஜி. பிரதாபன், எஸ். கனகரத்தினம், சோமகாந்தன்.



சில்லையூர் செல்வராசன், காவலூர் ராசதுரை.



பம்பாய் எழுத்தாளர் மாநாட்டில் சில்லையூர் பேசுகிறார். அமர்ந்திருப்போர் கி.வா.ஜ. அழ. வள்ளியப்பா.



சில்லையூர் பிள்ளைகள் திலீபன், பாஸ்கரன், முகுந்தன். யாழினி தாயார் ஜெரல்டின் ஜெஸியுடன்.



நாட்டுக் கூத்துச் சக்கரவத்தி பூந்தாரன் யோசேப்புடன் 'சங்கிலியன்' நாட்டுக்கூத்தில். பாலசங்கிலியன் மகன் திலீபன் செல்வராசன், நடுச் 'சங்கிலியன்' சில்லையூர், பிற்கூத்துச் சங்கிலியன் 'பூந்தாரன்'.




கமலனியை மணந்தபின், தம்பதிகளாய் இருவரும் திரைப்படப் பிரவேசம் படம்: கோமாளிகள்.




இந்துக் கலாசார அமைச்சர் பி.பி. தேவராஜ் 'இலக்கியச்செம்மல்' பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தும் காட்சி.



கொழும்புக் கலைச் சங்கத்தின் சார்பில் அறிஞர் சி. சூரியகுமாரன் பல்கலைவேந்தருக்குக் கௌரவிப்பு வழங்குகிறார்.





ஹொலிவுட் திரைப்பட இயக்குநர் 'டேவிட் கீத்' அவர்களுடன் சில்லையூர்.




பிரபல ஹொலிவுட் நடிகர் ஜாக் நிக்கல்சன்னுடன்.



Adventures of Tennesy Buck என்ற ஹொலிவுட் திலைப் படத்தில் நடித்தபோது.



ஆசிய கவிதை மாநாட்டுக்களம் போபால் – பாரத் பவன்.




ஆசியக் கவிதை மாநாட்டு இலங்கைப் பிரதிநிதிகள் சில்லையூர் செல்வராசன் டபிள்யூ. பி. அபயசிங்க.



ஆசியக் கவிதை மாநாட்டில் பிற கவிஞர்களுடன் இ. வ.: 'சைபிரஸ்' நாட்டைச் சேர்ந்த நாஸா பட்டபியோ கிறிஸ்தோபிடஸ், யுனைட்டட் அரப் எமிரேட்ஸ் – டாபியா கமீஸ்.



நேபாளப் பெண் கவிஞர் – பணிரா கிரியுடன்.




சிலைநிறுவிய அகில இலங்கைக் கண்ணதாசன் மன்றத் தலைவர் கங்கை வேணியன், தொழிலதிபர் செல்வராஜா கனத்தைப் பரிபாலகர் சானகபெரோ, சிற்பம் செதுக்கிய புல்லுமலை நல்லரத்தினம் முன்னாள் மேயர் கே. கணேசலிங்கம் கமலினி செல்வராசன் மகன் அதிசயன்.



பி. பி. சி. தமிழோசைக் கவிதைப் போட்டி நடுவர் குழுவில்:
இ. வ. : சிவகுமார், கவிஞர் வைரமுத்து, எழுத்தாளர். திருமதி. சிவசங்கரி, சில்லையூர்,
மனசை. ப. கீரன்.



யப்பானிய அரசின் 'புஃங்கா' (BUNKA) விருது விழா, : விருது பெற்றோர் இ. வ. சில்லையூர், நடனக்கலைஞர் சித்ரசேன அவர்களின் மகள் உபேக்கா, இசைக்கலைஞர் பிரேமசிரி ஹேமதாஸ, மற்றும் கட்டிடக்கலைஞர் சூரசேன.



சில்லையூர் மறைவுக்குச் சில நாள் முன்னே கவிஞரும் நண்பருமான எம்.எச்.எம் அஷ்ரப் அளித்த விருந்தில் தன் கடைக்குட்டி மகன் அதிசயன் அஷ்ரப் அணைப்பில் இருப்பதை ரசித்தபடி சில்லையூர், நடுவே கமலினி.



பொரளை கனத்தை மயானத்தில் சில்லையூராருக்கு அமைக்கப்பட்ட சிற்பம்.

# பாவலன்
# காட்டும் பாதை

என்னுடைய காலடியில்
இவ்வுலகம் எழும்பட்டும் !
என்னுடைய காற் சுவட்டில்
இவ்வுலகம் நடக்கட்டும் !
இருள் வெட்டிக் காடுவெட்டி
இகத்துக்கு நான் காட்டும்
அருட்டாத ஒற்றடியில்
அகிலம் நடக்கட்டும் !

- சில்லையூர் செல்வராசன்
(23.07.87)

Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo 13,